விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 27 ஞாயிற்றுக்கிழமை (11.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

### பல கட்டுப்பாடுகளில் தளர்வு

## புதிய சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கை வெளியீடு

- மாகாணங்களுக்கான பயணத் தடை தொடர்ந்து நீடிப்பு.
- திருமண வைபவங்களுக்கு அனுமதி. மண்டபங்களில் 150க்கும் குறைந்த அளவில் நபர்களுக்கு அனுமதி.
- வழிபாட்டுத் தலங்களை திறக்க அனுமதி.

நாட்டில் புதிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் அடங்கிய அடுத்த 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும் சுற்றறிக்கை நேற்றுக் காலை தொடக்கம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

புதிய தளர்வுகளின்படி

❖ திருமண வைபவங்களுக்கு அனுமதி. திருமண மண்டபங்களில் 25 சதவீதம் அல்லது 150க்கும் குறைந்த அளவில் நபர்களுக்கு அனுமதி.

❖ வழிபாட்டு தலங்கள் திறக்க 15

### காணாமலாக்கப்பட்ட மகனை

## 26 ஆண்டுகளாக தேடியலைந்த தந்தை ஒருவர் மரணம்



(கிளிநொச்சி)

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 26 ஆண்டுகளாக தேடியலைந்த தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் 11ஆம் 15

## வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக

### தெய்வேந்திரன் தெரிவு




(யாழ்ப்பாணம்)

நீண்ட இழுபறியின் பின்னர் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக க.தெய்வேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ள 15

### தனிமைப்படுத்த பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை

# கைது செய்தாலும் போராட்டம் தொடரும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை



(கொழும்பு)

உரிமைகளுக்காக போராடுபவர்களை கைது செய்வதற்கோ தனிமைப்படுத்துவதற்கோ பொலிஸாருக்கு எந்த அதிகாரமும் இல்லை. மேலும் கைது செய்தாலும் போராட்டங்களை தொடர்ந்து மேற்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### கொரோனா

## 33 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 33 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள் 15

### கொரோனா

## +1,515

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,515 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. 15

## மன்னார் பாலியாற்றில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

மன்னார் - பாலியாறு சின்னப்பாலத்தடியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளைஞன் ஒருவர் உயிரி 15

### எழுமாற்றுப் பரிசோதனையில்

## பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் 23 பேருக்கு கொரோனா

### குறித்த பகுதி முடக்கப்பட்டது

(பருத்தித்துறை)

யாழ்.பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 60 பேருக்கு நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 23 15

## தனிமைப்படுத்தல் முகாமிலும் போராட்டம்



(கொழும்பு)

கொத்தலாவல சட்டத்தை உடன் கிழித்தெறியுமாறு கோரி கேப்பாபுலவு விமானப் படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத் 15

### 'நாடு திறந்த பின்னர்'

## எந்த நாடகத்தையும் நடத்துங்கள் – நாமல்



(கொழும்பு)

"நாடு திறந்த பிறகு எந்த நாடகத்தை 15

### சீரற்ற காலநிலை

## இரண்டு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடற்படையினரின் தேவைக்காக வட்டுவாகலில் 617 ஏக்கர் காணி அபகரிக்க திட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை அங்கு நிலைகொண்டிருக்கும் கடற்படைக்கு சுவீகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானியின் பிரகாரம் கரைத்துறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுவாகல் மற்றும் வெள்ளாமுள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள 271.62 ஹெக்டெயர் விஸ்தீரணமுடைய காணிகையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் பிரதிநிதிகள் போராட்டத்தினை நடத்தியதை தொடர்ந்து நில அளவீட்டுப் பணிகள் கைவிடப்பட்டுள்ளதுடன் நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டு பணிகளுக்கு இடையூறு வழங்கிய முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் க்டந்த 08.07.2021 அன்று திகதியிடப்பட்டு கடிதம் ஒன்று முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவனால் காணி உரிமையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 450) 05 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம் நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியினை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நில அளவை செய்வதற்காக 2021 .07. 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வருகைதந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விபரங்களையும் இனங்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலும் தங்களினது காணியினை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்துவரும்படியும் கேட்டுக்கொள்கிறேன் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03.281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஊரெழுவில் விபத்து
# கர்ப்பவதி உட்பட இரு பெண்கள் காயம்




(யாழ்ப்பாணம்)

யாழ். ஊரெழு - கரந்தன் வீதியில் நேற்று காலை 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஞானவைரவர் வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் வைத்தியசாலைக்கு சென்று வீடு திரும்பிய பெண்கள் கரந்தன் - ஊரெழு பிரதான வீதியில் திடீரென ஏறிய போது எதிரே வந்த ஹன்ரர் வாகனம் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூன்று பெண்களில் ஒரு பெண் 8 மாத கர்ப்பவதி என்பதுடன் 2 வயது சிறுமியும் அவர்களுடன் பயணித்துள்ளார். காயமடைந்த இரண்டு பெண்களும் உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். 2 வயது சிறுமி காயங்களின்றி தப்பியுள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-03)

தேவை
நல்ல நிலையிலுள்ள Pioneer, Technics, Kenwood, Sansui (Original Japan only) Amplifier, Speakers, Equalizer (Sound system) தேவை. (7181)
077 875 7860

கடை வாடகைக்கு
ஐந்து சந்தியிலிருந்து 100 மீற்றர் மானிப்பாய் வீதியில்
நீளம் 37 அடி
அகலம் 20 அடி
(7174)
077 617 6413

## மரண அறிவித்தல்



### வைரவநாதன் யசோதரன்

விவசாய தொழில்நுட்ப உதவியாளர், விவசாயத் திணைக்களம் – மன்னார்
கணபதி அறக்கட்டளையின் மன்னார் மாவட்ட பொறுப்பாளரும் அமைப்பின் செயற்பாட்டாளரும்

வியாபாரிமூலை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதன் யசோதரன் நேற்று முன்தினம் (09.07.2021) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் வைரவநாதன் - செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும் பிரகாசினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - யாழ். மாநகர சபை), நிலானி (உற்பத்தித்திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தென்மராட்சி), கஜந்தன் (கணக்காய்வு பரீட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம் - திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீசுகந்தன் ( அவுஸ்திரேலியா), ஸ்ரீகாந்தன் (வர்த்தகர் - சாவகச்சேரி), அபிராமி (ஆசிரியர் - யா/ அம்பன் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தனுசிகன், நிஷ்மிகா ஆகியோரின் அன்பு மாமனும் அஷ்வின், கஷ்னி ஆகியோரின் அன்பு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.07.2021) ஞாயிற்றுக்கிமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2327)

வியாபாரிமூலை, பருத்தித்துறை.

கஜந்தன் (அண்ணா) 077 360 4829
ஸ்ரீகாந்தன் (அத்தான்) 077 869 1801
லிங்கேஸ் 077 353 5218

தகவல்- குடும்பத்தினர்.

## நான்காண்டு நினைவில்...



மலர்வு 1933.12.15

உதிர்வு 2017.06.25

அமரர்
### முத்தன் தம்பிப்பிள்ளை

(ஓய்வுநிலை உதவி அரசாங்க அதிபர்)

திதி : 2021.07.11

நான்காண்டு சென்றதுவே நல்லவரே உம் நினைவில்
நற்றவமாய் இருந்த எங்கள் நல் முத்தே!
நாட்கள் நகர்ந்தாலும் நின் நினைவு அகலாது
நாம் வாழும் காலம்வரை நெஞ்சில் நிறைந்திருப்பீா
நல்ல ஆளுமையுடன் நெறிப்படுத்திநீா எம்மை
நற்பலாபலன்கள் நம்மைச் சேர வைத்த காரணனே..

“இரத்தின வாசா”
அல்வாய் வடமேற்கு.


(C-2325)

என்றும் உம் நினைவுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சர்வாதிகார ஆட்சி தலைதூக்கியுள்ளது

## –பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்–



(கொழும்பு)

**நிர்வாக ரீதியான விடயங்களில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு இலங்கையில் சர்வாதிகார ஆட்சிக்கான சகல தயார்ப்படுத்தல்களும் முழுமையடைந்துள்ளதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பு சுதந்திர சதுக்கப் பகுதியில் நடைபெற்ற அரசின் அடக்குமுறைகளுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்று நடைபெறும்போது வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இடையில் எழுத்தில் அடங்காத உடன்பாடு ஒன்று ஏட்டப்படுகின்றது. நாம் உங்களுக்கு வாக்களித்து நீங்கள் வென்றால் எமது பிரச்சினைகளைப் பேச வேண்டும்.

அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். அதிகாரம் கிடைத்த பின்னர் எம்மை விரட்டக் கூடாது என வாக்காளர் வேட்பாளர்களுடன் உடன்பாடு செய்கின்றனர்.

வேட்பாளர்களும் இந்த எழுத்தில் அடங்காத உடன்பாட்டை ஏற்றுக்கொண்டு, நாம் வென்றால் உங்கள் பிரச்சினைகளை தீர்ப்போம், சுயநலம் கருதிச் செயற்பட மாட்டோம். உங்களுடன் ஒன்றாக நிற்போம் என்று கூறுகின்றனர்.

இதுதான் ஜனநாயகத்தின் தாற்பரியம். ஆனால், இவ்வாறு வாக்காளர்களுக்கு வாக்குறுதி கொடுத்து வென்ற பின்னர் மக்களை மறந்து, அவர்களுடனான உடன்பாடுகளை மீறி ஜனநாயகத்துக்கு முரணாகச் செயற்படத் தொடங்குகின்றனர்.

இதனால் மக்கள் இந்த அரசியல்வாதிகளுடனான தமது உடன்பாட்டை எடுத்துக்காட்ட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனை எடுத்துக் காட்ட முற்படும் போதே ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் கைது என ஜனநாயகத்துக்கு எதிரான சர்வாதிகாரம் தலைதூக்குகின்றது.

தற்போது நிர்வாகம் சம்பந்தமான சகல விடயங்களிலும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதன் மூலம் சர்வாதிகாரம் வித்திடப்படுகின்றது.

இலங்கையில் சர்வாதிகார ஆட்சிக்கான சகல தயார்படுத்தல்களும் முழுமையடைந்துள்ளன.

இவ்வாறான நிலையில் தான் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மூலம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

இவற்றையும் சர்வாதிகாரம் மூலம் அடக்கவே ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்த தனிமைப்படுத்தல் சட்டம்

## –சர்வதேச மன்னிப்புச்சபை சாடல்–

(கொழும்பு)

இலங்கையில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டம் பிரயோகிக்கப்பட்டிருப்பதானது, கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவியாக அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலைப் பயன்படுத்துவதை வெளிப்படுத்தியிருக்கிறது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், பேரணிகள் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்படுவதாக கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் தலைமையகத்தினால் அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கடந்த புதன்கிழமையிலிருந்து பலதரப்பட்ட கோரிக்கைகள் மற்றும் உரிமைகளுக்காகப் போராடுவோரைக் கைது செய்யும் நடவடிக்கைகளைப் பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக கடந்த வியாழக்கிழமை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் தூக்கிச்சென்று பொலிஸ் வண்டிகளில் ஏற்றும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டன.

அதுமாத்திரமன்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுதல் தடை செய்யப்பட்டுள்ளமையானது, பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தையும் அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை விமர்சிக்கும் சுதந்திரத்தையும் பறிப்பதாக அமையும் என்று பல்வேறு தரப்பினராலும் கண்டனங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச மன்னிப்புச்சபையினால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்யப்பட்டிருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை வெளியிடுவதாக இருந்தால், எந்தவொரு தரப்பினரையும் அடக்குமுறைக்கு உட்படுத்தாத வகையில் அனைவருக்கும் பொதுவானதாக அவ்வழி காட்டல்களை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும் என்று மன்னிப்புச் சபை அதன் டுவிட்டர் பதிவில் வலியுறுத்தியிருக்கின்றது. (நி-5)

# 20 அமைச்சர்களுக்கு ஆப்பு புதியவர்கள் களமிறக்கம்?

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது பிரதான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச் சர்கள் 20 பேர் ஓரங்கட்டப்பட வுள்ளதாக தகவல்கள் வெளி யாகியிருக்கின்றன. அவர்கள் யார் என்பது பற் றிய தகவல் இதுவரை வெளியாகவில்லை. இருப்பினும் மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய சந்தர்ப்பத்தை கைநழுவவிட்டு மக்கள் மத்தியில் எதிர்ப்புக்களை சம்பாதித் துக் கொண்ட அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர் களே இவ்வாறு பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)


2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1927 – 07 – 10
மறைவு 2019 – 07 – 04



அமரர்.
சுப்பு மாரிமுத்து
திதி: 11.07.2021

தோற்றம் 1940 – 01 – 01
மறைவு 2019 – 08 – 12



அமரர்.திருமதி மாரிமுத்து
தங்கச்சியம்மா
திதி: 21.07.2021

நீங்களின்றிய இரண்டு ஆண்டு இரண்டு யுகமானது
உங்களுடன் வாழ்ந்த நாட்கள் மட்டுமே எங்களின் நிம்மதி
அன்பான உங்கள் முகத்தை இனி எப்போது காண்போம் நாம்?

குடும்பத்தினர்.

(7176)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் யாருக்கு 'லட்டு'

## அரங்கமே அதிர இத்தாலி - இங்கிலாந்து
## யூரோ பைனலில் முட்டி மோதல்



இங்கிலாந்து அணித் தலைவர் ஹறி கேன்





இத்தாலி அணித் தலைவர் சியலினி

யூரோ கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டி இன்று லண்டனில் நடக்கிறது. இங்கிலாந்து - இத்தாலி அணிகள் கிண்ணம் வெல்லும் பரீட்சையில் போட்டி போடுகின்றன.

ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ண கால்பந்து தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இன்று லண்டன் வெம்ளே மைதானத்தில் நடக்கும் இறுதிப் போட்டியில், உலகத்தரவரிசையில் 4ஆவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து அணி தனது சொந்த மண்ணில், 7ஆவது இடத்திலுள்ள இத்தாலியை சந்திக்க உள்ளது.

இங்கிலாந்து அணி 1966 இல் உலக கிண்ணம் வென்ற பின் 55 ஆண்டுகளாக இது வரை முக்கிய தொடர் எதிலும் சாதித்தது இல்லை. தற்போது தான் முதன் முறையாக யூரோ கிண்ண பைனலுக்கு முன்னேறியது.

இத்தொடரில் இது வரை 6 போட்டிகளில் ஒரு கோல் மட்டும் தான் எதிரணிக்கு விட்டுக் கொடுத்தது. ஆனால் கடந்த 1977க்குப் பின் இத்தாலியை இங்கிலாந்து இதுவரை வென்றது (3 தோல்வி, 'சமன்') இல்லை.

இருப்பினும் அணித் தலைவர் ஹறி கேன், 'நொக் அவுட்' போட்டிகளில் இதுவரை 4 கோல் அடித்துள்ளார். ரகீம் ஸ்டெர்லிங் தன் பங்கிற்கு மூன்று கோல் அடித்துள்ளார். கோல் கணக்கிற்கு இவர்கள் இருவரை மட்டும் நம்பியிருக்க வேண்டியது இங்கிலாந்து பலவீனம் தான்.

அதேநேரம் கடைசியாக மோதிய 15 போட்டிகளில் 13இல் வென்ற இங்கிலாந்து, முதல் கிண்ணம் வெல்லும் நம்பிக்கையுடன் காணப்படுகிறது.

**மீண்டும் வெல்லுமா?**

இத்தாலி அணி 1968இல் யூரோ கிண்ணம் வென்றது. இதன் பின் 2000, 2012 என இரு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதும் கிண்ணம் வசம் ஆகவில்லை. தற்போது 6 உலக கிண்ணம், 4 யூரோ என 10ஆவது முறையாக முக்கிய தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இத்தொடரில் இத்தாலி அணி 'ரவுண்ட் - 16', அரையிறுதியில் கூடுதல் நேரத்தில் வென்றது. தவிர 2006 உலக கிண்ணத் தொடரின் பைனலில் 'பெனால்டி ஷூட் அவுட்' சென்று கிண்ணம் வென்றது. இது போல மீண்டும் சாதிக்க முயற்சிக்கலாம்.

முக்கிய தொடர்களில் அதிகபட்சம் 12 கோல் அடித்த இத்தாலி இன்று மீண்டும் கோல் அடித்தால் புதிய சாதனை படைக்கலாம். தவிர சிசியா, இம்மொபைல், இன்சைன், லோகடெல்லி, பெஸ்சினா என ஐந்து வீரர்கள் தலா 2 கோல் அடித்துள்ளனர். தலைவர் சியலினி, தற்காப்பு வீரர் பொனூச்சி என பலரும் அணிக்கு கொடுப்பது கூடுதல் பலம்.

இங்கிலாந்து, இத்தாலி அணிகள் சர்வதேச அரங்கில் 27 போட்டிகளில் மோதின. இதில் இரு அணிகளும் தலா 8 போட்டிகளில் வெற்றி பெற்றன. 11 போட்டிகள் 'சமன்' ஆகின.

# இங்கிலாந்துக்கே யூரோ கிண்ணம்

## பாலைவன கீரி கணிப்பு



இங்கிலாந்து அணி யூரோ கிண்ணத்தை கைப்பற்றும் என பாலைவன கீரிகள் கணித்துள்ளன.

ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ண கால்பந்து தொடர் தற்போது நடக்கிறது.

நாளை லண்டன் வெம்ளே மைதானத்தில் நடக்கவுள்ள பைனலில், இங்கிலாந்து அணி, இத்தாலியை சந்திக்க உள்ளது.

உலக கிண்ணத் தொடரில் 1966இல் கோப்பை வென்றது இங்கிலாந்து. இதன் பின் யூரோ உள்ளிட்ட எந்த பெரிய தொடரிலும் சாதிக்கவில்லை.

தற்போது முதன் முறையாக யூரோ கால்பந்து பைனலுக்கு சென்றுள்ளது. சொந்தமண்ணில் சாதிக்க காத்திருக்கிறது. இத்தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்கும் போட்டிகளின் முடிவுகளை லண்டன், 'டிரசில்லாஸ் பார்க்கில்' உள்ள பாலைவன கீரிகள் கணித்து வருகின்றன.

டென்மார்க் அணிக்கு எதிரான அரையிறுதியில் இங்கிலாந்து தான் வெல்லும் என சரியாக கணித்தது. இன்று இத்தாலி அணிக்கு எதிரான பைனல் குறித்து கணிக்கப்பட்டது.

இதன்படி இரு பிளாஸ்டிக் கூடைகளில் உணவு வைக்கப்பட்டன. விசில் ஊதப்பட்டதும், ராஸ், ராட்சல், டாமு, ஜோயல், மோனிகாவுடன், புதிதாக வந்த ஹாரி கேன், ஸ்டெர்லிங் என பெயரிடப்பட்ட 'கீரிகள்' கூட்டம் அங்கு வந்தன.

டாமு, ஜோயே என்ற பெயருடைய இரு கீரிகள், இங்கிலாந்து கொடியுடன் கூடிய கூடைக்குள் நுழைந்தன.

உடன் வந்த மற்ற கீரிகள் கூடையை கவிழ்த்து உணவுகளை உண்டன. இத்தாலி கூடைப் பக்கம் அவை திரும்பிக் கூட பார்க்கவில்லை. மற்றொரு முறை இங்கிலாந்து கொடியை கீழே தள்ளி, வெற்றியை கணித்தன.

# பைனலை எட்டிப் பிடித்தார் ஜோகோவிச்

## பெரேட்டினியுடன் இன்று மோதல்



அரையிறுதி ஆட்டத்தின்போது நோவாக் ஜோகோவிச்...

விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு பைனலுக்கு செர்பியாவின் ஜோகோவிச், இத்தாலியின் பெரேட்டினி முன்னேறினர்.

லண்டனில், விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் நடக்கிறது. இதன் ஆண் கள் ஒற்றை யர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-1' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 12ஆவது இடத்தில் உள்ள கனடாவின் டெனிஸ் ஷபோவலோவ் மோதினர்.

'டை பிரேக்கர்' வரை நீடித்த முதல் செட்டை 7-6 எனக் கைப்பற்றிய 'நடப்பு சம்பியன்' ஜோகோவிச், அடுத்த இரு செட்களை 7-5, 7-5 என போராடி தன்வசப்படுத்தினார். இரண்டு மணி நேரம், 44 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஜோகோவிச் 7-6, 7-5, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, விம்பிள்டனில் 7ஆவது முறையாக பைனலுக்குள் நுழைந்தார்.

**பெரேட்டினி அபாரம்:**

மற்றொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் உலகின் 'நம்பர்-9' இத்தாலியின் மேட்டியோ பெரேட் டினி, 18ஆவது இடத்தில் உள்ள போலந்தின் ஹூபர்ட் ஹர்காஸ் மோதினர்.

முதல் செட்டை 6-3 எனக் கைப்பற்றிய பெரேட்டினி, 2ஆவது செட்டை 6-0 என மிகச் சுலபமாக தன்வசப்படுத்தினார். 'டை பிரேக்கர்' வரை நீடித்த 3ஆவது செட்டில் எழுச்சி கண்ட ஹர்காஸ், 7-6 என வென்றார். நான்காவது செட்டில் சுதாரித்துக் கொண்ட பெரேட்டினி, 6-4 என கைப்பற்றினார்.

இரண்டு மணி நேரம், 36 நிமிடம் நீடித்த போட்டியில் பெரேட்டினி 6-3, 6-0, 6-7, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று முதன்முறையாக பைனலுக்குள் நுழைந்தார்.



இத்தாலியின் பெரேட்டினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் கோரிக்கையை அரசு நிறைவேற்றித் தரவேண்டும்



## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு மக்களின் வீட்டுத்திட்ட கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். மாறாக இதனை அரசியலாக்கி அவர்களை ஜெனிவாவுக்கு தள்ளிவிடக்கூடாது.**

வசதி குறைந்த மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கிலேயே வீடமைப்பு அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டது என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், வசதி குறைந்த மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கிலே 1979இல் வீடமைப்பு அதிகாரசபை அமைக்கப்பட்டது. நாட்டில் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களாக இருந்தாலும் அவர்கள் யார், எந்த இனம், கட்சி என பார்க்காமலே இந்த துறையை மேற்கொள்ளவேண்டும். அந்த வகையில் வடக்கில் வீடமைப்பு திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பது, யுத்தத்தால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களும் அநாதரவான குடும்பங்களுமாகும்.

அங்கு கட்டப்பட்ட தங்களின் வீடுகள் பூரணப்படுத்தப்படாமல் இருப்பதால், அதனைப் பூரணப்படுத்தி தர வேண்டும். அதற்காக வழங்கப்பட்டுவந்த அவர்களுக்கான கடன் கொடுப்பனவு வசதிகளை அரசாங்கம் நிறுத்தியிருக்கின்றது. அதனை வழங்க வேண்டும் என்பது அவர்களின் நியாயமான கோரிக்கையாகும்.

மேலும் இந்த மக்களின் நியாயமான கோரிக்கைகளை அந்த மக்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் முன்வைக்கின்றபோது, அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாறாக குறுகிய அரசியலுக்காக இன, மத, அரசியல் வேறுபாடுகளைக்காட்டி, அவர்களை ஜெனிவாவுக்கு தள்ளிவிடக்கூடாது, நாங்கள் அனைவரும் ஒரே குடும்பம், இலங்கையர்கள் என்றே பார்க்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் எமது நாட்டை முன்னுக்கு கொண்டுசெல்ல முடியாது.

அத்துடன் சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக இருந்து வடக்கில் 5 மாவட்டங்களில் 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க 480 முன்மாதிரி வீட்டுத்திட்டங்களை அமைத்திருந்தார். இது வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெற்றதாகும்.

அதனால் வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்தி, அதற்கு பயனாளிகளை தெரிவு செய்யும்போது, அரசியல், கட்சி பேதங்களை பார்க்காது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்தியாஸ் தெரிவித்தார். (நி-8)

# வாகன விபத்துக்கள் குறைந்து வீட்டு வன்முறைகள் அதிகரிப்பு

## வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க

(கொழும்பு)

தற்போதைய கொவிட் 19 தொற்று நிலைமையின் போது வீட்டுடன் தொடர்புடைய விபத்துக்கள் முன்னைய காலங்களுடன் ஒப்பிடும் போது 50 வீதத்தில் இருந்து 75 வீதம் வரை அதிகரித்துள்ளதுடன் வீதி விபத்துக்கள் 9 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் (சமூக மருத்துவம்) விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

தேசிய விபத்து தடுப்பு வாரம் மற்றும் விபத்துக்களை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

பல்வேறு விபத்துக்களில் சிக்கி வருடாந்தம் 12 இலட்சம் பேர் வரை அரச மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக சுட்டிக்காட்டிய அவர், 2025 ஆம் ஆண்டாகும் போது இந்த தொகை 15 இலட்சத்தினை எட்டும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

வீதி விபத்துக்கள், விழுதல் மற்றும் சிராய்ப்பு, உடலில் விஷம் கலத்தல், விலங்குக்கடி, மின்சார தாக்குதல், தீக்காயங்கள், நீரில் மூழ்குதல் போன்ற பல விபத்துக்கள் காரணமாக வருடந்தோறும் 12 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பதாகவும் விசேட வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க மேலும் தெரிவித்தார். (நி-8)

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் கடன்

(கொழும்பு)

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனானப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-8)

# தடுப்பு கற்கள் விழுந்து உயிரிழந்த நபர்

## வெள்ளவத்தையில் சம்பவம்



(கொழும்பு)

கொழும்பு- வெள்ளவத்தைப் பகுதியில் இடம்பெற்ற துரதிர்ஷ்டவசமான விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தையில் உள்ள சுவிசுதராம பகுதியில் கட்டுமாணப் பணிகள் இடம்பெற்றுவந்த ஒரு கட்டடத்தில் இருந்த ப்ளொக் கற்கள் விழுந்ததில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தினமான நேற்று குறித்த கட்டடத்தின் கீழ் நிறுத்தப்பட்டிருந்த மகிழுந்தின் மீது தடுப்புக் கற்கள் விழுந்துள்ளன. இதனையடுத்து மகிழுந்தினுள் இருந்த நபர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-8)


குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

**மனவளக்கலை யோகப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- பொதுமக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக்கொண்டு தற்கால சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழ்வதற்கு தேவையான உடல் ரீதியான பயிற்சிகளான உடற்பயிற்சிகள்
- உறவினர்கள், நண்பர்களுக்கிடையே நட்பு நலத்தைப் பேணுவதற்கு அவசியமான மனவளப் பயிற்சிகளான எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை விருத்தி செய்து நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான காயகல்பப் பயிற்சிகள்

போன்றவற்றை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்: 11.07.2021 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்**
**பயிற்சிகளை வழங்குபவர்: துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு: பயிற்சியானது மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயிற்சியாளர்களுடன் கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

**தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**[illegible] வீதி, கொக்குவில் கிழக்கு,**
**[illegible] யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309** (C-2322)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழில் நேற்று கவனயீர்ப்பு

**(யாழ்ப்பாணம்)**

**பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.**



புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் இடம் பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்!, கொரோனா திரை மறைவில் எங்களை வதைக்காதே, அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு, பாதுகாப்பு வழிகளைச் செய்து பாடசாலைகளைத் தொடங்கு, உணவுப் பொருட்கள்-எரிபொருட்களின்விலையை உடனே குறை!, விவசாயிகள் - மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்குத் தீர்வு காண்! மற்றும் நிறுத்து நிறுத்து விலை உயர்வை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வருகைதந்த யாழ்ப்பாண பொலிஸார் போராட்டத்தை நிறைவு செய்யுமாறு வலியுறுத்தியதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (4-7-6-18-33)

# பயணத்தடையால் வர்த்தகர்களின் வருமான இழப்பு அதிகம்

(சாவகச்சேரி)

கொவிட்- 19 சூழ்நிலை காரணமாக நாட்டில் அண்மையில் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடையால் கொடிகாமம் வர்த்தகர்கள் கடந்த வருடத்தை விட இவ்வருடம் அதிக வருமானத்தை இழந்திருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.


கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

பயணத்தடை காரணமாக இம்முறை 48 நாட்கள் சந்தை மற்றும் குத்தகை கடைகள் பூட்டப்பட்டன. இதன் காரணமாக வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கான வாடகை மற்றும் குத்தகையை பூட்டப்பட்ட நாள் அடிப்படையில் விலக்களிக்க அனுமதிவழங்கக் கோரி சாவகச்சேரி பிரதேசசபை வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பத் தீர்மானித்துள்ளது. (4-7-6-30)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும்கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பன்னாலை வரத்தளம் கற்பகவிநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)



ஒவ்வாமை உடையவர்களுக்கான கொவிட்-19 தடுப்பூசி நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் செலுத்தப்பட்டது.

(படம்:- சுபேசன்)

# அரசாங்கத்தின் ஆட்கள் எனக் கூறி தவிசாளர் நிரோஷுக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் ஆட்கள் எனக் கூறி பிக்கப் வாகனத்தில் வந்தவர்கள் தம்மை அச்சுறுத்தியுடன் தாக்கவும் முயற்சித்ததாக் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் தவிசாளர் உத்தியோகபூர்வ வாகனத்தில் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியின் பழைய தபால் கந்தோர் ஒழுங்கை ஊடாக பயணித்த போது, மத்திய மாகாண இலக்கத்தகடு கொண்டு செய்யப்பட்டுள்ள செகுசு பிக்கப் வாகனத்தில் ஒரு குழுவினர் எச்சரித்தவாறு தவிசாளரின் வாகனத்தை முந்திச் சென்றுள்ளனர்.

முந்திச் சென்றவர்கள் முன்னர் தனியார் நெடுந்தூர பேருந்து தரிப்பிடமாக பாவிக்கப்பட்ட வளாகத்திற்குள் தவிசாளரின் வாகனம் நிறுத்தப்பட்டதுடன் அவ் வளாகத்திற்குள் நுழைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து, தாம் அரசாங்கத்தின் ஆட்கள் எனக் கூறியவாறு தவிசாளரை நோக்கி வந்து அவரை தாக்குவதற்கு எத்தனித்த போது அவ்விடத்தில் ஒருவரால் தடுக்கப்பட்டது பின்னர். மக்கள் ஒன்றுகூடியவுடன் அவர்கள் விலகிச் சென்றனர்.

இந்நிலையில் அவ்விடத்தில் இருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்ற தவிசாளர் நிரோஷ் அச்சுறுத்தியவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாட்டினைப் பதிவுசெய்தார். (4-7-8-33)

# பல்பரிமாண நகரமாகின்றது வேலணை வங்களாவடி நகர்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் மையப் பகுதியான வேலணையின் வங்களாவடி நகரப் பகுதியை பல்பரிமாண நகரமாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்திற்கமைய நாட்டில் 100 நகரங்களை பல்பரிமாண நகரத் திட்டமாக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 6 பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைவாக பெருநகர அபிவிருத்தி அமைச்சு குறித்த செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வேலணை, சாவகச்சேரி, கொடிகாமம், நாவற்குழி, தெல்லிப்பழை, மருதனார்மடம் ஆகிய பிரதேசங்கள் குறித்த பல்பரிமாண நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் நேற்றையதினம் வேலணையின் வங்களாவடி நகர்ப்பகுதியின் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கான கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

இம்மாத இறுதிக்குள் குறித்த பணிகளை ஆரம்பித்துவைக்கும் முகமாக நகர அபிவிருத்தி திணைக்கள (UDA) பணிப்பாளர் தலைமையிலான குழு மற்றும் RDA தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வேலணை பிரதேச சபை தவிசாளர், பிரதேசசபை தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு கள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-7)



மருதங்கேணி பகுதியில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றிற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் நிதியுதவியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

(படம்: தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்து



## திருமதி. பராசக்தி பரராஜசிங்கம்

(பகுதித்தலைவர், விஞ்ஞானபாட ஆசிரியர்) -SLTS 1

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி

### சேவை விபரம்

யாழ்/காரை சுந்தரமூர்த்தி வித்தியாலயம்
21.03.1990-10.11.1996
யா/காரை யாழ்ற்ரன் கல்லூரி
11.11.1996-31.08.1998
யா/இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
01.09.1998-28.08.1999
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
29.03.1999-11.01.2009
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
12.01.2009-10.07.2021

காரைநகர் தந்த கலைமகளே!
என்றும் குறையா இளமை அழகும்
எல்லோருடனும் இணைந்திடும் பண்பும்
நன்றாய் ஏற்ற பணிதனைச் செய்திட
நயமுடன் பேசியே நல்லாசிரியையாய்
குன்றாத விஞ்ஞான அறிவைப் புகட்டியே
பகுதித் தலைவர் பணிதனைப் புரிந்தும்
நின்றீர் கல்லூரி நிமிர்ந்திடவென்றே
நிறைபணி செய்தீர் வாழி நீர் வாழி!

விளையாட்டுத்துறையோடு ஆன்மிகத்துறையும்
விளங்கிடவென்றே தோளும் கொடுத்தீர்
மழைபோல் மேடையில் சொற்பெருக்காற்றி
மாணவர் மனங்களில் கருத்துக்கள் விதைத்தீர்
பிழைகள் கண்ட போதிலே அவற்றைப்
பேசியே சரி செய்து சிரித்து நிற்பீர்
களைப்பே இன்றி கல்விப் பணியாற்றிய
பராசக்தி ஆசிரியை பல்லாண்டு வாழ்க!

நல்ல மனமும் நலன்தரு செயல்களும்
பிள்ளைகள் வடிவில் பெருமைகள் கண்ட
வல்ல இறைவன் வழித்துணையோடு
வளமும் நலமும் பெற்றே வாழ்க...!

Best Wishes

வாழ்த்துவோர்: கல்லூரிச் சமூகம்
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(C-2326)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: 31 செவ் 10 சூரி 11 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: சொந்த கணனி தொழில்நுட்பம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/11901

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 32 ½ செவ் 5 சூரி 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: லண்டன் PR உண்டு
எதிர்பார்ப்பு: உள்நாடுமட்டும், படித்த பெண்
தொ.இ: B/11902

பிறப்பு: 1986 இந்து நட்சத்திரம்:விசாகம்
கி.பா: செவ் 9 சூரி 5 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (பிரான்ஸ், லண்டன், கனடா)
தொ.இ: B/11904

பிறப்பு: 1971 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: விசாகம் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: அரச தொழில் (CTB Clark), விவாகரத்து பெற்றவர், ஒரு ஆண் பிள்ளையும் உண்டு
எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: B/11905

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 25 ½ செவ் 12 சூரி 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Civil Engineer
லண்டன் PR உண்டு
எதிர்பார்ப்பு: பட்டதாரி.அரச தொழில்
தொ.இ:G/11903

பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 42 செவ் 1 சூரி 11 இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி Demon
எதிர்பார்ப்பு: பட்டதாரி நிரந்தர தொழில், உள்நாடு மட்டும்
தொ.இ:G/11907

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 67 செவ் 8 சூரி 11 இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/11908

பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 30 செவ் 12 சூரி 2 இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்: தனியார் IT officer
எதிர்பார்ப்பு: உள்நாடுமட்டும், Engineer, Doctor, Bank...
தொ.இ:G/11910

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொடர்ந்து தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்

# இந்தியாவை அச்சுறுத்தும் ஸிகா வைரஸ்

# இலங்கைக்கும் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கைவரும் இந்தியர்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானமாக செயற்பட வேண்டுமென சிறுவர் நோய் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.**

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவும் ஸிகா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவர் இலங்கை வந்தால், அந்த வைரஸ் நாட்டில் பரவும் அபாயம் உள்ளது.

நுளம்புகள் மூலம் பரவும் ஸிகா வைரஸ் தொற்றுக்குள்ளான 14 பேர் கேரளாவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கேரள மாநிலத்திலிருந்து எவராவது ஒருவர் இலங்கை வந்தால் அவர் ஸிகா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவரா? என்பது குறித்து உடனடியாக பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

காய்ச்சல், கண் சிவத்தல், உடல் உளைச்சல் உள்ளிட்டவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

[illegible] இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் இந்தியர்கள்



தொடர்பில் அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

1947 ஆம் ஆண்டு உகாண்டா காடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஸிகா வைரஸ்சுக்கு இதுவரை தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

11.07.2021
ஆனி 27, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை முற்பகல் 7.53 மணிவரை
பூசம் பின்னிரவு 2.51 மணிவரை
சுபநேரம் 8.59-10.29 மணிவரை
இராகுகாலம் 4.29-5.59 மணிவரை
சந்திராஷ்டமம்:-மூலம் ,பூராடம்.

வளவன்

**மேஷம்** — சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்** — கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, போசன நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கன்னி** — செல்வ நிலை உயரும் வாய்ப்புண்டு, எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும், உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், போசன சுகமுண்டு.

**துலாம்** — நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** — தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள்.

**தனுசு** — கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**மகரம்** — நட்பு வட்டம் விரிவடையும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான நாள்.

**கும்பம்** — கடன் பிரச்சினைகளை சாமர்த்திமாகச் சமாளிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்** — பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

அகங்காரம் வரும் போது அதற்கு பின்னே அவமானமும் வந்து சேரும்.

# வீதி புனரமைப்புக்களில் குறைபாடு பிரதேசசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(அக்கராயன்)

**கிளிநொச்சி வன்னேரிக் குளம் வீதிப் புனரமைப்புகளில் குறைபாடுகள் தொடர்வதாக கரைச்சிப்பிரதேச சபையின் உறுப்பினர் நா.செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 63 ஆண்டுகளுக்குப் பின்னர் நான்கு மாதங்களுக்கு முன்னர் அக்கராயனில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம், பல்லவராயன்கட்டு, வேரவில், பொன்னாவெளி வரை வீதிப் புனரமைப்புகள் நடைபெற்று வருகின்றன.

எமது சூழலில் தரமான சிவப்புக் கிரவல் காணப்படும் நிலையில் தரமற்ற வெண் கிரவல் பயன்படுத்தப்பட்டு வன்னேரிக்குளத்திற்கும் ஜெயபுரத்திற்கும் இடையில் வீதி புனரமைக்கப்படுவது பொருத்தமற்றது. அக்கராயனில் இரு வீதிகளில் தரமற்ற வெண் கிரவல்கள் பயன்படுத்தப்பட்டு வீதிப் புனரமைக்கப்பட்டு ஐந்தாண்டுகளுக்கு உள்ளேயே வீதிகள் பெரும் குண்டும் குழியுமாக மாறி வரும் நிலையில் 63 ஆண்டுகளுக்கு பின்னர் அமைக்கப்படுகின்ற எமது கிராமத்தின் வீதியில் தரமற்ற வெண் கிரவலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வீதிப் புனரமைப்பினால் எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை.

வீதி புனரமைக்கப்பட்டு சிறிய காலத்திலேயே வீதி சேதமடையக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நேரடியாக வருகை தந்து பெருமளவு நிதியினை வீண் விரயம் செய்யப்பட்டு அமைக்கப்படும் வீதியினை பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி வன்னேரிக்குளம் மக்கள் சார்பாக வேண்டுகின்றேன்.

ஆசிய அபிவிருத்தி வீதி வேலைத் திட்டத்தில் வீதி வேலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக மக்கள் முறைப்பாடுகள் செய்யலாம் என்பதன் அடிப்படையிலேயே இத்தகவலை மாவட்டச் செயலாளராகிய தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன் எனவும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.(7-4-350)

# மாங்குளம் பேருந்து நிலையம் இயங்க புதிய வீதி வேண்டும்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளம் பேருந்து நிலையத்தினை இயங்க வைப்பதற்கு புதிய வீதி ஒன்றினை அமைக்கலாம் என்ற யோசனையினை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமாகிய செ.பிறேமகாந் முன்வைத்துள்ளார்.

1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பழைய வீதி காணப்பட்டது. புகையிரத நிலையத்தின் விஸ்தரிப்பால் பழைய வீதியில் தற்போது வீதி அமைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. வீதி அமைப்பதற்காக வீதி அதிகார சபைக்கு நிதி கிடைத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதன் காரணமாக மாங்குளம் பேருந்து நிலையம் இயங்குவதில் தடைகள் காணப்படுகின்றன. இந்நிலையில் பிரதேச சபை உறுப்பினர் செ.பிறேமகாந் தற்போதுள்ள சந்தையின் நடுப்பகுதியின் ஊடாக புதிய வீதி ஒன்றினை அமைப்பதன் மூலம் ஏ-9 வீதிக்கும் மாங்குளம் துணுக்காய் வீதிக்கும் இடையில் போக்குவரத்தினை உருவாக்க முடியும்.

மாங்குளம் பேருந்து நிலையமும் இயங்க முடியும் என்ற யோசனையை கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் தெரிவித்ததுடன் இது தொடர்பாக பிரதேச சபையின் குழுவொன்று நேரடியாக மாங்குளத்திற்கு வருகை தந்து ஆய்வு செய்து முடிவுகளை எடுக்கலாம் எனவும் தனது யோசனையில் தெரிவித்துள்ளார். (7-4-350)

# கசிப்பு உற்பத்தி முறியடிப்பு

## ஒருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்றையதினம் பெரிய குளம் கட்டைக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 218 போத்தல் கோடாவுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றை கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (7-4-316)

# கிளிநொச்சிக்கு நாளை முதல் புதிய பேருந்து சேவை

(அக்கராயன்)

கிளிநொச்சிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புதிய இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை ஒன்று நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் இருந்து காலை 6.30 மணிக்கு பயணிக்கத் தொடங்கும் பேருந்து காலை 7.25 மணிக்கு கைதடியினைச் சென்றடைந்து பின்னர் கிளிநொச்சி அறிவியல் நகரினைக் காலை 8.25 இற்குச் சென்றடையும்.

அரச உத்தியோகத்தர்களை இலக்காகக் கொண்டு இப்பேருந்து சேவை நடத்தப்படவுள்ளது. மாலை 4.15 மணிக்கு அதே வழித்தடத்தில் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையினை குறித்த பேருந்து வந்தடையும். (7-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மொட்டை’ கவிழ்க்கலாம் என கனவு காண வேண்டாம்

## நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசை ஆர்ப்பா ட்டங்கள் மூலம் கவிழ்க் கலாமென கனவு காண வேண்டாம் என்றால் புதிய நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிரணிக்கு பதிலுரை வழங்கியுள்ளார்.**

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஊட கங்களிடம் தெரிவித்த அவர்,

நான் பாராளுமன்ற உறுப்பினராக - அமை ச்சராக பதவி ஏற்றவுடன் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை எதிர ணியினர் தீவிரப்படுத் தியுள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு சில ரைக் கொண்டு முன்னெ டுக்கப்படும் இந்த ஆர்ப் பாட்டங்கள் மூலம் ஸ்ரீல ங்கா பொதுஜன முன் னணி தலைமையிலான



அரசைக் கவிழ்க்க முடி யாது.

நாட்டு மக்கள் மன தில் "தாமரை மொட்டுச்" சின்னமே இருக்கிறது.

இந்த மொட்டுக்கு வாக் களித்துத்தான் நாட்டின் ஜனாதிபதியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடனான அரசை யும் மக்கள் தெரிவு செய் துள்ளார்கள்.

எனவே பிரயோசன மற்ற இந்த ஆர்ப்பாட் டங்கள் கைவிட்டு நாட்டி னதும் மக்களினதும் நலன் சார்ந்த அரசின் திட்டங்களுக்கு ஒத் துழைப்பு வழங்குமாறு எதிரணியிடம் வேண்டிக் கொள்கிறேன் எனத் தெரி வித்தார். (நி-8)

# பாணின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

(கொழும்பு)

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திக ளின் விலைகளை அதி கரிப்பதற்கு, அகில் இல ங்கை வெதுப்பக உற் பத்தியாளர்கள் சங்கம் மேற்கொண்டிருந்த தீர் மானம் கைவிடப்பட்டு ள்ளது.

செரண்டிப் நிறுவன த்தினால், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 18 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, ஒரு இறாத் தல் பாணின் விலையை எதிர்காலத்தில் 10 ரூபா வினால் அதிகரிப்பதாக அந்தச் சங்கம் அண்மை யில் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என செரண்டிப் நிறுவனம் எழுத்து மூலம் உறுதியளித்து ள்ளமையால், இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டு ள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜய வர்தன தெரிவித்துள் ளார். (நி-8)

# புத்தசாசன அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்க உத்தரவிடக் கோரிய மனு தள்ளுபடி

(கொழும்பு)

புத்தசாசன அமை ச்சுப் பதவியை ஜனாதி பதி வகிக்க வேண்டும் என அறிவித்து உத்தர விடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக் கல் செய்யப்பட்ட அடி ப்படை உரிமை மீறல் மனு தள்ளுபடி செய்ய ப்பட்டது.

சட்டத்தரணி அருண லக்சிறி உன வட்டுன தாக்கல் செய்த இந்த மனுவில் எந்தச் சட்ட அடிப்ப டையும் இல்லை என தெரிவித்து விசார ணைக்கு ஏற்காது உயர் நீதிமன்றம் தள் ளுபடி செய்வதாக அறி வித்தது.

குறித்த மனுவில் மனுதாரர் தெரிவித்து ள்ளதாவது,

"ஏதேனும் ஒரு மாவட்டத்தின் வாக் காளர்களால் அல்லது தேசியப் பட்டியலூடாக பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் நபராக அன்றி முழு நாட்டு மக்களின் நேரடி வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதால், பாதுகாப்பு மற்றும் புத்தசாசன அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வகிப்பது அரசியல் அமைப்பின் பிரகாரம் ஏற்புடையது.

அவ்வாறு செய்யத் தவறினால் அரசியல் அமைப்பின் 9, 10 மற் றும் 12 ஆம் சரத்தின் முதலாம் பிரிவு ஆகிய வற்றில் பாதுகாக்கப் படும் உரிமைகள் மீறப்படும்.

அல்லது அவற்றை மீற முயற்சிக்கப்படுவ தாகக் கருதப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 30 ஆவது சரத்திற்கு அமைய ஜனாதிபதி, அரசாங்கத்தின் தலை வராகவும் நிறை வேற்றதிகாரத்தின் தலைமையை வகிப்ப தாலும் அரசியலமை ப்பின் 9 ஆவது சரத் திற்கு அமைய, புத்த மதத்திற்கான முன் னுரிமையைப் பேணு தல் என்ற விடயத்தில் அந்த விவகார அமை ச்சினை பிறிதொரு நபரிடம் கையளிப்ப தன் ஊடாக ஜனாதிபதி அடிப்படை உரிமை களை மீறுவதாக கரு தப்பட வேண்டும்." என மனுதாரர் சுட்டி க்கட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# காலம் மாறும்

ஓர் அரசன். அவனுக்கு வயதாகி விட்டது. அதனாலேயே கவலை – பயம் எல்லாம் அதிகமாகி விட்டது. மரண பயம். இரவிலே தூங்க முடியவில்லை.

ஏற்கனவே போர்க்களத்தில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டினவன் இந்த அரசன்.

ஆனாலும் இப்போது அந்த துணிச்சல் எல்லாம் எங்கேயோ போய்விட்டது என்ன செய்யலாம் என்று யோசித்து எல்லா அமைச்சர்களையும் கூப்பிட்டார்.

“எனக்கு ஒரு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்!” என்றார்.

என்ன ஆலோசனை? என்று கேட்டார்கள்.

“எனக்கு ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டு போய்விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்... அந்த நேரத்திலே நீங்கள் யாருமே என் பக்கத்திலே இல்லை... ஆலோசனை சொல்கிறதிற்கு!

அந்த சமயத்திலே எனக்கு உபயோகப்படுகிற மாதிரி ஒரு வாசகம் – பொன்மொழி – சொல்லுங்கள். அதை நான் என்னுடைய வைர மோதிரத்தின் அடியிலே பதித்து வைத்திடுவேன்!” என்றார்.

அவர் போட்டிருந்த மோதிரமும் அதுக்குத் தகுந்த மாதிரி திறந்து மூடுகிற மாதிரி அமைந்தது.

அமைச்சர்கள் யோசனை செய்தார்கள்... என்ன வாசகம் சொல்லலாம் என்று. ஒருவருக்கும் ஒன்றும் சரியாக தோன்றவில்லை ... குழப்பமாக இருந்தது. அந்த நேரத்திலே ஒரு பெரியவர் அங்கே வந்தார். அவர் சொன்னார்:

நான் அதற்குப் பொருத்தமான ஒரு வாக்கியம் சொல்லுவேன். ஆனால் ஒரு நிபந்தனை.

அதை யாரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டுப் படிக்கக்கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்தினுள்ளே எழுதி வைக்க வேண்டும்...

எப்போதாவது இக்கட்டிலே மாட்டிக்கொள்ளும் போது வேறு வழியே இல்லை என்கின்ற நிலைமையில் மட்டும் தான் அதைத் திறந்து பார்க்க வேண்டும் என்றார் அந்த பெரியவர்.

சரி என்று ஒத்துக்கொண்டார்கள். அவர் சொன்ன வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்திற்குள் பதித்து மூடியாச்சு. ராஜா அதை விரலிலே மாட்டிக் கொண்டார்.

சிறிது நாட்கள் ஆனது.

அந்த ராஜாவிற்கு ஒரு சோதனை வந்தது.

அடுத்த நாட்டு மன்னன் படையெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப்போனவன். ஒரு வெறியில் வந்தான். ஜெயித்துவிட்டான்.

இவர் நாட்டை இழந்தார்... எல்லாவற்றையும் இழந்தார். ஒரு அடிபட்ட குதிரையில் ஏறி தப்பித்துப் போனார். பின்னால் துரத்தினார்கள். இவர் ஒரு மலை உச்சிக்குப் போய்விட்டார்.

அதற்குப் பிறகு போக முடியாது... பயங்கர பள்ளம்! உல்லாசப் பயணிகள் வந்து கண்டுகளிக்கிற இடம் அது.

ஆனால் இவருக்கு அது சாவுப் பயணத்தின் வாசல்! திரும்பவும் முடியாது...

அவ்வளவு குறுகிய பாதை அது.

வேறு வழியே இல்லை... இந்த நேரம் சூரிய ஒளி மோதிரத்தில் பட்டு மின்னியது... உடனே இவருக்கு ஞாபகம் வந்தது. மோதிரத்தை திறந்துப் படித்தார். அதிலே இருந்த வாசகம்.

இந்த நிலையும் மாறிவிடும்! “This too will pass Away” அவருக்கு ஒரு தைரியம் வந்தது. பின்னால் வந்தவர்களும் திசை மாறி வேறு எங்கேயோ தேடிப் போய் விட்டார்கள்!

இவ்வளவு அழகை ரசிக்கிறதிற்காக ஒரு நாட்டையே கூட இழக்கலாம் என்று தோன்றியது அவருக்கு! அமைதியாக அந்த அழகை ரசித்தார். எதிரிகள் எல்லாம் எங்கேயோ தேடிப் போய் விட்டார்கள்!

மன்னர் நாடு திரும்பினார். மறுபடியும் படைகளைத் திரட்டினார். சிறிது நாட்களிலே படையெடுத்துக்கொண்டு போனார்.

யாரிடம் தோற்றாரோ அவரையே வெற்றி கண்டு திரும்பி வந்தார்.

வரவேற்பு விழா பிரமாதப்பட்டது... ஆடல் பாடல் கோலாகலம்! இதைப் பார்த்ததும் அந்த ராஜாவிற்கு தலைகால் புரியவில்லை... நம்மை யாராலும் ஜெயிக்க முடியாது என்று நினைத்தார். அகம்பாவம் லேசா எட்டிப் பார்த்தது. இப்போது மறுபடியும் சூரிய ஒளி பட்டு மோதிரம் மின்னியது. அதைத் திறந்து மறுபடியும் படித்தார்:

இந்த நிலையும் மாறி விடும்! “This too will pass Away” அவ்வளவு தான் அவர் மனம் அடங்க ஆரம்பித்தது. ஆணவம் போய் விட்டது.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

எந்த சூழ்நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

ஏன்னென்றால்... இங்கே எதுவுமே நிரந்திரமில்லை.

அந்த ராஜா மாதிரியே நம்முடைய ஆளு ஒருத்தன் ஒரு மோதிரம் போட்டிருந்தான். அதுக்குள்ளே அவன் எழுதி வைத்திருந்த வாசகம்.

எதுக்கும் கவலைப்படாதே என்னும் வாக்கியம் தான் உள்ளே பதித்து வைத்திருந்தான்.

ஒரு நாள் பயங்கரமான கவலையோடு உட்கார்ந்திருக்கின்றான். பக்கத்திலே இருந்தவர்கள் சொன்னார்கள்...

இது மாதிரி சந்தர்ப்பத்திலே தான் நீ உன் மோதிரத்தைத் திறந்து பார்க்க வேண்டும் என்றார்கள்.

இவனுக்குக் கவலையோடு எரிச்சலும் சேர்ந்து விட்டது. சொன்னான்... அது எப்படி முடியும்? இப்பொழுது திருட்டுப் போனதே என்னுடைய அந்த மோதிரம் தானே என்று சொல்லிவிட்டுத் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுகாதார நடைமுறைகளை சீராக்க

# வவு. வர்த்தக நிலையங்களுக்கு இரண்டு நாட்கள் கால அவகாசம்

(குருமன்காடு)

**வவுனியா நவீன சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு சுகாதார நடைமுறைகளை சீராக்குவதற்கு இரு நாட்கள் காலஅவசாகம் வழங்கப்பட்டுள்ளதுடன், மீறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வவுனியா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் கடமையாற்றுவோர் என்பவர்களுக்கு பி.சி. ஆர். மேற்கொள்ளப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரு நாட்களுக்குள் வர்த்தக நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவுள்ள பகுதி என்பன தொற்று நீக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்தல் கட்டாயமாகும்.

வர்த்தக நிலையத்திற்கு முன் பாக பொருட்களை வைப்ப ற்கு 1 அடி மாத்திரமே நகர சபை கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்காக சுகாதார பிரிவினரின் வேண்டுகோளுக்கிணங்க ஒன்றரை அடி வரை பொருட்களை வைப்பதற்கு நகர சபையினரினால் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டு ள்ளது.


வாடிக்கையாளர்களுடனான ஒரு மீற்றர் இடைவெளி பேணுதல் அவசியமாகும். இவற்றினை சீராக நடைமுறைப்படுத்தாத இடத்து ஒற்றை எண் அடிப்படையில் வர்த்தக நிலையங்களை திறப்பதற்கும் (50 வீதமான வர்த்தக நிலையங்கள் ஒரு நாளைக்கு என்ற அடிப்படையில்) நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுகாதார நடைமுறைகளை மீறி செயற்படும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளவும் தயராகவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-4-250)



மன்னார் மாவட்டத்தில் நேற்றைய தினம் "பைசர்" (Pfizer) கொரோனா தடுப்பூசி செலுத்தும் இரண்டாம் கட்டப் பணிகள் கரையோர பிரதேசங்களில் உள்ள அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களை சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. (படம்: ஜோசப் நயன்)

# 'எரிபொருள் விலையைக்குறை' வவுனியாவில் சுவரொட்டி




(குருமன்காடு)

"எரிபொருள் மற்றும் பொருட்களின் விலையை உடனடியாக குறை" என்ற வாசகத்தினை தாக்கிய சுவரொட்டிகள் வவுனியா நகரின் பல இடங்களிலும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள இச் சுவரொட்டியில் பயிர்களுக்கு ஏற்ற உரத்தை உடனே வழங்கு என்ற வாசகமும் இணைக்கப்பட்டுள்ளது.

சுவரொட்டியின் கீழ்ப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி ( ஜே.வி.பி) என உரிமையும் கோரப்பட்டுள்ளமையுடன், இச் சுவரொட்டிகள் கண்டி வீதி, நூலக வீதி, மன்னார் வீதி, புகையிரத நிலைய வீதி என வவுனியா நகரின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (7-4-250)


# வவுனியா பாடசாலை சமூகத்தினருக்கு தடுப்பூசி

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பாடசாலையில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் உட்பட 3025 பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் நாளை முதல் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், வவுனியா மாவட்டத்தில் 2ஆயிரத்து 802 ஆசிரியர்களும், 205 அதிபர்களும், 198 பாடசாலை மற்றும் வலயத்தில் பணியாற்றும் ஏனைய ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர். (7-4-250)

# கண்டாவளையில் நூதனமுறையில் பாரிய மணல் கொள்ளை



(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்டாவளை வெளிக்கண்டல் பகுதியில் கைவிடப்பட்ட காணியில் பாரியளவிலான சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்பகுதியில் கண்டா வளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பழைய பிரதேச செயலகப் பின்புறம் வெளி கண்டல் பகுதியில் வெளி மாவட்டங்களில் வசித்து வருபவர்கள் தமது காணிகளை கைவிட்ட நிலையில் உள்ளதால் சட்ட விரோத மண் அகழ்வு பாரிய அளவில் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

பல அடி ஆழத்தில் தோண்டப்பட்டு காணப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்டவர்களைக்கொண்டு மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் சில மாதங்கள் கழிந்து மீண்டும் அப் பிரதேசங்களில் பாரிய அளவிலான மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு அவசர தேவை கருதி நோயாளர் காவு வண்டி கூட இப்பகுதியில் பயணிக்க முடியாத நிலையில் உள்ளது. அத்துடன் பகல் வேளையில் டிப்பர்கள் அதிக வேகத்துடன் மணல் ஏற்றிச்செல்வதன் காரணமாக பாடசாலைக்குச் செல்லும் சிறார்களுக்கும் மிகவும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகிறது.

தற்பொழுது நூதன முறையில் மணல்திருட்டு இடம்பெற்று வருகிறது எனவும் மணல் மூட்டைகளாக கட்டி கனரக வாகனங்களில் ஏற்றுவதாகவும் மற்றும் கப் ரக வாகனங்களிலும் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மணல் அகழ்வினை தடுத்து நிறுத்தி சட்டவிரோத மணல் அகழ்விற்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். (7-4-316-315)

# வவுனியா சந்தையில் பி.சி.ஆர். பரிசோதனை



(குருமன்காடு)

வவுனியா பொது சந்தையில் 112 பேருக்கு நேற்று சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.


வவுனியா பொது சந்தையில் கடந்த வாரம் சிலருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்ததனையடுத்து அப்பகுதியில் சில வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் கொவிட் பரவலை தடுக்கும் வகையில் வவுனியா பொதுச் சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் அதில் கடமையாற்றுவோர் என 112 பேருக்கு சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், குறித்த பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (7-4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு



(ஹற்றன்)

மலையகத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக பெரும்பாலான நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையிலேயே கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில், நீர்மட்டம் அதிகரித்தமையினால் நேற்றுக் காலை மேலும் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் சென் கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.


இதேவேளை மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப் பகுதியைப் பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## தீர்க்க சுமங்கலி வரம் அருளும் காரடையாள் நோன்பு



'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்பது பழமொழி. தாலிகட்டி, கரம் பிடித்து, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, இல்லற வாழ்க்கையில் இணைந்த கணவன், எப்போதும் பிரியாமல் இருக்கவும், அவன் நீண்ட ஆயுளுடன் வாழவும் மனைவி நோற்கின்ற விரதம் இது. மாங்கல்யம் நிலைக்க வேண்டும் என்பதே, இந்த நோன்பின் குறிக்கோள் ஆகும். கன்னிப் பெண்கள் விரைவில் திருமணம் நடைபெற வேண்டியும், நல்ல கணவன் அமைய வேண்டியும் இந்த விரதத்தை மேற்கொள்கின்றனர்.

மாசி மாத முடிவில், பங்குனி மாத தொடக்கத்தில், இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. 'மாசிக்கயிறு பாசி படியும்' (விருத்தியாகும்) என்ற பழமொழிக்கேற்ப, இந்தப் பண்டிகையின் போது பெண்கள் திருமாங்கல்ய கயிற்றை மாற்றிக் கொள்வர். மற்ற நோன்புகளுக்கு கையில் சரடு கட்டிக் கொள்வார்கள். இந்த நோன்பின் போது தாலிக்கயிற்றுக்கு பதிலாக புதிய கயிற்றைக் கட்டிக் கொள்வார்கள். சிலர் சரட்டில் மஞ்சள் சேர்த்து கழுத்தில் கட்டிக் கொள்வர்.

இதனால் காரடையான் நோன்பு மாங்கல்ய பலன் தரும் விரதம் எனவும், தீர்க்க சுமங்கலி வரம் அருளும் நோன்பு எனவும் அழைக்கப்படுகிறது. இந்த நோன்பை சாவித்திரி விரதம் என்றும், காமாட்சி விரதம் எனவும் அழைப்பர்.

பதிவிரதையான சாவித்திரியின் கணவன் சத்தியவானின் உயிரை எமன் பறித்துச் சென்றான். சாவித்திரி அவனைத் தடுத்து, வாதாடி தன் கணவனின் உயிரை மீட்டு வந்தாள். இதற்காக இவள் நோற்ற நோன்பு தான் சாவித்திரி நோன்பு ஆகும். காரடையான் நோன்பின் போது, சாவித்திரியின் வரலாற்றினை அறிந்து கொள்வது அவசியம்.

அஸ்வபதி என்ற மன்னனின் மகள் சாவித்திரி. இவள் ஒரு சமயம் காட்டுக்குச் சென்ற போது, எதிரிகளால் நாடு இழந்து அங்கு வசித்து வந்த, துய்மற்சேனன் என்ற பார்வையற்ற மன்னரின் மகனான சத்தியவானை சந்தித்தாள். பெற்றோருக்கு அவர் செய்த பணிவிடை சாவித்திரியை கவர்ந்தது: அவள் சத்தியவானை மணமுடிக்க விரும்பினாள்.

தனது விருப்பத்தை தந்தையிடம் தெரிவித்தாள். அவரும் மகிழ்ச்சி அடைந்து சத்தியவானின் ஜாதகத்தை பார்த்த போது, அவனுக்கு இன்னும் ஒரு வருடமே ஆயுள் இருப்பது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த சாவித்திரியின் தந்தை, 'வேறு மாப்பிள்ளை பார்க்கலாம்' என்றார். அதற்கு மறுப்பு தெரிவித்த சாவித்திரி, தனது முடிவில் பிடிவாதமாக இருந்து சத்தியவானையே திருமணம் செய்தாள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## வெளிநாடுகளில் இருந்து வந்த 42 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 42 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் ஆயிரத்து 557 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. அவர்களில் ஆயிரத்து 515 பேர் புத்தாண்டு கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என்றும், எஞ்சிய 42 பேர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

## விகாரை வாசலில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

### பிரேத பரிசோதனையில் தொற்று உறுதி

(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடை - மோதர விகாரை வளாகத்தில் திடீரென வீழ்ந்து உயிரிழந்த நபருக்கு கொவிட் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி விகாரைக்கு வருகை தந்த நபரொருவர் விகாரை வாசலில் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சடலம் மீது பலபிட்டிய ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், குறித்த நபருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஹிக்கடுவை பகுதியைச் சேர்ந்த 54 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (நி-8)

## பல் வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை அதிகரிப்பு

(கொழும்பு)

அரசதுறையில் கடமையாற்றும் பல் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லையை 63 ஆக அறிவித்து நேற்று வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 250 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 120 | 170 | 180 | 180 |
| கரட் | 180 | 160 | 180 | 160 |
| பூசணி | 100 | 100 | 60 | 120 |
| புடோல் | 100 | 130 | 100 | 120 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 340 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 260 | 200 | 280 | 450 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 140 | 180 | 150 |
| பயற்றங்காய் | 150 | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 200 | 200 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 400 | 300 |
| போஞ்சி | 200 | 170 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 60 | 40 |
| தேசிக்காய் | 160 | 120 | 160 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | -- | 320 | -- |
| வெங்காயப்பூ | 250 | 250 | 160 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 60 | 110 | 30 |
| ஈரப்பலா | 50 | 100 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினியால் நிமிடத்துக்கு 11 பேர் மரணம்

# ஆக்ஸ்ஃபாம் அமைப்பின் அதிர்ச்சி தகவல்

(ஜெனிவா)

**ஒவ்வொரு நிமிடத்திலும் உலகில் 11 பேர் பட்டினியால் இறப்பதாக சர்வதேச வறுமைக் கண்காணிப்பு அமைப்பான ஆக்ஸ்ஃபாம் தெரிவித்துள்ளது.**



இது குறித்து சுமார் 20 சர்வதேச அறக்கட்டளைகளின் அந்தக் கூட்டமைப்பு, பரவும் பட்டினித் தீநுண்மி என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பட்டினியால் ஏற்படும் மரணங்கள் கொரோனா மரணங்களின் வேகத்தை விஞ்சி வருகின்றன.

உணவுப் பற்றாக்குறை காரணமாக உலகம் முழுவதும் நிமிடத்துக்கு 11 பேர் இறக்கின்றனர். சர்வதேச அளவில் 15.5 கோடி பேர் தற்போது கடும் பஞ்சத்தின் பிடியில் சிக்கியுள்ளனர். இது, முந்தைய ஆண்டைவிட 2 கோடி அதிகமாகும்.

கொரோனா நெருக்கடிக்கு இடையிலும் இராணுவச் செலவுகளுக்காக உலக நாடுகள் 5,100 கோடி டொலர் (சுமார் ரூ.3.8 இலட்சம் கோடி) கூடுதலாக ஒதுக்கீடு செய்துள்ளன. இது, உலகில் பசிப் பிணியைப் போக்குவதற்குத் தேவையான தொகையை விட 6 மடங்கு அதிகமாகும்.

நிதியுதவி அளித்து வரும் நாடுகளும் ஐ.நாவின் நிவாரண உதவிகளுக்குத் தேவையான நிதியை முழுமையாகவும் உடனடியாகவும் அளிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (8-7)

# குறுகிய நாட்களில் 25 நாடுகளுக்கு பரவிய ஆபத்தான லாம்ப்டா

(ஜெனிவா)

சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ள மிக மோசமான கொரோனா வகை வைரஸ்களில் ஒன்று லாம்ப்டா என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

World Health Organization

பெருவில் கண்டறியப்பட்டுள்ள லாம்ப்டா வேரியண்டானது டெல்டா ப்ளஸை விட வீரியமிக்கது என மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வகையானது மிகவும் வீரியமிக்கதாகவும், அதி வேகத்தில் பரவி வருவதாலும் பல்வேறு நாடுகளில் மூன்றாம் அலைக்கு இந்த வகை முக்கிய காரணமாக இருக்கும் என்றும் தெரிகிறது.

மிகக் குறுகிய நாட்களிலேயே கிட்டத்தட்ட 25 நாடுகளில் இந்த வகை பரவி இருப்பது தெரியவந்துள்ளது.

சமீபத்தில் கண்டறியப்பட்டுள்ள மிக மோசமான கொரோனா வகை வைரஸ்களில் ஒன்று லாம்ப்டா என, உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கிறது. (8-7)

# அயோத்தியில் ஆற்றில் மூழ்கி 6 பேர் பலி




(டில்லி)

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள சராயு ஆற்றில் மூழ்கியவர்களில் 6 பேர் உயிரிழந்தனர். 3 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ள மூவரைத் தேடும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

ஆக்ராவில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் நேற்று முன்தினம் சாரயு ஆற்றில் அவர்கள் குளிக்கும் போது தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில் காணாமல் போனவர்கள் கண்டறியப்படாத நிலையில் அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் காணாமல் போனவர்கள் தொடர்ச்சியாகத் தேடப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (8-7)

# ரஷ்யாவின் இணையவழி தாக்குதலை அமெரிக்கா தடுக்கும்



(வோஷிங்டன்)

ரஷ்யாவிலிருந்து இடம்பெறும் இணையவழி தாக்குதல்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அமெரிக்கா நிச்சயம் முன்னெடுக்கும் என ஜனாதிபதி ஜோபிடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் தெரிவித்தார்.

கடந்த மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற சந்திப்பையடுத்து, நேற்று முன்தினம் இருவருக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


எவ்வாறிருப்பினும், இணைய தாக்குதல் குறித்த அமெரிக்காவின் குற்றச்சாட்டுக் களை ரஷ்யா மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-7)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 040 019**

**தொற்று :-187 076 814**

**(நேற்றைய நிலவரம்)**



இராணுவ நடவடிக்கைகளுக்காக இராணுவ வீரர்களைப் போல் ரஷ்யாவின் 13 ஆயிரம் அடி உயரத்தில் நாய்களுக்கும் போர் பயிற்சி வழங்கப்படும் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தின் வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனாத் தடை போயகல ஆர்ப்பாட்டங்கள் மேலெழும்

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடைகளும் இதர கட்டுப்பாடுகளும் மெல்ல மெல்ல விலக்குப் பெறுகின்றன.

எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத் தடை நீட்சி பெறக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதை அனுமானிக்க முடிகிறது.

தவிர திருமணம், பொது நிகழ்வு, ஆலய வழிபாடு, அமங்கல நிகழ்வு என்பவற்றுக்கு விதிக்கப்பட்ட இறுக்கமான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில், மிக விரைவில் பாடசாலைகள் இயங்குவதற்கும் தனியார் கல்வி நிலையங்களை நடத்துவதற்குமான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன என்பதும் தெரிய வருகிறது.

ஆக, கொரோனாத் தொற்றும் அதனால் ஏற்படுகின்ற மரணங்களும் அதிகரித்துச் சென்றாலும் பயணத் தடை உள்ளிட்ட கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டு, கொரோனாத் தொற்றுடன் வாழப் பழகுவதை இயல்பு நிலையாக்க அரசாங்கம் தீர்மானித்துவிட்டது.

இது விடயத்தில் சுகாதாரத் தரப்புகளின் ஆலோசனைகள் செவிமடுக்கப்படமாட்டா என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

நாடளாவியரீதியில் ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடை மருந்து ஏற்றுகின்ற பணி நடந்து கொண்டிருக்கும்போது, அந்தப் பணியில் ஈடுபடாமல் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்புச் செய்தனர்.

இருந்தும் இராணுவத்தின் துணை கொண்டு கொரோனாத் தடை மருந்தேற்றும் பணி நடத்தப்பட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், பயணத் தடை தொடர வேண்டுமென்றோ பொது நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க வேண்டுமென்றோ அரசாங்கத்திடம் கேட்கின்ற தகைமையை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் இழந்து விட்டது.

ஆகவே இனிவருங்காலங்களில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளில் இருந்து பயணத் தடையும் பொது நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் விலக்குப் பெற்றுக் கொள்ளும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவை ஒருபுறமிருக்க, பயணத் தடையை நீக்குவதும் பொது நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்குவதும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்குச் சற்று ஒத்தடம் கொடுக்கும் என்று அரசு நம்புகிறது.

அரசின் இந்த நம்பிக்கை ஒரு சிறிய ஒளிக்கீற்றைக் காட்டினாலும் மேற்போந்த கட்டுப்பாட்டுத் தளர்வு, அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் உச்சப்படுத்தும் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதற்கான அங்குரார்ப்பணமே கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்கள் எனலாம்.

## கரணவாய்ப் பகுதி முடக்கலிலிருந்து விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை - கரணவாயில் ஒரு குடும்ப பின்னணியில் 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து குறித்த பகுதி முடக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 6 மணி தொடக்கம் முடக்கம் நீக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பை இராணுவ தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா விடுத்துள்ளார்.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கரணவாய் பகுதியில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 15 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து குறித்த பகுதி உடனடியாக முடக்கப்பட்டு கடந்த நாட்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-3)

## புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில் குளவி கொட்டியதில் குடும்பஸ்தர் காயம்

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் கிராமத்தில் குளவிக் கொட்டிற்கு இலக்கான 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

தேவிபுரம் பகுதியினை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் தென்னந்தோட்டத்தில் தேங்காய் பறிக்கும் தொழிலில் ஈடுபட்ட வேளை தென்னை மரத்தில் இருந்த குளவிகள் அவரைக் கொட்டியுள்ளன. இந்நிலையில் காயப்பட்ட நபர் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-3,281)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** மூன்று முறிப்பு, தரணிக்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** பெரியநொச்சிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## அரசியல் கைதிகள் ஜனவரிக்குள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இன்னுமொரு தொகுதி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு தயாராக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் பொருளாதார, அரசியல் சமூக பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றை கட்சிரீதியான பிரிவினைகளாக பார்த்துச் செய்தால் மக்களுக்கு நன்மை செய்யமுடியாமல் போகும். தேர்தல் காலத்தில் அரசியல் செய்வது வழக்கமான விடயம். ஆனால் தேர்தலுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன் என்றார்.

(ம-3,285,299)

## கிளிநொச்சியில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி ஏ -9 நெடுஞ்சாலையில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.


கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கிய திசையில் பயணித்த டிப்பர் ரக வாகனத்தை அதே திசையில் பயணித்த மற்றொரு டிப்பர் வாகனம் முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதால் விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த பாஸ்கரலிங்கம் பிரசன்னா (வயது 30) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே படுகாயம் அடைந்துள்ளார். படுகாயம் அடைந்த அவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-3,100,350)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கடைசியானோர் முதன்மையாவர். முதன்மையானோர் கடைசியாவர்"

❖ "என் இல்லம் இறைவேண்டலின் வீடு என அழைக்கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால், நீங்கள் இதைக் கள்வர் குகையாக்குகிறீர்கள்"

❖ நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்"

❖ 'கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது. நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று!'

❖ 'அழைப்புப் பெற்றவர்கள் பலர், ஆனால், தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ சிலர்."

❖ சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்"

❖ 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை.

❖ 'உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

**சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக நாடுகளின் இளவரசர்கள் இடையே ஏற்பட்டுள்ள மோதலால் கச்சா எண்ணெய் விலை 6 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.**

பெற்றோலிய உற்பத்தி அளவு மற்றும் அதன் விலையை மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஒபேக் கூட்டமைப்பு நாடுகள் தீர்மானிக்கின்றன.

கொரோனா காரணமாக கச்சா எண்ணெய் உற்பத்தியில் இருந்த தேக்கத்திற்கு முடிவு கட்டி உற்பத்தியை அதிகரிக்க உறுப்பு நாடுகள் விருப்பம் தெரிவித்தன.

ஆனால் மசகு எண்ணெய் உற்பத்தி அளவை 8 மாதங்களுக்குப் பிறகு அதிகரிக்கலாம் என்று சவுதி அரேபியா மற்றும் ரஷ்யா யோசனை தெரிவித்தன. இதனை ஐக்கிய அரபு அமீரகம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மசகு எண்ணெய் உற்பத்திக்கு ஐக்கிய அரபு அமீரகம் செய்துள்ள முதலீடுகளே இதற்குக் காரணமாகும். இப்பிரச்சினையால் கடந்த வாரம் நடைபெற இருந்த ஒபேக் நாடுகள் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே சவுதி அரேபியா இளவரசர் முகமது பின் சல்மான் மற்றும் அபுதாபி இளவரசர் முகமது பின் சயித் இடையே தொழில், தூதரக உறவில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. சவுதி அரேபியா தமது நாட்டில் தொழில் தொடங்குமாறு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதனால் போட்டி உருவாகிய டுபாய் அபுதாபியின் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஐக்கிய அரசு அமீரகம் கருதுகிறது.

மேலும் இஸ்ரேல் உடன் ஐக்கிய அரபு அமீரகம் தூதரக உறவை ஏற்படுத்திக் கொண்டதும் சவுதி அரேபியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற மோதல் போக்கும் மசகு எண்ணெய் உற்பத்தி தேக்கமடைய காரணமாக கருதப்படுகிறது. (நி-8)

# திருட முற்பட்டவர் அடித்துக் கொலை

(கொழும்பு)

கொழும்பு - வத்தளை பகுதியில் வீடு புகுந்து திருட முற்பட்டதாகக் கூறப்படும் ஒருவர் வீட்டு உரிமையாளர்கள் தாக்கியதில் உயிரிழந்தார்.

உயிரிழந்த 32 வயதான சந்தேக நபர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் வீட்டிற்குள் புகுந்து திருட முயன்றதாக தெரிய வருகிறது.

இதனை அவதானித்த வீட்டு உரிமையாளர்கள் கிரிக்கெட் மட்டையால் அவரைத் தாக்கியுள்ளனர்.

இதில் பலத்த காயமடைந்த சந்தேக நபர் ராகமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உயிரிழந்த சந்தேக நபர், கடவத்தை, கிரிபத்கொடை, வத்தளை உள்ளிட்ட பகுதிகளில் 24 வீடுகளை உடைத்துத் திருடியுள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை தண்டனைச் சட்டக் கோவை பிரிவு 96 இன்படி இரவில் இடம்பெறும் கொள்ளை அல்லது திருட்டு முயற்சி ஒன்றின் போது பாதிக்கப்பட்டவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக பதில் நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை உள்ளது என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சுகாதார விதிமுறைகள் சட்டமாகாது இளம் சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

கொரோனா ஒழிப்புக்கான சுகாதார விதிமுறைகளை பயன்படுத்தி அரசாங்கம் பொது மக்களை நசுக்குகின்றது. சுகாதார விதிமுறைகள் என்பது வெறும் கட்டுபாடு என்பது மாத்திரமே தவிர அவை சட்டமாகாது என கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது இளம் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினரான சட்டத்தரணி சுவஸ்திக்கா அருலிங்கம் தெரிவித்தார்.

இந்த விவகாரத்துக்கு ஆதரவு தெரிவித்து, பல்வேறுபட்ட சட்டத்தரணிகள் சங்கம் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை எடுத்துரைத்ததுடன், அரசாங்கத்துக்கும் பொலிஸாருக்கும் எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்த 33 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றம் அவர்களுக்கு பிணை வழங்கியிருந்த பின்னரும் அவர்களை பொலிஸார் வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கொரோனாத் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதாக கூறிக் கொண்டு பொதுமக்களையே கட்டுப்படுத்தின்றனர். மேலும், கொரோனா ஒழிப்புக்கான சுகாதார விதிமுறைகளைப் பயன்படுத்தி அரசாங்கம் பொதுமக்களை நசுக்குகின்றது. சுகாதார விதிமுறைகள் என்பது வெறும் கட்டுபாடு என்பது மாத்திரமே தவிர அவை சட்டமாகாது" என்றார்.

ஒரு ஜனநாயக நாடொன்றில் இவ்வாறு பொதுமக்களை அடாவடித்தனமாக நடத்துவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"ஜனநாயக நாடொன்றில் நாட்டின் பிரஜைகளை இவ்வாறு தண்டிப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டில் அவசரகால சட்டம், தீவிரவாத தடுப்பு சட்டம் ஆகியன காணப்பட்டபோதுகூட பொதுமக்கள் இவ்வாறு கடுமையாக நசுக்கப்படவில்லை. ஒரு ஜனநாயக நாடொன்றில் இவ்வாறு பொதுமக்களை அடாவடித்தனமாக நடத்துவதை இளம் சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது" என அவர் தெரிவித்தார். (நி-8)

# 15 ஆம் திகதி நாட்டிற்கு 10 இலட்சம் மொடர்னா கிடைக்கும்

(கொழும்பு)

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 10 இலட்சம் டோஸ் மொடர்னா தடுப்பூசிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கைக்கு கிடைக்கும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த தடுப்பூசிகளை கண்டி மாவட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இதற்கிடையில், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி, எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மீதமுள்ள 600,000 தடுப்பூசிகளை கொழும்பு பகுதியில் உள்ள மக்களுக்கு விநியோகித்த பின்னர் கேகாலை பகுதி மக்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, வரவிருக்கும் பைசர் தடுப்பூசி வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி-8)

# வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் பலி

(கம்பளை)

கம்பளை, தொலஸ்பாகை வின்டபோரஸ்ட் பகுதியில் நேற்று அதிகாலை வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய நபரொருவரே இவ்வாறு [illegible]கியுள்ளார்.

கம்பளை பகுதியில் நேற்று முன்தினம் இரவு முதல் அடைமழை பெய்து வருகின்றது.

இந்நிலையிலேயே நேற்று அதிகாலை குறித்த வீட்டின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். (நி-8)

# காற்றினால் மரங்கள் முறிவு

## மின்சாரம் தடை, 475,000 பேர் பாதிப்பு





(கொழும்பு)

நாடெங்கிலும் நேற்று முன்தினம் இரவு திடீரென கடுமையான காற்று வீசியதுடன் மழையும் பெய்ததால் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

கொழும்பின் பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த பதாகைகளும் பெயர்ப்பலகைகளும் உடைந்து வீழ்ந்தன.

அத்துடன் பலத்த காற்றுக் காரணமாக சில வீடுகளில் கூரைகளிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 4 இலட்சத்து 75 ஆயிரம் பேர் மின்சார செயலிழப்பால் பாதிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக எதிர்வரும் நாட்களில் கடும் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டளவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதுடன் வடக்கு, வடமத்திய, மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் கடும் காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும்.

அதேபோன்று, சீரற்ற காலநிலையினால் காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33 பேர்...

ளது.

குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக கொரோனா தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 467 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## புதிய சுகாதார...

அனுமதி.

3 50 பேருடன் இறுதி கிரியைகளை நடத்தலாம்.

- ❖ 50 இருக்கைகளுடன் மாநாடுகள் / கருத்தரங்குகளை நடத்தலாம்.
- ❖ சினிமா திரையரங்குகள் மற்றும் அருங்காட்சியகங்கள் 50% வருகையுடன் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படுகின்றன.
- ❖ 6 உணவகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தனவினால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டது. (ம-3)

## மன்னார் பாலி...

ழந்துள்ளார்.

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த அரச உத்தியோகத்தரும் கணபதி அறக்கட்டளை அமைப்பின் மன்னார் மாவட்ட பொறுப்பாளருமான வைரவநாதன் யசோதரன் (வயது - 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

மன்னார் மாவட்டத்தில் அரச துறையில் பணிபுரிந்து வரும் குறித்த உத்தியோகத்தர் பணிபுரிந்து விட்டு வீடு நோக்கி நேற்று முன்தினம் மதியம் பயணித்த போது இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,60)

## +1,515...

இதன்படி பாதிக்கப்பட்ட மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 272,998 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## வடக்கு மாகாண...

தாகவும் எதிர்வரும் திங்கட்கிழமை அவர் பதவி ஏற்பார் என்றும் வடக்கு மாகாண உயர்பீடத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஓய்வுபெற்ற நிலையில் அவருடைய பதவிக்காக ஐவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் க.தெய்வேந்திரன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், முன்னாள் பிரதம செயலாளர் விஜயலட்சுமி, அ.பத்திநாதன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பின் சிரேஷ்ட மேலதிக செயலாளராக தற்போது செயற்படும் தெய்வேந்திரன் வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளர், நிக்கொட் திட்டப் பணிப்பாளர் என்ற பல உயர் பதவிகளை வகித்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## 26 ஆண்டுகளாக...

ஒழுங்கையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி இராசரத்தினம் என்பவரே சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் பிள்ளைகளைத் தேடியலைந்த நிலையில் உயிரிழந்த தாய் தந்தையர்களின் எண்ணிக்கை தற்போது 214 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## பருத்தித்துறை...

பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் நேற்று சனிக்கிழமை 2ஆம் குறுக்குத் தெருவில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 60 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை நடத்தப்பட்டிருந்தது. இதன்போது 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பகுதி முடக்கப்பட்டுள்ளது. (ம-3,33,60)

## கைது செய்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோவிட் தொடர்பான சுகாதார நடைமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்புகள் சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கின்றன.

அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் அவருக்கே இருக்கின்றது. அவ்வாறு இருக்கும்போது ஆர்ப்பாட்டம் செய்தவர்களை மோசமான முறையில் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றத்துக்கு ஆஜர்ப்படுத்தினர்.

அவ்வாறு நீதிமன்றத்துக்கு ஆஜர் படுத்தியவர்களுக்கு [illegible] வழங்கியபோதும், சுகாதார அதிகாரி அல்லது பொது சுகாதார அதிகாரியின் அனுமதி இல்லாமல் பொலிஸார், அவர்களை கைது செய்து கொண்டுவந்த பஸ் வண்டியிலேயே தனிமைப்படுத்த கொண்டு சென்றனர்.

அவர்களுக்கு பிசிஆர், பரிசோதனை எதுவும் இல்லாமல் இவ்வாறு அழைத்துச் செல்ல பொலிஸாருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது? இதன்மூலம் பொலிஸார் சுகாதார நடைமுறைகளை மீறி இருப்பதுடன் நாட்டின் அரசியலமைப்பையும் மீறி இருக்கின்றனர். சுகாதார அதிகாரிகளின் அதிகாரங்களை பொலிஸார் கையில் எடுத்துக் கொண்டுள்ளனர் என அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ம-3)

## தனிமைப்படுத்தல்...

தப்பட்ட தேரர்கள் இருவர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்திற்கு எதிராக பாராளுமன்ற சுற்றுவட்டத்திற்கு அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 33 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இவர்களில் தேரர்கள் இருவர் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 11 பேர் கேப்பாபுலவு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் நேற்று தனிமைப்படுத்தல் முகாமில் கொத்தலாவல சட்டத்தை உடன் கிழித்தெறியுமாறு கோரி போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். (ம-3,281)

## எந்த நாடகத்தை...

யும் நடத்துங்கள், அதுவரை பொறுமையாக இருங்கள்" என்று விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.

கோவிட் -19 தொற்று நோயிலிருந்து மக்களைப் பாதுகாக்க நாடு முறையாகத் திறக்கப்படும் நேரத்தில், கொரோனா தொற்றின் நான்காவது அலை உருவாகுவதைத் தடுக்குமாறு அரசியல்வாதிகளிடம் அவர் வலியுறுத்தினார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுற்றுலாவில் ஈடுபடுவோருக்கு சினோஃபார்ம் கோவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டத்தை கண்காணிக்கும் நிகழ்ச்சியில் நேற்று பங்கேற்றபோது அமைச்சர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

சுகாதாரத் துறையினை [illegible] படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை மீறுபவர்களுக்கு சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்து பேச உரிமை இல்லை என்றார்.

மக்கள் தொகையில் பெரும் சதவீதத்திற்கு கோவிட்-19 தடுப்பூசி கொடுத்த பிறகு, அனைத்து விளையாட்டுகளுக்கும் பார்வையாளர்களைத் திறக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-3)

## இரண்டு பேர்...

இருவர் உயிரிழந்துள்ளதுடன், 3 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மேல் சப்ரகமுவ, தென், மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் அவ்வப்போது சில நேரங்களில் இடியுடனான மழை பெய்யக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் 100 மில்லி மீற்றர் அளவில் மழைவீழ்ச்சி பதிவாக கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்யும். மத்திய மலை நாட்டின் மேற்கு சரிவில் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். சில நேரங்களில் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

வடக்கு, வட-மத்திய, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள், திருகோணமலை மாவட்டத்திலும் மழை பெய்யக் கூடும்.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் சிறு அளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள அதேவேளை மண்மேடுகளும் சரிந்து விழுந்துள்ளன. குறிப்பாக கேகாலை, நுவரெலியா, காலி, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



மெகா பவர்
திகதி 10/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0849
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
E 20 14 64 70 77

மஹஜன சம்பத
திகதி 2021/07/10
சீட்டிழுப்பு இலக்கம் 4501
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 2 0 2 8 9 3
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 10.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2796
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Z 08 20 29 48
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.07.10
சீட்டிழுப்பு இலக்கம் - 531
B 32 58 59 70
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416



அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1304
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 10.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 135,273,761
வெற்றி இலக்கங்கள் 09 48 51 60 ஆங்கில எழுத்து V
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3639
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 10.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 42,594,277
வெற்றி இலக்கங்கள் 34 47 56 73 ஆங்கில எழுத்து T
ரூ 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 3,797,122/=
திகதி : 10.07.2021
வெற்றி வாரம் : 3190
வர்ணம் : இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 21 25 41 47
துலாம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,653,540/=

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1478
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 10/07/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
X 02 22 40 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் 57,892,204/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் 23 பேர் உட்பட வடக்கில் 34 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறையில் 23 பேர், வவுனியாவில் 08 பேர் உட்பட வடக்கில் 34 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பருத்தித்துறையில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 23 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் நேற்றைய ஆய்வுகூட முடிவுகள் வருமாறு,

வவுனியாவில் எட்டுப்பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் 521 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர், யாழ். போதனா வைத்தியசாலையில் 02 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேருக்கும், யாழ். போதனாவில் 34 பேருக்கும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 03 பேருக்கும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 185 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படவில்லை. அவர்களில் 12 பேருக்கு மீள் பரிசோதனை செய்யப்பட வேண்டியுள்ளதாக வைத்தியசாலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


## வேலைக்கு ஆட்கள் தேவை

இலங்கையில் பிரசித்திபெற்ற நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை. ( யாழ்ப்பாணம், கிளிநொச்சி ) ஆர்வமுள்ளோர் நாளையும் நாளை மறுநாளும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்க முடியும்.

❖ சாரதி அனுமதிப் பத்திரம், சிறந்த communication skills முன்னுரிமை அழிக்கப்படும்.

❖ சாரதி அனுமதிப் பத்திரம் உடைய பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் (வெளிக்கள உத்தியோகத்தர் பெண்கள் வடமாகாண ரீதியாக). (7182)

077 725 5505 | 070 411 5429

## வேலையாட்கள் தேவை

சர்வதேச ரீதியில் இயங்கும் நிதி நிறுவனத்துக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

- சந்தைப்படுத்தல் விற்பனையாளர்
- சந்தைப்படுத்தல் விற்பனை முகாமையாளர் ( முன் அனுபவம் விரும்பத்தக்கது )
- சந்தைப்படுத்தல் அதிகாரி ( Basic - 40,000/= )

(7186)

தொடர்புகளுக்கு தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 158 7228

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 11/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

( பிரித்துக் கொடுக்கப்படும்.)

1 பரப்பின் விலை 5 இலட்சம் மட்டும் (7173)

076 221 2037, 076 734 1023
077 064 2661

## Sales Representative Job

Immediate Vacancy for Distributor marketing representative for a well reputed company related to hardware business in the Northern Area. with Attractive Salary. (C-2324)

Please Forward CV : raviwarman@gmail.com
Contact Number : 077 358 3693

## Inner Circle வேலை வாய்ப்பு

எம்முடன் இணைந்து பகுதி நேர அல்லது முழுநேர வெற்றிகரமான தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



❖ Customer service
❖ Supervisor
❖ Delivery Representative
❖ Tele caller & Data entry operator

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி,மன்னார் பிரதேசத்தில் வசிக்கும் 18-30 வயதிற்குட்பட்ட, O/L A/L பயின்ற, முன் அனுபவம் உள்ள/அற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வருமானம் குறைந்தது 45,000/= (7183)

அழைக்க 076 770 7759
076 756 5659

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

LML Select HA இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள இருசக்கர வாகனம் விற்பனைக்கு. (7184)

077 262 6813

## மோட்டார் சைக்கிள் தேவை

பெண்கள் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிள் தேவை. (7184)

076 654 5987

## PERSONAL CLASS

இரசாயனவியல் A/L 2021 - 2022
Repeat Batch, Past Papers
கற்பிக்கப்படும். (7175)
சி.அங்கதன் B.Sc (Chem.spl.)

075 436 4510

## வீடு வாடகைக்கு தேவை

கொடிகாமம், மீசாலை, வரணி, மிருசுவில், மட்டுவில் பிரதேசத்தில் போக்குவரத்து வசதியுள்ள அண்மவிடத்தில் வீடு வாடகைக்கு தேவை. (C-2328)

075 668 3117

## DEWMAS JOB BANK

வேலையாட்கள் தேவையா?
074 138 3368
யாழ். வேலை வாய்ப்புகளுக்கு
dewmasweb.com (7069)
51, Amman Road, Nallur.

## வெளிநாட்டு வரன் தேவை

1993 ஆம் ஆண்டு பிறந்த மணமகன் (கிறிஸ்தவ மதம்) வெளிநாட்டு வரன் தேடுகின்றார். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். (7182)

077 936 1549

## Computer Operator ஆண் தேவை

ஹாட்வெயர் விநியோகத் தளத்திற்கு நன்கு கணனி அனுபவமுள்ள (குறிப்பாக MS Office) வேலையாள் தேவை. (C-2324)

021 222 9733
077 358 3693
076 686 1851

S.P.N MOTORS
No- 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தேங்காய் எண்ணெய் ஊற்றிக் கொடுக்கப்படும். (7154)

மதுசாலினி அரைக்கும் ஆலை
பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமை, இனுவில்.

070 494 3990

## உள்நாடு, வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை

DHL உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தி யாலங்களில் ஒப்படைக்கப்படும்

வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
( நிபந்தனைக்குட்பட்டது .)

Lanka Cargo Worldwide Express



315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7183)

077 038 5584

## நடிகர், நடிகைகள் தேவை

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட உள்ள திரைப்படத்திற்கு நடிகர்,நடிகைகள் தேவை. ஆர்வம் உள்ளவர்களும் (புதுமுகம்) வரவேற்கத்தக்கது. அண்மையில் எடுத்த புகைப்படத்தையும் விபரங்களையும் அனுப்பி வைக்கவும். (7186)

WhatsApp- 077 667 7175

## ST. ANTONY'S COMPUTER



99,000/= முதல் (C-2317)

021 222 4865
075 069 8608
189, K.K.S Road,
Jaffna Town.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், நற்பழக்கமுடைய, 1990 அனுஷம் 8 இல் செவ்வாய், இலங்கை வங்கி பாதுகாவலராக பணிபுரியும் மணமகனுக்கு நற்பழக்கமுடைய இந்து மணமகளை எதிர்பார்க்கின்றோம். (C-2323)

077 564 4977 | 076 771 1953

## அண்ணா Express Courier Service விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2270)

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2269)

0768226240 DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 309

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 11.07.2021 தொலைபேசி : 021 222 3378





## அரசுக்கு எதிராக...





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

நீண்ட நாட்களாக ஆலடி மாநாட்டைக் கூட்ட முடியவில்லை. கொரோனாத் தொற்றுக் காரணமாக வீட்டிற்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய சூழ் நிலை. இந்த இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தியிருக்கக்கூடிய கொரோனாத் தொற்று முழுமையாக நீங்கி உலக மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழ இறைவன் தான் உதவிசெய்ய வேண்டும். பண்டிதர் பரமலிங்கம் கண்களை மூடிப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

பண்டிதரின் பிரார்த்தனையோடு ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** என்ன இருந்தாலும் கொரோனாத் தொற்றினால் இறந்தவர்களின் உடலை ஏதோவொரு வகையில் தொற்று நீக்கி, அந்த உடலை உறவினர்களிடம் ஒப்படைத்து உரிய இறுதிக் கிரியைகளை நடத்தித் தகனம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்க வேணும்.

**மூப்பர்:** கொரோனாத் தொற்றினால் இறந்தவரின் உடலிலிருந்து தொற்றுப் பரவும் என்பதால் தானே உறவுகளிட்ட உடலைக் கொடுக்காமல் விட்டவியள்.

**விதானையார்:** கங்காணியார் நீங்க சொல்லுறது உண்மைதான். ஆனால் கொரோனாத் தொற்றால் இறந்ததற்காக இறந்தவரின் உடலை வீட்டில் வைத்து அழுது கண்ணீர் விட்டு செய்ய வேண்டிய இறுதிக்கிரியைகளை உற்றார், உறவுகள் செய்து பூதவுடலை மயானம் கொண்டு எரிக்கும்போது, அதனால் இழப்பின் துயரம் ஆற்றுப்படுத்தப்படுகிறது.

ஆனால் இறந்தவரின் உடலைக் கூடப் பார்க்க முடியாத அளவில் மூடிக் கட்டிக்கொண்டு போய் தகனம் செய்வதென்பது எந்தக் காலத்திலும் தீராத துன்பத்தைத்தான் தரும்.

இவ்வாறு விதானையார் கூற, கங்காணி கார்த்திகேயன் கண்ணீர் விட்டு அழுதார்.

கங்காணியாரின் அழுகைக்கான அர்த்தத்தை ஆலடியில் இருந்தவர்கள் புரிந்து கொண்டனர்.

கங்காணி கார்த்திகேயனின் தமையன் கடந்த மாதம் கொரோனாத் தொற்றினால் இறந்து போனார்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில சத்திர சிகிச்சைக்காகச் சென்ற அவர் சில நாட்கள் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தபோது அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

அவரின் இறப்பு அறிவிக்கப்பட்டது. மனைவி, பிள்ளைகள், கங்காணியார் என எல்லோரும் அழுது புலம்பினர். எப்பாடுபட்டாவது அவரின் உடலை வீட்டுக்கு எடுத்து வந்து சைவக்கிரியைகளைச் செய்து தகனம் செய்ய வேண்டும் என்று கடும் பிரயத்தனம் செய்தனர்.

என்னசெய்வது, கொரோனாத் தொற்றால் இறந்தவரின் உடலை உறவுகளிடம் ஒப்படைக்க முடியாது.

மாறாக கொரோனாப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடலைக் கொண்டு சென்று மின் அடுப்பில வைத்து தகனம் செய்தினம்.

அந்த இறுதி நேரத்திலகூட இறந்தவரின் உடலைப் பார்க்கமுடியவில்லையே என்ற வேதனை கங்காணி கார்த்திகேயனின் குடும்பத்தை வாட்டி வதைக்கிறது. அதுதான் கங்காணியார் விம்மிவிம்மி அழுவதற்குக் காரணமாயிற்று.

இந்தச் சம்பவம் ஆலடியில் இருந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இந்தத்தாக்கத்தின் எதிரொலியாகத்தான் கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடலை ஏதோவொரு வகையில் தொற்று நீக்கி அந்த உடலை உறவினர்களிட்ட ஒப்படைக்க வேணும் என்று விதானையார் விசுவலிங்கம் கருத்துரைத்தார்.



நஞ்சருந்தி இறந்தவரின் உடலிலும் உயிரோடு இருந்ததாம் கொரோனாக் கிருமி

**பண்டிதர்:** விதானையர் விசுவலிங்கத்தின் ஆதங்கம் நியாயமானது தான். இதுபற்றி வைத்திய நிபுணர்களும் சம்பந்தப்பட்ட சுகாதாரத் தரப்புகளும் சிந்தித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனாத் தொற்றினால் இறந்தவரின் உடலை தொற்று நீக்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தால் அதனைச் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் எனப் பண்டிதர் பரமலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

பண்டிதர் இவ்வாறு கூறியதும்ஆலடியில் சில நிமிடம் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

விதானையாரின் கருத்தும் பண்டிதரின் கோரிக்கையும் நியாயமானவை தான். ஆனால் அண்மையில ஒருவர் நஞ்சு மருந்து அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவரைப் பரிசோதித்த வைத்தியசாலை நிர்வாகம் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பதாகக்கூறி, அவரின் உடலை உறவினர்களிட்ட ஒப்படைக்க மறுத்துவிட்டது.

**சாத்திரியார்:** இதென்ன நாசமறுப்பு.

கொரோனாக் கிருமி நஞ்சு மருந்துக்குத்தான் அழியும் எண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியபோது, அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அப்படியெண்டால் கொரோனாத் தொற்று வந்தவருக்கு ஒரு குறிப்பிட்ட அளவில் நஞ்சு மருந்தைக் கொடுத்தால் என்ன? என்று கேட்டவர்.

ஆனால் இங்க நஞ்சு மருந்து அருந்தி தற்கொலை செய்தவரின்ர உடலில கொரோனாக் கிருமி உயிரோட இருந்தது எண்டால் அமெரிக்க விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை பொய் என்று எங்கட ஆட்கள் உறுதிப்படுத்தியிருக்கினம் போல...

**மூப்பர்:** ஓ! கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கூட்டிக்காட்ட வேணும் எண்டாலும் இப்படியான வேலை செய்யலாம்.

ஆனாலும் நஞ்சு மருந்தை அருந்தி உயிரிழந்தவரின்ர விடயத்திலயாவது எங்கட வைத்தியசாலைகள் சற்றுச் சிந்தித்துச் செயற்பட்டிருக்க வேணும்.

இவ்வாறு மூப்பர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் "சீன" செல்வாக்கு

> "உலக நாடுகளின் அதிகாரப் போட்டிக்கு இலங்கை ஒரு களமாக அமைந்துவிடக்கூடாது. அப்படி அமையுமாயின் அது நல்லதல்ல. அது அழிவுக்கான ஆரம்பமே."

கொரோனாவுக்கு முடிவு கட்ட வேண்டும் என்றால் உலகத்தில் உள்ள அத்தனை பேருக்கும் தடுப்பூசி ஏற்றுவதனூடு மட்டுமே முடியும்.

அதைவிடுத்து, சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடித்து நடப்பதென்பது தற்காலிகமாக கொரோனாவைத் தடுக்கும் முறையே தவிர, அது கொரோனாத் தொற்றுக்குத் தீர்வாகிவிடாது.




தற்போது நாடு முழுவதும் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி மிகவும் மும்முரமாக நடைபெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அதிலும் வடக்கில் தடுப்பூசி போட மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இது தடுப்பூசியால்தான் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே.

இது இவ்வாறிருக்க, வடக்கில் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் திட்டம் திட்டமிடப்பட்ட அட்டவணையினூடே நடைபெறுவதாய் தெரியவில்லை.

அதிலும் கொரோனாத் தடுப்பூசி பெறும் குறித்த இடங்களில் சுகாதார நடைமுறைகளைப் பேணுவது இம்மியும் இல்லை என்றே கூறவேண்டும்.

கொரோனாத் தடுப்பூசி போட வந்து கொரோனாவை வாங்கிச் செல்லும் செயல் நடைபெறுமோ எனும் அச்சம் ஏற்பட்டுள்ளதை இங்கு சொல்லித்தானாக வேண்டும்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கும் திட்டம் மிகப் பொருத்தமான திட்டம். அதை நாம் வரவேற்றுத்தானாக வேண்டும்.

ஆனால் இன்னோரன்ன பல உடல், உளப் பிரச்சினைகளுடன் வாழும் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களை அழைத்து, மணிக்கணக்கில் நிற்கவைத்து உபாதைக்குட்படுத்துவது பொருத்தமற்ற செயல்.

இங்கு சரியான திட்டமிடல் இல்லை எனும் விடயத்தைச் சொல்லித்தானாக வேண்டும்.

அண்மையில் தெல்லிப்பளைப் பகுதியில் அறுபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது. ஆனால் பலர் தடுப்பூசி பெறாமல் திரும்பிச் சென்றதனை அவதானிக்க முடிந்தது.

தடுப்பூசி முடிந்துவிட்டதாகவும் மறுபடியும் தடுப்பூசி வந்ததும் போட்டுக்கொள்ளலாம். அறிவிப்போம் எனவும் அதிகாரிகள் கூறியதாக பொது மக்கள் கூறினர்.

இவை குறித்த பகுதிகளில் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளாமல் செயலில் இறங்கியதை எடுத்தியம்புகின்றது.

தடுப்பூசியை மக்கள் ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டாலும் தடுப்பூசியில் நம்பிக்கையற்ற பலரையும் அவதானிக்க முடிந்தது.

அதிலும் சீனத்தடுப்பூசி வேண்டாம் எனப் பலர் கூறியதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

தற்போது இலங்கையில் சீன நாட்டின் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியே அதிகம் மக்களுக்குச் செலுத்தப்படுகின்றது.

உலக நாடுகளில் கொரோனாத் தடுப்பூசிக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவும் இந்தவேளையில், சீனா இலங்கைக்குத் தாராளமாக தடுப்பூசிகளை வழங்கி வருகின்றமை இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நல்லுறவைப் பறைசாற்றி நிற்கின்றது.

சீனா, இலங்கைக்கு தடுப்பூசியைத் தாராளமாய் வழங்குவதற்குள் பாரிய அரசியல் இருப்பதாய் அரசியல் விமர்சகர்கள் கூறிவருகின்றனர். இதை மறுப்பதற்கு இடமில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

கொழும்பு துறைமுக நகர விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்ததும் சீனா கலங்கிவிட்டது என்பதே உண்மை.

ஏனெனில், கொழும்பு துறைமுக நகரை சீனாவுக்குத் தாரை வார்க்கக்கூடாது எனவும் அது சீனக் காலனித்துவம் அமைய வழிவகுக்கும் எனவும் சிங்கள மக்கள் போர்க்கொடி தூக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அவை எவையும் எடுபடவில்லை என்று கூறும் அளவில் இலங்கை அரசின் காய்நகர்த்தல்கள் அமைந்தன.

இதன்விளைவு, கொழும்பு துறைமுக நகர சட்டவரைபு பெரும்பான்மைப் பலத்துடன் பாராளுமன்றில் நிறைவேறியது.

இன்று இலங்கையில் திடமாய் கால்பதிக்க துடிக்கும் சீனாவிற்குப் பெரிதும் குஷியைக் கொடுத்துள்ளது. தடுப்பூசியின் தாராள விடயமும் இதையே எடுத்தியம்புகின்றது.

இது போதுமா? இன்னும் வேண்டுமா? எனும் நிலையே இப்போது தடுப்பூசி விடயத்தில் சீனா இலங்கையைப் பார்த்துக் கேட்பதாய் அமைந்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, இலங்கை-சீன உறவை வலுப்படுத்தும் வகையில் அண்மையில் ஆயிரம் ரூபாய் நாணயக் குற்றி இலங்கை மத்திய வங்கியால் வெளியீடு செய்யப்பட்டது.

இதில் இலங்கை-சீன தேசியக் கொடிகள் பொறிக்கப்பட்டிருந்தமை இலங்கை- சீன உறவின் வலுவைப் பறைசாற்றுகிறது.

அண்மையில் நிகழ்வொன்றில் பேசிய முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன்,

ஆமைபுகுந்த வீடும் சீனா புகுந்த நாடும் உருப்படாது எனப் பேசியிருந்தார்.

இதனூடே அவர் ஆட்சியாளர்களை எச்சரித்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கொரோனாத் தோற்றம் பற்றி உலக நாடுகள் அக்கறை செலு த்தத் தொடங்கியிருக்கும் இந்த வேளையில், கொரோனா சீனா வின் வுஹான் மாகாணத்தில் தோற்றுவிக்கப்பட்டதாக தொடர்ந்து அமெரிக்கா குற்றம் சாட்டி வருகின்றமையினை நாம் கவனித்தே ஆகவேண்டும்.

அத்துடன் எம் அயல் நாடான இந்தியாவுக்கும் சீனாவுக்குமான உறவில் பாரிய விரிசல் நிலை காணப்படும் இவ்வேளையில், சீனாவுடன் ஒட்டி இலங்கை இந்தியாவுக்குக் கடுப்பேற்றுவதாய் எதிர்க்கட்சியினர் கூறி வருகின்றமையினை சர்வ சாதாரணமாய் விட்டுவிட முடியாது.

வல்லரசுப் போட்டி உலக நாடுகளிடையே இப்போது தலைவிரித்தாட ஆரம்பித்து விட்டது.

இதில் செவ்வாய்க்கிரகத்திற்கு வெற்றிகரமாக ரோபோவை தரையிறக்கியமை, விண்வெளியில் தனக்கென தனித்த சர்வதேச விண்வெளி ஓடத்தை தயார் செய்கின்றமை போன்ற சீனாவின் உச்ச வளர்ச்சி உலக நாடுகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

உலக நாடுகளின் அதிகாரப் போட்டிக்கு இலங்கை ஒரு களமாக அமைந்துவிடக்கூடாது. அப்படி அமையுமாயின் அது நல்லதல்ல. அது அழிவுக்கான ஆரம்பமே.

எது எப்படியோ கொரோனா என்கின்ற கொடூரத்தை அழிக்க நாம் அனைவரும் கைகோர்த்து ஒன்றிணைந்து செயற்படவேண்டியது இன்றைய காலத்தின் தேவை.


**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ராஜாவும் முட்டாள் குரங்கும்



அன்று முதல் குரங்கு, ராஜாவை விட்டு ஒரு நிமிஷம்கூட விலகாம அவர் எங்கு போனாலும் கூடவே போறதும் வர்றதுமா இருந்தது.

ஒருநாள் ராஜா குரங்கிடம் 'எனக்கு தூக்கம் வருகின்றது. நான் கொஞ்ச நேரம் நல்லா தூங்கப் போறேன். என்னை யாரும் தொந்தரவு செய்யாம பார்த்துக்க'ன்னு சொல்லிட்டு தூங்க ஆரம்பித்தார்.

குரங்கும் ரொம்ப அக்கறையா, படுக்கைக்குப் பக்கத்துலேயே இருந்து காவல் காத்தது. அந்த சமயம் பார்த்து அங்க ஒரு ஈ வந்தது. அது ராஜா காது கிட்ட வந்து 'ஸொய் ஸொய்” ன்னு சுத்தி ராஜாவை தொந்தரவு செய்தது. குரங்கு 'சூசூ”ன்னு துரத்துச்சு.

கொஞ்ச நேரம் கழிச்சி, அந்த ஈ திரும்பவும் அங்கேயே சுத்தி சுத்தி வந்துக்கிட்டே இருந்தது. குரங்குக்கு கோபம் தாங்கல. ஈக்குத் தகுந்த பாடம் புகட்டணும்னு தீர்மானிச்சிடுச்சு. அது ராஜாவோட வாளை கையில் எடுத்தது.

இந்த முறை ஈ வந்தா அதை ஒரே போடு போட்டு ரெண்டு துண்டாக்கிட வேண்டியது தான்னு முடிவு செய்தது.


நடப்பது எதுவும் தெரியாத ராஜாவோ பாவம் நிம்மதியா தூங்கிக்கிட்டிருந்தாரு. ஈ திரும்பவும் வந்தது. இந்தத் தடவை அது ராஜாவோட கழுத்துக்கு மேல பறந்தது.

தயாராக இருந்த அந்த குரங்கும் ஈயை ஒரே வெட்டா வெட்டிடுச்சி. ஐயோ! என்ன பரிதாபம்! ஈ பறந்து தப்பிச்சிடிச்சு. ராஜா தலை துண்டாகிப் போச்சு. இப்படியாக, ராஜா தன்னோட சொந்த பாதுகாவலனாலேயே கொல்லப்பட்டுட்டாரு.

ராஜா இறந்த விடயத்தைக் கேள்விப்பட்டு அந்த நாட்டு மக்களும் மந்திரிகளும் சோகத்துல மூழ்கிட்டாங்க.

**நீதி: புத்திசாலியான எதிரியைவிட முட்டாளான தோழன்தான் ரொம்ப ஆபத்தானவன்.**

# மகாபாரதம்




பன்னிரெண்டு கால்கள் பன்னிரெண்டு மாதங்கள். வருடமே யானை. காலபாசம் தான் கரு நாகம். கொடிகளைக் கடிக்கும் கறுப்பு, வெள்ளை எலிகள் இரவு பகல்கள்.

அவை மனிதனின் வாழ்நாளை குறைத்துக் கொண்டே இருக்கின்றன. அவன் பெறுகின்ற தேன் துளி போன்ற இன்பமே இந்த உலக வாழ்வு.

எனவே ஒவ்வொரு விநாடியும் நமது வாழ்நாள் குறைந்து கொண்டே வருகிறது என்பதை உணர வேண்டும்.

இறுதியில் மரணம் என்பது யாவராலும் தவிர்க்க முடியாததாகும்! என நாளும் நாளும் மனிதன் சாகின்றான் என்பதை விதுரர் தெளிவாக விளக்கினார்.

வியாசரும் திருதராட்டிரனுக்கு ஆறுதல் கூறினார். ஆயினும் அவன் சினம் அடங்கவில்லை.

கண்ணன் தருமரை அறிமுகப்படுத்த சாதாரணமாக தழுவிக் கொண்ட திருதராட்டிரன் பீமனை தழுவும் போது அறிவிழந்தான். அவன் மனநிலையை அறிந்திருந்த கண்ணன் பீமனைப் போன்ற இரும்பாலான ஒரு பதுமையைக் காட்டினார்.

திருதராட்டிரன் அந்த இரும்பு பதுமையை இறுகத் தழுவி பொடியாக்கினான்.


“இன்னுமா உன் வெறுப்பு தீரவில்லை? இந்த கெட்ட எண்ணமே உன் குல நாசம் அடையக் காரணம்” எனக் கண்ணன் கூற நாணித் தலைக் குனிந்தவன், மனம் தெளிந்து பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரை தழுவிக் கொண்டான்

பாண்டவர்கள் காந்தாரியைக் காணச் சென்றனர். காந்தாரியின் சினம் கண்ட வியாசர் “நீ கோபப்படுவதால் பயன் இல்லை.

நீ போருக்கு முன் துரியோதனனிடம் கூறியது என்ன.? தருமம் உள்ள இடத்தில் வெற்றி நிச்சயம் என்றாய்.

பாண்டவர்கள் பக்கம் தருமம் இருந்ததால் அவர்கள் வெற்றி பெற்றனர். அவர்களை வாழ்த்துவாயாக” என்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையின் உறுதி சீனாவிடம் ஈடு வைக்கப்படுகிறதே?

**தாருஷா — வதிரி**

**புதுமொழி ஒன்று சொல்லுங்கள் வியாசர் மாமா?**

கொட்டும் மழைக் காலம் உப்பு விற்கப் போனேன். காற்றடிக்கும் நேரம் மாவு விற்கப் போனேன் என்பது, இரண்டையும் பொதி செய்தால் எந்தக் கால நிலையிலும் விற்பனை செய்யலாம் என்றாகி விட்டது.

**கதிர் — வல்லை**

**கொரோனா வைரஸின் முடிவு எப்போது?**

என்னது கொரோனாவுக்கு முடிவா? அடேய் பக்கிப் பயலுகளே நீங்கள் என்னதான் எனக் கெதிராய் ஊசியைக் கண்டு பிடிச்சாலும் நான் டெல்ரா, லாம்ப்டா என்று உருமாறிக் கொண்டே இருப்பேன். எனக்கு என்டே இல்லையடா என எழுந்து கம்பீரமாய் நிற்கிறது கொரோனா.

**அருட்கதிர் — துன்னாலை**

**உடையவன் இல்லை என்றால் ஒரு முழம் கட்டை என்கிறார்களே வியாசரே அது என்ன?**

வீட்டில் அன்றைக்கென்று அம்மா இல்லை. பசி உயிரைக் கொல்கிறது. ஆட்டு இறைச்சிக் கறிவேறு. வாசனை தூக்கலாக இருக்கிறது. சாப்பிடுற நேரம் பார்த்து தங்கச்சியோட சிநேகிதிகள் வீடு வந்து விடுவார்கள்.

அம்மா இருந்திருந்தால் அடுப்பங்கரை வரைக் காவது போயிருக்கலாம்.

என்ன செய்ய ஒரு முறையுடன் கோப்பையைக் கழுவ வேண்டியதுதான்.

**கவி — மானிப்பாய்**

**நண்பன்-எதிரி என்பதற்குள் எப்படி தொடர்பாடல் இருக்கும்?**

எதிரி எப்போதும் எமக்கு எதிரியாகவே இருப்பான் என்று சொல்ல முடியாது. சில நேரங்களில் அவன் மனம் திருந்தி எமக்கு நண்பனாகக் கூட மாறிவிட வாய்ப்புக் கள் உண்டு.

ஆனால் நண்பன் என்பதில் எல்லா நண்பரும் நமக்கு நல்ல நண்பராய் இருப்பதில்லை. கூடவே நண்பன் போல் இருந்து கொண்டு குழி பறிக்கும் செயலில் ஈடுபடும் நண்பர்களும் இருக் கவே செய்கின்றனர்.




***அன்பின் சங்குநாத வாசகர்களே!***

***கொரோனா பெருந்தொற்றின் காரணத்தினால் பல வழிகளிலும் கஷ்டங்களை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் எமது மக்களின் நிலையறிந்து நாம் செயற்பட்டோம் என்பதை நினைத்து பெருமை கொள்கின்றோம்.***

***அந்த வகையில் மக்களாகிய உங்கள் முதுகுகளில் மேலும் சுமையேற்ற நாம் விரும்பவில்லை.***

***அதன் காரணத்தினாலேயே உங்கள் அபிமான சங்குநாதம் உங்கள் கரங்களில் வந்து சேர தாமதம் ஏற்பட்டது.***

***தற்போது நாட்டில் ஓரளவு சுமுக நிலை ஏற்பட்டதும் நாம் உங்களை மகிழ்விக்க உங்கள் கரம் தேடி வருகின்றோம். தொடர்ந்து வாசகர்களாகிய உங்கள் அன்பு-ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.***

**ஐங்கரன் — அம்பன்**


**வடக்கு மக்களுக்கு கொரோனா பயம் இன்னும் ஏற்படவில்லை ஏன் வியாசரே?**

தமிழ் மக்களின் மனம் எப்படிப்பட்டதென்றால் தமக்கு வருவது தான் இழப்பு. அதைத்தான் பெரிதாகப் பார்ப்பார்கள்.

அதே தனக்கு வராமல் அடுத்தவனுக்கு வந்தால் அது அடுத்தவனுக்குத்தானே என்ற அலட்சியம்.

தனக்கு வந்தால் இரத்தம். இல்லையென்றால் தக்காளிச் சட்னி என்பது போலத்தான்.

இந்த மனநிலை இருக்கும் வரை கொரோனவை எந்தக் கொம்பனாலும் ஆட்டவும் முடியாது. அசைக்கவும் முடியாது.



## வடக்கு மக்களுக்கு கொரோனா பயம் இன்னும் ஏற்படவில்லை ஏன் வியாசரே?

**சுதன் — குப்பிழான்**

**இலங்கையின் உறுதி சீனாவிடம் ஈடு வைக்கப்படுகிறதே?**

முன்னொரு காலத்தில் ஊருக்கு ஊர் உடையார் என்று ஒருவர் இருப்பார். அவர் பணக் கஷ்டம் வந்தவர்களுக்கு காணி- வீட்டு உறுதியை வாங்கிக் கொண்டு பணம் கொடுப்பார்.

ஒரு நாள் சோற்றுக்குத் திண்டாடும் ஏழை வருடக் கணக்கில் வாங்கிய பணத்திற்கு வட்டி கட்டி ஏலாது போக காணி–வீடு உடையாரின் சொத்தாகி விடும்.

அதே உடையார்-ஏழை உறவு போலத்தான் சீனாவுக்கும் இலங்கைக்கும் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம் என்ன நடக்கும் என.

**லக்ஷி — யாழ்ப்பாணம்**

**காதல் என்றால் ஏன் எல்லோரும் எதிர்க்கிறார்கள்?**

தன் பிள்ளை கெட்டுக் குட்டிச்சுவராகிப் போவதை எந்தப் பொற்றோர்தான் ஏற்பார்கள் சொல்லுங்கள்?

**கமல் — வல்லை**

**பெண்களின் ஆசையின் எல்லை எது வரை வியாசரே?**

தன் கணவன் வாங்கித் தந்த சேலையின் விலையிலும் அடுத்த வீட்டுக்காரி வாங்கிய சேலையின் விலை அதிகரிப்பை பொறுத்ததே அதன் எல்லை.

**எஸ்.சௌமியன் — கிளிநொச்சி**

**நாஸ்திகத்தின் மேல் உங்கள் பார்வை எப்படிப்பட்டது?**

நாஸ்திகர் என்பது கடவுள் இல்லை என்ற கோட்பாடு உடையவர்.

நான் நாஸ்திகவாதி, முன்னொரு காலத்தில். காலம், சூழல், நேரம் என்பன எம்மை மாற்ற வல்லன.

வீட்டில் இரவுவேளை தனியே இருக்கும் போது அறையில் இருந்த பொருட்கள் கீழே விழுந்து விட ஏற்பட்ட பதற்றம் பூனையைக் கண்டதும் அடங்கிவிடும்.

இதற்கு நாஸ்திகவாதி விதிவிலக்கல்ல.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 1532** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரம் பேசுது



கன்னியே உந்தன் கன்னக் குழியில்
கலந்திடும் புன்னகை கண்ணைப் பறிக்குது
எண்ணிய எண்ணங்கள் எங்கோ பறக்குது
ஏற்றிய தீபத்தின் ஒளியில் தெரியுது
அம்பு விழியோ அகல விரியுது
ஆடவர் உள்ளம் ஏங்கித் தவிக்குது
வண்டுகள் உன்னைத் தொட்டு மகிழுது
வானவில் உன்னைக் கட்டி அணைக்குது
சிலையின் ஓவியம் சிற்பியின் கைகளில்
சிறுத்தையும் குளிர சித்திரம் பேசுது

பி.வாசுகி
கொழும்பு

## தொப்புள்கொடி உறவு



ஆயிரம் ஆயிரம் பணமிருந்தும் ஆயுள்வரை பொருளிருந்தும்
அழகான மனையிருந்தும் கூடிப்பேச மனமிருந்தும்– என்ன பயன்
தாய் என்னும் உறவுக்கு தரணியிலே நிகருண்டோ...?
பத்து மாதம் சுமந்திடுவாள் பகல் இரவாய் விழித்திருப்பாள்
தான் உண்ண மறந்தாலும் தன் பிள்ளை உண்ண விழித்திருப்பாள்
மார்பாலே அணைத்திடுவாள் மழலை மொழி பேசிடுவாள்
மூச்சுக்கு மூச்சு தாலாட்டுப்பாடி பேச்சுக்குப் பேச்சு மழலை முகம் பார்த்து
தன் உடலை வருத்தி பிள்ளை உடல் வளர்த்தவளை
காலங்கள் கடந்தாலும் கரையாது தாய்ப்பாசம்
ஆறறிவு ஊட்டி அரிவரி படிக்க வைத்து அச்சம் போக்கி ஆளுமை வளர்த்து
எண்ணையும் எழுத்தையும் இலகுவாய் புரியவைத்து
உயர்தரம் செல்ல உச்சிமோந்து உள்ளம் குளிர வைத்த அன்னையவள்
பட்டம் எடுத்து பதவி பெற்ற பின் தாரத்தின் கதைகேட்டு
அவதாரத்தை அவமதிப்பதுவோ...?

அராலியூர்
ப.தர்மகுமாரன்

## சொந்த பந்தம்



துன்பப்படும் வேளையிலே நம்
துயர் துடைக்கும் சொந்தங்களாம்
தூக்கம் வராமல் தவிக்கும் வேளையிலே
துயருறும் உறவுகளைத்தான் பாராயோ

தொலைந்து போன சொந்தங்களை
தேடி அலையும் உறவுகள்தான் எத்தனையோ
ஊனமுற்று உருக்குலைந்து பாரினிலே
பரிதவிக்கும் உறவுகளைத்தான் பாராயோ

அயலவன் காணியை அடாத்தாகப் பிடிக்கும்
அற்பகுணம் கொண்ட
சொந்தங்கள்தான் இங்கே

துணையாக இருக்கும் துணைவியையே
துடிக்கத் துடிக்கக் கொல்பவன் மனிதனா
மனித வடிவிலே மிருகம் வாழும் நாட்டிலே

சொந்தமென்று சொல்வதா
பந்தமென பதறுவதா

பெ.தனா, தெல்லிப்பழை.

## மௌனத்தின் தேடல்- 528



## யாவும் கனவாகி விட்டது

கிட்டிப்புள் அடித்து
மகிழ்ந்தனர் அந்தக் காலம்
கால ஓட்டச்சக்கரமதில்
கிரிக்கெட் ஆட்டம் பார்த்து
இன்புற்றிருந்தோம்
எல்லாமே இன்று கனவாகிவிட்டது
வீட்டின் நான்கு சுவருக்குள்ளே
அமர்ந்து வார்த்தை ஓட்டம்
போடுகின்றோம் இப்போ

த.சிவா, நாவலர் வீதி

## மௌனத்தின் தேடல்- 529



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## இன்றைய சூழல்

பசுமையான நினைவோடு
காலங்கள் காத்திருந்தன
சிறுபிள்ளை விளையாட்டு
முற்றத்தில் சந்தோசம்
பள்ளிக்குச் செல்லும் நிலையில்
பள்ளியும் பூட்டு
இன்றைக்கோ கொரோனா
எம் கல்விச் சமூகம்
பின் தள்ளிப் போகுது
இன்றைய சூழலில்
துணிவோடு நில்

இ.அற்புதமேரி

## கிராமியக் கலை

இளமைப்பருவம் தனை
இனிமைப் பொழுதாக
களித்திடவே
வெயிலோடும் மழையோடும் போராடி
நல்ல நட்போடு உறவாடி
கிளர்ச்சி உணர்வுடன்
கிட்டிப்புள்ளு விளையாடிய
காலமெல்லாம்
கானல் நீராய் கனவாகிப் போனது
தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா
யா/ மெ.பெ. உ.பா

## பொழுதைப் போக்கிட

கொடிய கொரோனாவால்
சிறுவர்கள் நாம் கற்கும்
கல்விக்கூடங்கள் அனைத்தும்
நம்நாட்டில் இன்று
இழுத்து மூடப்பட்டன
நம் உடலுக்கும் உள்ளத்திற்கும்
என்றும் உற்சாகம் தரும்
விளையாட்டை இப்படி
சந்தோசமாய்க் கூடி விளையாடி
பொழுதைத் தினமும்
நாம் போக்குகின்றோம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## சிக்குண்டு போயினரே...

உள்ளம் பெருங்கோயில்
ஊன் உடம்பு ஆலயமாம்
திருமூலர் திருவாக்காக நாம்
தினம் விளையாட்டை
கடைப்பிடித்தோம் வீரியமாய்
வாழ்வதற்கு வித்திட்ட விளையாட்டு
விடுத்து செல்லிடப் பேசிக்குள்
சிறுவர் சிக்குண்டு போயினரே

சாமிபுத்திரன், காவலூர்

## வாழையடி வாழையாக

கிளித்தட்டு கிட்டிப்புள்ளு வாரோட்டம்
றவுண்ரேசு வாழையடி வாழையாக
பளிச்சிட்ட எம் விளையாட்டுகள்
உடல் நலம் உள நலம் நட்பு நலம்
பேணி வாழ்ந்தமையால் ஒற்றுமையாய்
வாழ்ந்தோம் கொரோனா கட்டளையை
மீறாமல் வேற்றுமைதானும் தேடாமல்
இயற்கையோடு இயைந்து வாழ்ந்திடுவோம்

வைகதன், கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேதகு உருவான கதை மனம் திறக்கின்றனர்

## இயக்குநர் கிட்டு, நாயகன் குட்டிமணி



"இப்போதிருக்கிற இளைஞர்களுக்கு ஈழம் குறித்த புரிதல் முழுமையாக இல்லை. இறுதிக்கட்டப் போரின் கொடுமைகள், போர்க்காட்சிகள், அதன் கொடூரங்கள் மட்டுமே தெரிஞ்ச பிம்பங்கள். ஆனால் ஈழத்தமிழர்களின் இந்தப் போராட்டம் ஏன் தொடங்கியது என்று சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது"

ஒரே ஒரு படம் 'மேதகு.' ஓ.டி.டி-யில் வெளியாகி அதுவே பேச்சாகியிருக்கிறது. ஆளாளுக்குப் பிரபாகரன் வாழ்க்கையைப் படமெடுக்கப்போகிறோம் எனச் சொல்லிக் கொண்டிருக்க, 'இதோ வந்துவிட்டேன்' என 'ஹிட்' அடித்திருக்கிறார் இயக்குநர் கிட்டு. அச்சு அசல் பிரபாகரனைக் கண் முன் நிறுத்தியிருக்கிறார் அறிமுக நடிகர் குட்டிமணி. 'மேதகு'வின் அத்தனை சிறப்புகளையும் மொத்தமாகத் தாங்கிய கிட்டு, குட்டிமணியோடு நடந்தது இந்த உரையாடல்.

"வயித்துல இருக்கிற வரைதான் வலி. குழந்தை நல்லபடியாக வெளியே வந்ததும் ஒருவித நிறைவான சுகம் இருக்கும்னு சொல்வாங்க. 'மேதகு' வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றதும் அந்த சுகத்தை உணர்றேன். ரொம்ப நல்ல படம் பண்ணியிருக்கேன்னு வேறு யாரும் சொல்றதுக்கு முன்னாடி எனக்கே தெரிஞ்சது. 'மேதகு' எனக்குள்ளே கூட நிறைய நல்ல மாற்றங்களைத் தந்த படம். வேடிக்கையும் குறும்புமா இருந்த மனுஷனை இந்த 'மேதகு' பண்படுத்தியிருக்கார்" - உற்சாகத்துடன் ஆரம்பிக்கிறார் இயக்குநர் கிட்டு.

"மதுரைக்குப் பக்கத்தில் இருக்கிற மஞ்சம்பட்டி கிராமம்தான் என் சொந்த ஊர். தாத்தா கூத்துக் கலைஞர். அந்தக் கலை அனுபவத்தின் தொடர்ச்சிதான் நான். எம்.டெக்.படிச்சிட்டு காலேஜ்ல வேலை பார்த்தேன். சினிமா மீதான ஆர்வத்தில் வெளியே வந்துட்டேன். இந்தப் படத்தோட க்ளைமாக்ஸை வெச்சு **The Rise of Karikalan**-ன்னு ஒரு ஷோர்ட் பிலிம் எடுத்தேன். அதைப்பார்த்துட்டு 'இதுவே இன்னும் பெரிய திரையில் சினிமாவா வந்தா நல்லாருக்குமே' என்று நண்பர்கள் சொல்ல ஆரம்பிச்சாங்க. அந்த எண்ணம் செயற்பாட்டுக்கு வர சுமேஷ் குமார், குமார், ரமேஷ் அண்ணன்கள் உதவ முன் வந்தார்கள்.

தலைவர் பிரபாகரனின் வாழ்க்கையே ஒரு பெரும்பயணம்தான். இனம், மொழி, சுதந்திரம், பாதுகாப்புக்காக அத்தனை எல்லைகளையும் உடைச்சிட்டு ஒரு மனுஷன் தேடிப் போன பயணம்தான் இது. விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கம். வெளிப்படையாக அதைப் பற்றி சினிமா எடுக்கவோ, தணிக்கைக்குழுவுக்குக் கொண்டுபோய் முழுசா மீளவோ முடியாத நிலைமை. தலைவர் இயக்கத்திற்காக ஆயுதம் ஏந்துகிற சூழலுக்கு வரும் வரைக்கான ஒரு பதிவு இது. நாங்க ஆரம்பிக்கும்போதே 'மேதகு' என போஸ்டர்கள் வெளியிட்டு விட்டோம். படப்பிடிப்புக்குப் போனா பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது பொலிஸாருக்கு இதன் விபரம் தெரியாமல் இருக்கணும். அதனால் கையில் ரெண்டு ஸ்கிரிப்ட் வெச்சிருப்போம். ஒன்று 'மேதகு', இன்னொன்று சாதாரண ஸ்கிரிப்ட்டாக இருக்கும். உளவுத்துறையினர் வந்தால் சாதாரண ஸ்கிரிப்டைக் காண்பித்து, 'இது ஒரு டோக்குமெண்டரி எனச் சொல்லுவோம். அங்கே படம் எடுத்ததற்கான எந்தத் தடயமும் இருக்காது. இப்படி ஒளிந்து ஒளிந்துதான் படத்தை எடுக்க முடிந்தது. கும்பகோணம், காரைக்குடி, புதுக்கோட்டைப் பகுதிகளில் படப்பிடிப்பு நடந்தது. தலைவர்மேல்பற்றுகொண்ட ஆர்வலர்கள் அத்தனை பேரும் துணை நின்றார்கள்.

இரகசியமாகவும், கதை பொலிஸாருக்குத் தெரிந்து விடாமலும் எடுத்ததால் நாலஞ்சு ஷெட்யூல் ஆனது. எல்லாருமே 30 வயதுக்குள்ளான இளைஞர் வட்டம். விறுவிறுப்பாக அடுத்த இடம் நகரவும் துரிதப்படுத்தவும் எங்களால் முடிஞ்சுது.

இப்போதிருக்கிற இளைஞர்களுக்கு ஈழம் குறித்த புரிதல் முழுமையாக இல்லை. இறுதிக்கட்டப் போரின் கொடுமைகள், போர்க் காட்சிகள், அதன் கொடூரங்கள் மட்டுமே தெரிஞ்ச பிம்பங்கள். ஆனால் ஈழத்தமிழர்களின் இந்தப் போராட்டம் ஏன் தொடங்கியது என்று சொல்ல வேண்டிய தேவை இருக்கிறது.

படத்தை நேர்த்தியாகக் கொண்டுவர முதலில் தலைவரின் அடையாளம் கொண்ட ஒருவர் வேண்டும். அதற்கான மெனக்கெடல் சொல்லி மாளாது. ஒருவர் தன் இளமைக்காலத்தைத் துறந்து இந்த முடிவை நோக்கிச் செல்கிறார் என்பதைச் சொல்லக்கூடியவகையில் வேகமும் இருக்க வேண்டும், தலைவர் பிரபாகரனைப் போன்ற தோற்றமும் வேண்டும். அவர் ரெகுலர் ஹீரோவாக இருக்கக்கூடாது. அப்படியே கதையை, உணர்வை ஏந்திக் கொண்டு எதார்த்தமாக நடிக்க வேண்டும். அப்போதுதான் நம்ம குட்டிமணி வந்தார். முதலில் அவர் அனுப்பியிருந்த படம் சரியாக இல்லை. தாடியும் மீசையுமாக இருந்ததால் பக்கத்தில் இருந்த சலூனுக்கு அனுப்பி தாடி மீசையை எடுக்கச் சொன்னேன். எடுத்துவிட்டு ஒரு படத்தை வட்ஸ் அப்பில் அனுப்பியிருந்தார். நான் நாற்காலியிலிருந்து எழுந்து 'தலைவர் கிடைத்துவிட்டார்' என்று கூவி விட்டேன். பிறகு 'தலைவரை பத்திரமாக அழைத்து வாருங்கள்' என்றுதான் சொன்னேன்" என்று கிட்டு விட்ட இடத்திலிருந்து தொடர்கிறார், 'மேதகு'வாக மாறிய குட்டிமணி.

"எனக்கு சினிமாதான் இஷ்டம். 'மேதகு'விற்கு நடிகர்கள் தேடுறாங்கன்னு தகவல் கிடைத்ததும் அவசரத்தில் கிடைத்த படத்தை அனுப்பினேன். அதில் கிட்டு அண்ணனுக்குத் திருப்தியில்லை. அப்புறம் தாடி மீசையெல்லாம் எடுத்துவிட்டுப் படம் அனுப்பினால், 'நீதான் தலைவர்' என்கிறார்கள். சிறு வேடம் கிடைக்குமா என்று போனவனுக்குப் பெரிய அதிர்ஷ்டம்.

தலைவராக நடிக்க வேண்டிய பெரும் பொறுப்பை உணர்ந்தேன். வழக்கமான ஹீரோ கிடையாது. விடுதலை உணர்வை மனதில் வைக்க வேண்டும். எதார்த்தத்திலிருந்து துளி பிசகக்கூடாது. புதுசா ஒரு உலகத்துக்குப் பயணமாகணும். ஈழத் தமிழ் பேச ரெண்டு மாசம் பயிற்சி நடந்தது. நல்ல உடல்கட்டுக்கு மாறத் தலைப்பட்டேன். நிதானமும் பொறுமையும் அடியாழம் வரை போய், தலைவராகவே என்னை நினைச்சுக்கிட்டேன். இதோ இப்போது எல்லோரும் பாராட்டுகிறார்கள். தலைமேல் தூக்கிக் கொண்டாடுகிறார்கள். 'ஈழத்திற்கு வாங்க தலைவரே' என சிவப்புக் கம்பளம் விரிக்கிறார்கள். 360 டிகிரியில் தலைவரை அப்படியே கொண்டு வந்துவிட்டேன் என்று உலகமெங்கும் அலைபேசியில் அழைத்துச் சொல்கிறார்கள். 'அப்படியே தலைவரை நேரில் பார்ப்பது போலிருக்கிறது' என அழுகிறார்கள். எல்லாவற்றுக்கும் கிட்டு அண்ணனுக்குத்தான் என் அன்பைச் சொல்ல வேண்டும்" என, இயக்குநரின் கரம் பற்றுகிறார் குட்டிமணி.

'மேதகு' திரைப்படம் கவனம் பெற்று வரும் சூழலில், இயக்குநர் கிட்டுவின் சமூகவலைதளப் பதிவுகள் சர்ச்சைக்குள்ளானது குறித்துக் கேட்டேன்.

"முன்பு திராவிடச் சித்தாந்தங்களை முற்றாக ஒதுக்கியிருந்தேன். நையாண்டியாகச் சில பதிவுகள் போட்டேன். அது அரசியல் விமர்சனமாக இருந்தது. சமயங்களில் தனிப்பட்ட விமர்சனமாகவும் ஆகிப்போச்சு. அடுத்தடுத்து சினிமாங்கிற இடத்துக்கு வந்தபோது அதிலிருந்து மீண்டு வந்துட்டேன். அப்படித் தாண்டி வரும்போது, அவங்களை வெறுமனே விமர்சனம் செய்வது மட்டுமே அரசியல் கிடையாதுன்னு புரிஞ்சது. அப்படியும் அந்தப் பதிவுகள் யாரையும் சங்கடப்படுத்தியிருந்தால் என்னை மன்னித்துவிட வேண்டுகிறேன். இப்போது என் பழைய பதிவுகள் சில மாற்றப்பட்டு வெளியாவது வேதனை அளிக்கிறது. அதைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டு மக்கள் 'மேதகு'வைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். 'மேதகு' படத்தின் அடுத்தடுத்த பாகங்கள் வெளியிடுவதற்கான எண்ணமிருக்கிறது. அது கைகூடும்!" என்கிறார் கனவுகள் மிதக்கும் கண்களுடன்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா மூன்றாம் அலை... ரஷ்யா, பிரிட்டன் நமக்கு உணர்த்துவது என்ன?

**உலக நாடுகள் பலவும் மூன்றாம் அலையை எதிர்கொள்ளத் தயாராகிவரும் நிலையில் ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் கொரோனா மூன்றாம் அலை வேகமெடுத்திருக்கிறது. அந்த இரண்டு நாடுகளும் மூன்றாம் அலையை எப்படி எதிர்கொண்டு, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன என்று உலகமே உற்றுநோக்கிவருகிறது.**

## தடுப்பூசித் தட்டுப்பாடு... தடுமாறும் ரஷ்யா!

ரஷ்யாவில் முதல் அலையில் அதிக பட்ச ஒரு நாள் பாதிப்பு 10,000 என்ற அளவிலேயே இருந்தது. ஆனால் 2020, ஒக்டோபர் மாத மத்தியில் வேகமெடுத்த இரண்டாம் அலை, டிசெம்பர் மாத மத்தியில் உச்சம் தொட்டு, நாளொன்றுக்குச் சராசரியாக 27 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர். தினசரி உயிரிழப்புகள் 600 ஐ தொட்டன. அதன் பிறகு அங்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் பாதிப்பு படிப்படியாகக் குறைந்தது. ஆனால், தளர்வுகளுக்குப் பிறகு ஜூன் முதல் வாரத்திலிருந்து ரஷ்யாவில் மூன்றாம் அலை வேகமெடுக்கத் தொடங்கியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இரண்டாம் அலை உச்சத்திலிருந்தபோது ஏற்பட்ட பாதிப்புகளை, மூன்றாம் அலையின் மத்தியிலேயே சந்தித்து வருகிறது ரஷ்யா. ஜூன் 29 ஆம் திகதி மட்டும் அங்கு 20 ஆயிரத்து 217 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே திகதியில் 643 பேர் இறந்திருக்கிறார்கள்!



இறப்புகளைத் தடுக்க தடுப்பூசி போடும் பணிகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறது ரஷ்யா. நாட்டின் 17 பகுதிகளில் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் பெரும் பாதிப்பைச் சந்தித்திருப்பது தலைநகர் மொஸ்கோதான். மொஸ்கோவிலுள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்களில், தடுப்பூசி செலுத்தாத 30 சதவிகிதம் பேரை பணியிலிருந்து தற்காலிகமாக வீட்டுக்கு அனுப்ப உத்தரவிட்டிருக்கிறது அரசு. அங்கிருக்கும் பெரிய மருத்துவமனைகளில், தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கு மட்டுமே பிற நோய் சார்ந்த சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. உணவகங்களிலும் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கான சான்றிதழ் அல்லது 72 மணி நேரத்துக்குள்ளாகப் பெறப்பட்ட கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் இருந்தால் மட்டுமே உணவருந்த அனுமதிக்கப்படுகின்றனர்.

இவை மட்டுமல்ல... ஆறு மாதங்களுக்கு முன்பாக இரண்டு டோஸ் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களையும், நோய் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ளவர்களையும் மீண்டும் தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தியிருக்கிறது மொஸ்கோ நகர நிர்வாகம். குறிப்பாக, சேவை சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிபவர்களில் 60 சதவிகிதம் பேருக்காவது ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மொஸ்கோவை அடுத்து கொரோனா பரவல் அதிகமிருக்கும் நகரம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க். அங்கு ஜூலை 1 ஆம் திகதி வரை ஆறு யூரோ கோப்பை கால்பந்து போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன. போட்டியைக் காண முதலில் 75 சதவிகித பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அதை 50 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறது நகர நிர்வாகம்.

தடுப்பூசி செலுத்திக்கொள்ள ரஷ்ய




அரசு இவ்வளவு வலியுறுத்தினாலும், அங்கும் தடுப்பூசி தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால், 14.4 கோடி மக்கள் தொகை கொண்ட ரஷ்யாவில் 11.9 சதவிகிதம் பேருக்கு மட்டுமே இரண்டு டோஸ் செலுத்தப்பட்டிருக்கிறது. 15.4 சதவிகிதம் பேர் ஒரு டோஸ் தடுப்பூசி மட்டுமே செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

## மரணங்களைத் தடுத்த கிரேட் பிரிட்டன்!

இங்கிலாந்தில் ஜூன் 15 ஆம் திகதி வரை 6,000 என்றிருந்த ஒரு நாள் பாதிப்பு, ஜூன் 28-ம் திகதி 18,478 என உயர்ந்திருக்கிறது. அதேசமயம், நாட்டின் மக்கள் தொகையில் 66.8 சதவிகிதம் பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும், 49.2 சதவிகிதம் பேருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியும் செலுத்தப்பட்டிருக்கிறது. இதனால், நாளொன்றுக்குச் சராசரியாக 14 பேர் மட்டுமே அங்கு கொரோனாவால் உயிரிழக்கின்றனர். இதற்கிடையே மூன்றாம் அலையின் தாக்கத்தைச் சமாளிக்க 12-17 வயதுடைய குழந்தைகளுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணியைப் பிரிட்டன் அரசு தொடங்கியிருக்கிறது.


வட அயர்லாந்தில் நாளொன்றுக்குச் சராசரியாக 250 பேரும், வேல்ஸில் 400 பேரும் தொற்றால் பாதிக்கப்பட்டுவருவதால் அங்கெல்லாமும் பெரும் நெருக்கடி இல்லை. ஆனாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சிறு சிறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அதேசமயம், ஸ்கொட்லாந்தில் மே மாத இறுதியில் 500-க்கும் குறைவாகவே இருந்த ஒரு நாள் பாதிப்பு தற்போது 3,000-ஐ தாண்டியிருக்கிறது. ஸ்கொட்லாந்தின் மக்கள்தொகையில் 69.3 சதவிகிதம் பேருக்கு முதல் டோஸ் தடுப்பூசியும், 49.5 சதவிகிதம் பேருக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியும் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதால், தினசரி இறப்பு எண்ணிக்கை ஒற்றை இலக்கத்திலேயே இருப்பது ஆறுதல் தரும் விடயம்.

ரஷ்யாவும் பிரிட்டனும் வேறுபடும் இடம், தடுப்பூசிதான். ரஷ்யாவில் தடுப்பூசித் தட்டுப்பாட்டால்தான் மூன்றாம் அலையின்போது மரணங்களைத் தடுக்க முடியவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அதேசமயம், பிரிட்டனில் தடுப்பூசியால் இதுவரை 72 இலட்சம் கொரோனா தொற்றுகளும், 27,000 மரணங்களும் தடுக்கப்பட்டிருப்பதாக இங்கிலாந்து சுகாதாரத் துறையும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய ஆய்வில் தெரியவந்திருக்கிறது. ஒட்டு மொத்த பிரிட்டனுக்கும் ஜூலை 19 ஆம் திகதி விடுதலை நாளாக அமையும் அன்றுடன் அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படும்' என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ே-ஜான்ஸன்.

மேற்கண்ட நாடுகள் நமக்குச் சொல்லும் பாடம் ஒன்றுதான்... பெரும்பாலான மக்களுக்குத் தடுப்பூசி செலுத்திய பிரிட்டன், மூன்றாம் அலையில் உயிரிழப்புகளைப் பெருமளவு தடுத்து நிறுத்தியிருக்கிறது. தடுப்பூசி செலுத்துவதில் பின்தங்கியிருக்கும் ரஷ்யா அதிக அளவிலான உயிரிழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் தாலி...!



சில நாட்களாக அம்மா படுத்தபடுக்கையாக இருக்கிறாள் என்று மாமாவிடம் இருந்து வந்த தகவலைக்கேட்டு தான் பணிபுரியும் திருப்பூரில் இருந்து திருவண்ணாமலைக்குப் புறப்பட்டான் கார்த்தி. பேருந்து புறப்படத் தன் அம்மாவின் நினைவுகளில் மூழ்கினான்.

சிறு வயதில் தந்தை இறந்துவிட கார்த்தி மற்றும் அவன் அண்ணன் அருண் இருவரையும் அம்மாதான் வளர்த்தாள். அம்மாவின் அன்புடன் கண்டிப்பும் சேர்ந்து இருக்க, கார்த்திக்கிற்கும் அவன் அம்மாவிற்கும் தினமும் சண்டைதான். படிப்பு முடிந்தவுடன் அருணுக்கு அரசு உத்தியோகம் கிடைக்க பின்பு அருணுக்கு திருமணம் நடைபெற்றது.

அண்ணி வந்தபின், அருண் மனைவியின் கைப்பாவையாக மாறி விட்டான். அம்மாவின் கண்டிப்பு மற்றும் அண்ணியின் குத்தல் பேச்சு காரணமாக அங்கிருந்து புறப்பட்டு திருப்பூரில் ஒரு பனியன் கம்பனியில் சேர்ந்து விட்டான் கார்த்தி. எப்போதாவது வந்து போவதோடு சரி. கடைசியாக அம்மாவைப் பார்த்து கிட்டத்தட்ட இரண்டு வருடம் ஆகிவிட்டது.

வீட்டிற்குள் கார்த்தி நுழைந்தவுடன் அதிர்ச்சியாய் பார்த்தார்கள் அண்ணனும் அண்ணியும்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என ஏன் என்கிட்ட சொல்லல..." எனக் கேட்டான் கார்த்தி.

"ஆமா நல்லா இருக்கும்போது பார்த்து கிழிச்சிட்ட... இப்போ வந்து என்ன பண்ணப் போறே... அதான் சொல்லல" என்றான் அருண்.

கார்த்தி நேராக அம்மா அறைக்குள் சென்றான்...

"சொத்துக்காக சரியான நேரத்தில் வந்து இருக்கான் பாருங்க. ரொம்ப உசாருங்க உங்க தம்பி" என மனைவி சொல்ல அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் அருண்.

ஓரமாகக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள் அம்மா. அம்மாவின் அருகில் சென்றான் கார்த்தி. உடல் மெலிந்த நிலையில் காணப்பட்டாள். கண்ணீரை அடக்கிக்கொண்டு அம்மா என்று அழைத்தான் கார்த்தி. யாரு எனக் குரல் கொடுத்தாள் அம்மா...

"கார்த்திம்மா...கார்த்தியா வந்துட்டியா?... நீ வருவேன்னு எனக்குத்தெரியும். சதா உன் நினைப்புத்தான் எனக்கு...."

"எனக்கும் அதே நினைப்புத்தான்மா" என்ற கார்த்தி...அருகில் அமர்ந்து கொண்டான்.

அம்மா-மகன் உரையாடல் தொடங்குகிறது...

"இப்போ உடம்பு எப்படிம்மா இருக்கு?"

"உடம்பு எல்லாம் ரொம்ப வலிக்குதுப்பா கார்த்தி... சாப்பிட்டியா நீ?..."

"இன்னும் இல்லம்மா..."

"போய் சாப்பிடு..."

"இருகட்டும்மா அப்புறமாச் சாப்பிடுகிறேன்...."

"உன் அண்ணனும் அண்ணியும் இப்போ ரொம்பக் கஷ்டப்படுத்துறாங்கப்பா... எனக்கு இங்கு சுதந்திரம் இல்லை... விரும்பியதை சாப்பிட முடியல...நீ இருக்கும் இடத்திற்கு என்னையும் கூட்டிட்டுப் போயிடப்பா...."

"சரிம்மா உனக்கு உடம்பு சரியான அப்புறம் கூட்டிட்டுப்போறேன்மா...."

"உனக்கு இன்னும் கல்யாணம் பண்ணிவைக்காமல் இருக்கிறேனேன்னு ஒரு கவலைதான் எனக்கு...."

"பரவாயில்லையம்மா பிறகு பண்ணிக்கிறேன்....."

"முதல் முறையா என் வயிற்றில் குழந்தை இருக்கும்போது பொண்ணுதான் வேணும் என்று கடவுள் கிட்ட வேண்டிக்கிட்டேன். ஆனால் பையன் தான் பிறந்தான்."

"அடுத்த குழந்தை வயிற்றில் இருக்கும் போதும் பொண்ணுதான் வேணும் என்று விரதம் இருந்தேன். ஆனாலும் எனக்கு பையன் தான் பிறந்தான். இரண்டும் மகனாகப் போய்விட்டது... உங்க அப்பா போன பிறகு எனக்கு மனசு விட்டுப் பேச யாரும் இல்லாமல் போயிட்டாங்க"

"புரியுதும்மா... நான் உனக்கு எதுவும் செய்யல ...அருகில் கூட இல்லை... அம்மா உனக்கு ஞாபகம் இருக்கா... அப்ப நாம கிரிவலம் போவோமே..."

அம்மாவின் முகம் பிரகாசம் ஆகிறது...

"ஆமாம் ஞாபகம் இருக்கு... நாம கார்த்திகை தீபம் எல்லாம் கோயிலுக்குப் போயிட்டு வருவோமே. அது எல்லாம் இன்னும் ஞாபகம் இருக்கு.... ரொம்ப சந்தோசமாக இருந்தோம் அப்போ... கோயிலுக்குப் போயி ரொம்ப நாள் ஆகி விட்டது கார்த்தி... என்னை கோவிலுக்கு கூட்டிட்டு போறியா..."

"கண்டிப்பாம்மா நான் கூட்டிட்டு போறேன்..."

"கார்த்தி உனக்காக அந்த அலுமாரியில் ஒரு பொருள் வைச்சு இருக்கேன். அப்புறம் மறக்காம எடுத்துக்கோ..."

"சரிமா அப்புறமா எடுத்துக்கிறேன்..."

அம்மாவின் முகத்தில் ஏதோ ஒரு திருப்தி தெரிகிறது. மகனைப் பார்த்தபடியே உறங்கிப் போனால்.

அருகிலேயே கீழே அமர்ந்து அம்மாவைப் பார்த்துக் கொண்டு இருந்தான் கார்த்தி.

எப்பொழுது உறங்கினான் என்று தெரியவில்லை....அதிகாலை விழிப்பு வந்ததும் பார்க்கும் பொழுது அம்மா இறந்து இருந்தாள்....

"வந்தான் அம்மாவை முடித்து விட்டான்" என்றாள் அண்ணி... அம்மாவின் இறுதிச்சடங்கை முடித்துவிட்டு ஊருக்கு கிளம்பினான் கார்த்தி....


"உனக்காக அலுமாரியில் ஒரு பொருள் வைச்சிருக்கேன் எடுத்துக்கோ என்று அம்மா சொன்னது நினைவுக்கு வர அலுமாரியைத் திறந்து பார்த்தான். அதில் ஒரு சின்ன நகைப் பெட்டி இருந்தது. அதை திறந்து பார்த்தான் அதில் "அம்மாவின் தாலி" இருந்தது.... கண்களில் நீர் முட்ட அதை எடுத்து தன் பையில் வைத்துக் கொண்டு ஹோலுக்கு வந்தான் கார்த்தி... ஹோலில் அருணும் அண்ணியும் இருந்தனர்...

"அருண் நான் ஊருக்குக் கிளம்பறேன். அம்மாவின் சொத்துக்கள் அனைத்தும் உன் பெயரில் எழுதிக் கொள்... எப்போது எங்கே வரணும் என போன் செய்து சொல்லு நான் வந்து கையெழுத்து போடுறேன்" என்று சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் கிளம்பினான் கார்த்தி... அவன் போன திசையையே வெறித்தபடி பார்த்துக கொண்டு இருந்தான் அண்ணன் அருண்.

# உலகின் அதிக எடை கொண்ட மாம்பழம்!

## கின்னஸ் சாதனையில் இடம்பிடித்தது

கொலம்பியா நாட்டில் தற்போது மாம்பழம் அறுவடைக் காலம். இந்த முறை அதிக எடைகொண்ட மாம்பழத்தை அறுவடை செய்து சாதனை படைத்துள்ளனர் ஜேர்மன் ஆர்லாண்டோ நோவோவா பரேரா மற்றும் ரெய்னா மரியா மரோகுயின் தம்பதி.



"இந்த மண்ணின் மீது நாங்கள் கொண்ட காதல்தான் இவ்வளவு பெரிய மாம் பழம் கிடைப்பதற்கான காரணம். இந்த கின்னஸ் சாதனையை நாங்கள் இந்தக் கிராமத்தினருக்கு அர்ப்பணிக்கிறோம்" வ ி ரு து பெற்ற மகிழ்ச்சியோடு அறிவித்திருக்கிறார்கள்.

இத்தம்பதி அறுவடை செய்திருக்கும் மாம்பழத்தின் எடை 4.25 கிலோ. இதற்கு முன்பு பிலிப்பைன்ஸில் 2009 ஆம் ஆண்டு 3.43 கிலோ எடையுள்ள ஒரு மாம்பழம் சாதனை படைத்திருந்தது. இப்போது அதை [illegible] முறியடித்து, உலக மாம்பழ விவசாயிகளுக்கு ஒரு மிகப்பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளனர்.


கொலம்பியாவின் குயாட்டா பகுதியில் வசித்து வரும் ஜேர்மன் ஆர்லாண்டோ நோவா பரேரா (German Orlando Novoa Barrera) மற்றும் ரெய்னா மரியா மரோகுயின் (Reina Maria Marroquin) ஆகியோரால் பராமரிக்கப்பட்டு வந்த தோட்டத்தில் இந்த பிரமாண்டமான மாம்பழம் காய்த்துள்ளது. போயாகா பகுதியில் உள்ள சான் மார்டி னில், ஏப்ரல் 29 ஆம் திகதி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இது இடம்பிடித்தது. குயாட்டா பகுதியில் கோபி தயாரிப்பு சார்ந்த மூலப்பொருட்கள் பயிரிடப்படுகின்றன. மாம்பழங்கள் குறைவான பரப்பில்தான் விளைவிக்கப்படுகின்றன.

இங்கு தங்கள் தோட்டத்தில் விளைந்த மாம்பழத் தின் பெரிய அளவையும், அதிக அளவு எடையையும் கண்டு ஆச்சரியமடைந்த இத்தம்பதி இணையத்தில் முதலில் தேடியிருக்கிறார்கள். இணையத் தளத்தில் கிடைத்த தகவல்களைச் சரிபார் த்த பிறகு, தங்களின் மாம்பழத்தை எடை போட்டுப் பார்த்திருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு உலக சாதனை படைத்த மாம்பழத் தைவிட தங்களின் மாம்பழமே உலகி லேயே அதிக எடையுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். அதன் பிறகு, இதை கின்னஸ் உலக சாதனை அமைப்பின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

உலக [illegible] இடம்பெற்றது குறித்துப் பேசிய [illegible] தம்பதி, "இந்த சாதனை மூலம் கொலம்பியாவில் உள்ள மக்கள் கிராமப்புறங்களை நேசிக்கும் கடின உழைப்பாளிகள் என்பதை உலகுக்குக் காண்பிப்பதே எங்களின் குறிக்கோள். நாங்கள் விளைவித்த நிலம் எங்களுக்கு நல்ல பலனைக் கொடுத்திருக்கிறது. உலகமே கொரோனா நோய்த் தொற்றின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் இச்சூழலில், இந்தச் சாதனை எங்கள் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது. இந்த விருது எங்கள் பெற்றோர் எங்களுக்குப் போதித்த அர்ப்பணிப்பு மற்றும் இயற்கையின் மீதான அன்பு ஆகியவற்றை அங்கீகரிப்பதாக இருக்கிறது. இந்த ஒரு மாம்பழத்தை எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் உண்ட போது அளவில்லாத மகிழ்ச்சியாக இருந்தது" என்கிறார்கள்.

குயாட்டா பகுதியின் இரண்டாவது கின்னஸ் சாதனை இது. முன்னதாக 2014 ஆம் ஆண்டு 3,199 சதுர மீற்றரில் மிக நீளமான இயற்கை மலர் கம்பளத்தை உருவாக்கியதற்காக உலகச் சாதனையைப் பெற்றிருந்தது. விவசாயத்துக்குப் பிரபலமான குயாட்டா மக்கள், கோபி, அரேபாஸ், மொகோலாஸ் மற்றும் மாம்பழங்களைத் தொடர்ந்து சாகுபடி செய்து வருகிறார்கள். கின்னஸ் உலக சாதனை அமைப்பு தனது அதிகாரபூர்வ வலைத்தளப் பக்கத்தில் இவர்களின் சாதனையைப் பதிவு செய்து பாராட்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளியேறும் அமெரிக்கப்படைகள் 'அபின்' இராச்சியமாகும் ஆப்கான்

**பாமியான் குன்றுகளிலிருந்த புத்தர் சிலைகளை வெடிவைத்து தகர்ப்பது, பெண்களைக் கொத்தடிமைகள்போல நடத்துவது, 'இஸ்லாமிக் எமிரேட் ஒப் ஆப்கானிஸ்தான்' என்ற பெயரில் தாங்கள் நடத்தும் ஆட்சியை எதிர்த்து பேசுபவர்களைச் சுட்டுக்கொல்வது எனத் தலிபான்கள் கொட்டமடித்த நேரமது**

'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டு, கடந்த 20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவும் அதன் ஆதரவு நாடுகளும் நடத்திவந்த போர், தன் கடைசி அத்தியாயத்தில் இருக்கிறது. இதை வெளிப்படுத்தும் விதமாக, ஜூலை 2 ஆம் திகதி அதிகாலையில் ஆப்கானின் பக்ராம் விமானப்படைத் தளத்திலிருந்து, அமெரிக்காவின் கடைசி இராணுவ விமானம் வெளியேறியிருக்கிறது.

இனி, ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பை அந்த நாட்டின் தலைவர்களும் இராணுவமும்தான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற முற்றுப்புள்ளி விழுந்திருப்பதால், ஆப்கானைக் கபளீகரம் செய்யத் துடிக்கும் தலிபான்கள் கொண்டாட்டத்தின் உச்சத்திலிருக்கிறார்கள். அமெரிக்காவின் இந்த வெளியேற்றத்தால், தெற்காசிய அரசியல் தகிக்க ஆரம்பித்திருக்கிறது!

## முடிவுறாத 20 வருடப் போர்!

செப்டெம்பர் 11, 2001இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரக் கட்டடங்கள் தீவிரவாதத் தாக்குதலுக்குள்ளாகி தரைமட்டமாக்கப்பட்டன. சுமார் 3 ஆயிரம் பேரைப் பலிவாங்கிய இந்தக் கோரத் தாக்குதல், உலகத்தின் போக்கையே மாற்றியமைத்தது.

தாக்குதலை நடத்திய அல்கொய்தா தீவிரவாத இயக்கமும், அவர்களோடு தொடர்பிலிருந்தவர்களும் உலகம் முழுவதும் வேட்டையாடப்பட்டனர். அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் பின்லேடன், அய்மன் அல் ஜவாஹிரிக்கு அடைக்கலம் அளிப்பதாக, ஆப்கானை அப்போது ஆட்சிசெய்த தலிபான்கள்மீது குற்றம்சாட்டப்பட்டது.

பின்லேடனைப் பிடிப்பதற்கும் அல்கொய்தாவை ஒழிப்பதற்கும் 'தீவிரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பனரில் ஆப்கானிஸ்தானில் போரைத் தொடங்கியது அமெரிக்கா. பாமியான் குன்றுகளிலிருந்த புத்தர் சிலைகளை வெடிவைத்து தகர்ப்பது, பெண்களைக் கொத்தடிமைகள்போல நடத்துவது, 'இஸ்லாமிக் எமிரேட் ஒப் ஆப்கானிஸ்தான்' என்ற பெயரில் தாங்கள் நடத்தும் ஆட்சியை எதிர்த்து பேசுபவர்களைச் சுட்டுக்கொல்வது எனத் தலிபான்கள் கொட்டமடித்த நேரமது என்பதால், நேட்டோ கூட்டமைப்பு உட்பட பல உலக நாடுகளும் அமெரிக்காவின் போரில் கைகோர்த்தன.

ஆண்டுகள் செல்லச் செல்லத்தான், புதைகுழியில் வந்து சிக்கிக்கொண்டதை அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் உணர்ந்தன. ஆப்கானின் அரசியல் வித்தியாசமானது. அந்த நாட்டின் இராணுவத்தையும் தாண்டி, நாட்டிலுள்ள ஒவ்வோர் இனக்குழுவுக்கும் பிரத்தியேகப் போர் வீரர்களும், இராணுவத் தலைவர்களும் இருப்பார்கள்.

இவர்களில் யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்பதை அமெரிக்கா புரிந்துகொள்வதற்குள் இருபது ஆண்டுகள் ஓடிவிட்டன. நட்பாக உள்ள இனக்குழுத் தலைவர்களை ஒருங்கிணைத்து, ஆப்கானிஸ்தானின் அரசியலுக்குள் அவர்களை ஐக்கியப்படுத்தும் வேலையை அமெரிக்கா முயன்றும், அது சரியாகப் பலனளிக்கவில்லை.

அமெரிக்காவின் பிரௌன் பல்கலைக்கழகம் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டிருக்கும் ஆய்வுகளின்படி, கடந்த 20 வருடங்களில் ஆப்கானிஸ்தானில் மட்டும் சுமார் ஒரு இலட்சத்து 74 ஆயிரம் பேர் போரால் உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களில் சுமார் 2 ஆயிரத்து 300 அமெரிக்க இராணுவ வீரர்களும் அடக்கம். ஆப்கான் போருக்காக மட்டும் சுமார் 2 இலட்சம் கோடி அமெரிக்க டொலரை அமெரிக்கா அழித்திருக்கிறது. இவ்வளவு பணம் செலவாகியும், உயிரிழப்புகள் ஏற்பட்டும், போரில் அமெரிக்கா வெற்றி பெறவில்லை என்பதே நிதர்சனம்.

ஜூன் 30 ஆம் திகதி நிலவரப்படி, ஆப்கானிஸ்தானிலுள்ள 407 மாவட்டங்களில் 142 மாவட்டங்களை தலிபான்கள் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றனர். "எதிர்வரும் செப்டெம்பர் 11ஆம் திகதிக்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் முழுவதுமாக வெளியேறிவிடும்" என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கடந்த ஏப்ரலில் அறிவித்த பிறகு, 69 மாவட்டங்களை அசுர வேகத்தில் தலிபான்கள் பிடித்துள்ளனர். இந்த வேகம்தான் உலக நாடுகளை கவலைகொள்ளச் செய்திருக்கிறது.

## தங்கப்பிறை அபின் சாம்ராச்சியம்!

உலகின் மொத்த அபின் உற்பத்தியில் 80வீதம் ஆப்கானிலிருந்து செல்வதால், அதில் கிடைக்கும் வருவாயை உள்நாட்டுப் போருக்குப் பயன்படுத்திக்கொள்கிறது தலிபான். பாகிஸ்தான், ஈரான் வழியாக மேற்குலக நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இந்த அபின் கடத்தல் சாம்ராச்சியம் 'தங்கப்பிறை' என்றழைக்கப்படுகிறது. பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ., ஈரான் இராணுவ அதிகாரிகள் எனப் பலருக்கும் இந்தக் கடத்தல் இலாபத்தில் பங்கு செல்வதால், இந்தப் பிறையைக் கடைசிவரை அமெரிக்காவால் உடைக்க முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிக்கொண்டிருக்கும் நிலையில், இந்த அபின் சாம்ராச்சியம் மேலும் விரிவடையும் என்கிறது ஐ.நாவின் பாதுகாப்பு கவுன்சில் அறிக்கை. ஐ.நாவுக்கான போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தடுப்பு அலுவலகத்தின் இயக்குநர் காடா வாலி, "2020ஆம்ஆண்டு மட்டும் ஆப்கானிஸ்தானில் 37 வீதம் அபின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. ஆப்கானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அபினின் வர்த்தகம் மட்டும் 11 வீதம் அளவுக்கு உயர்ந்திருப்பதை எச்சரிக்கையாக நாம் பார்க்க வேண்டும்" என்றிருக்கிறார்.

சமீபத்தில் தன்னை வோஷிங்டனில் சந்தித்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமது அஸ்ரப் கானியிடம், ஆப்கானின் பாதுகாப்புக்குத் தன்னாலான எல்லா ஒத்துழைப்புகளையும் தருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் வாக்குறுதி அளித்திருக்கிறார். 'இனி ஆப்கானின் பாதுகாப்பை அந்த நாடே பார்த்துக்கொள்ள வேண்டும்' என்பதுதான் இதில் மறைந்திருக்கும் பொருள்.

பிடனின் இந்த முடிவுக்கு சி.ஐ.ஏஇ முன்னாள் இயக்குநர் டேவிட் பெட்ரேயஸ், ஆப்கானுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் ரியான் க்ரோச்சர் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார். "போரை நாம் முடிவுக்குக் கொண்டு வரவில்லை. களத்தை நம் எதிரிகளிடம் விட்டுக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறோம்" என்று க்ரோச்சர் கொதித்திருக்கிறார்.

அமெரிக்கப் படைகள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றிருக்கிற, ஆப்கானிலிருக்கும் அமெரிக்க இராணுவத் தளபதி ஸ்காட் மில்லர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தலிபான்கள் முன்னேறும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் ஆறு மாதங்களில் ஆப்கான் தலைநகர் அவர்கள் வசம் சென்றுவிடும்" என்றார். இராணுவத் தலைமைகளின் எச்சரிக்கையையும் மீறி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் இப்படியொரு முடிவை எடுத்ததற்கு, தேர்தல் வாக்குறுதியும், போரால் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கலும்தான் காரணம் என்கிறார்கள்.

## குஷியில் பாகிஸ்தான்

இந்தக் களேபரங்களில் குஷியாகியிருப்பது பாகிஸ்தான்தான். ஆப்கானிஸ்தானின் பொருளாதாரக் கட்டமைப்பு வளர்ச்சிக்குப் பல நூறு கோடி ரூபாயை இந்தியா தந்திருக்கிறது. ஆப்கானின் பாராளுமன்றக் கட்டடம், சல்மா அணைக்கட்டு ஆகியவற்றை இந்தியா இலவசமாகக் கட்டிக்கொடுத்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானை நட்பின் அடிப்படையில் தன்வசமாக்கிக்கொண்டால், இராணுவரீதியாக ஒருபக்கம் சீனாவையும், மறுபக்கம் பாகிஸ்தானையும் எளிதாகச் சமாளிக்க முடியும் என்பது இந்தியாவின் கணக்கு.

தவிர, துருக்மெனிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியாவுக்கு எரிவாயு எடுத்துவர 'டபி பைப்லைன் திட்டம்' 2015இல் தொடங்கப்பட்டது. பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் பைப்லைன் பதிக்கும் பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. இந்தச் சூழலில், தலிபான்களின் அதிகாரம் ஆப்கானில் ஓங்குவது இந்தியாவுக்குப் பிரச்சினைதான்.


தலிபான்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தரப்பில் முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால், பாகிஸ்தானின் அழுத்தம் காரணமாக இந்திய சமாதான அழைப்பை தலிபான்கள் ஏற்கவில்லை எனக் கூறப்படுகிறது.

எந்தக் காரணத்தைச் சொல்லி ஆப்கானிஸ்தான்மீது அமெரிக்கா படையெடுத்ததோ, இன்று அதே காரணம் மீண்டும் வலுப்பெற அடித்தளம் அமைத்துக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறது அமெரிக்கா. ஒருவேளை, தலிபான்களின் கைகளில் ஆப்கான் முழுவதுமாக விழுந்துவிட்டால், தெற்காசிய அரசியலின் தட்பவெப்பம் முற்றிலும் மாறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## வெற்றியின் வழி




"இல்லை அநபாயரே! பூட்டைத் திறக்க அவன் முயலவில்லை. ஏனென்றால் அது பூட்டல்ல" என்றான் அமீர்.

"பூட்டல்லவா!" அநபாயனின் ஆச்சரியம் பன்மடங்கு அதிகமாகியது.

"இல்லை அநபாயரே! அது பூட்டல்ல. கதவில் இரண்டு துவாரங்கள் இருக்கின்றன. ஒன்று தான் பூட்டு. மற்றொன்று தாழைத் திறக்க, உள்ளிருக்கும் அடிமைகளை அழைக்கும் சிறு மணி. அந்த துவாரத்தில் சாவியைக் கொடுத்து மும்முறை திருப்பினால் உள்ளிருக்கும் மெல்லிய சலாகை நகர்ந்து பக்கத்துச் சுவரிலிருக்கும் மணிமீது தட்டும். அடிமைகள் கதவைத் திறக்க அது கட்டளை. இந்தச் சூட்சுமத்தை இவன் எப்படியோ அறிந்திருக்கின்றான்" என்று மளமளவென்று விளக்கிய அமீர், "புரவியை விட்டு இறங்கி இந்த நிழலிலேயே வாருங்கள். இவன் யாரென்று பார்க்கலாம்" என்று கூறிவிட்டுத் தானும் புரவியிலிருந்து இறங்கிப் பக்கதிலிருந்த தாழ்வார இருளில் பதுங்கிப் பதுங்கித் தன் வீட்டு முகப்பை அடைந்தான். அநபாயனும் அமீரின் வழியைப் பின்பற்றி மெள்ள நடந்து வந்து பூட்டில் சாவியைக் கொடுத்து நின்றவன் மீது அமீர் பாய்ந்ததும் மற்றவன் கழுத்தைப் பின்னாலிருந்த வண்ணம் இறுகப் பிடித்து "பேசாதே! வாயைத் திறந்தால் கழுத்தை நெரித்துவிடுவேன்! என்று எச்சரித்தான்.

அநபாயன் கையில் சிக்கிக் கொண்டவனிடமிருந்து பதிலேதும் வரவில்லை. கழுத்து இறுகப் பிடிக்கப்பட்டிருந்ததால், ஹூம்.. ஹூம்.. என்று மூச்சுத் திணறும் சப்தமே வெளிவந்தது. ஆனால் அமீரின் நிலை வேறு விதமாயிருந்தது. சாவியைப் பூட்டி அடிமைகளை வரவழைக்க முற்பட்டவன் மீது பின்னாலிருந்த அமீர் மிகுந்த எச்சரிக்கையுடன் தான் தாவினான். அவன் யார் மீது தாவினானோ அந்த மனிதனும் அமீரைப்போல் அப்படி அதிக உயரமோ பருமனோ உள்ளவனும் அல்ல.

ஆனால் அவன் மீது பாய்ந்த மறுவிநாடி அமீர் தரையில் புரண்டு கொண்டிருந்தான். அமீரின் இராட்சத உருவத்தைத் திரும்பிப் பாராமலே கையின் வேகத்தினால் தரையில் உருள வைத்த மனிதனை ஏறெடுத்து நோக்கிய அநபான் முகத்தில் வியப்பின் குறி பெரிதும் படர்ந்தது. அந்த இரவே தனக்கு அடுத்தடுத்து வியப்பை அளிப்பதற்காக ஏற்பட்டதோ என்பதை நினைத்து நினைத்துப் பரவசப்பட்ட அநபாயன், தான் பிடித்திருந்த கழுத்தை விடுதலை செய்தான். மண்ணில் உருண்ட அமீர்கூடத் திடீரெனப் பரம சந்துஷ்டியுடன் எழுந்திருந்து தன்னை வீழ்த்தியவனுக்குத் தலை வணங்கி, "இந்த நிசியில் நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அப்பப்பா! எப்படி ஏமாற்றிவிட்டீர்கள்!" என்று மிகவும் பணிவும் வியப்பும் கலந்த குரலில் கூறினான்.

"இரவிலும் சரி பகலிலும் சரி எனக்கு இரு கண்கள் பின்புறம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா அமீர்?" என்று கூறிய சீனக் கடலோடி, அமைதி நிரம்பிய அந்த இரவில் பயங்கரமாக ஆனால் மிக மெதுவாக நகைத்தான்.

"அது தெரியும் குருநாதரே! ஆனால் வந்திருப்பது நீங்கள் என்பது எனக்கெப்படித் தெரியும்" என்று வினவினான் அமீர்.

"பூட்டில் சாவியை நான் இடது புறம் திருப்பியதை நீ பார்த்திருக்க வேண்டுமே?" என்று கேட்டான் சீனக் கடலோடி.

"பார்த்தேன்."

"இத்தகைய பூட்டுகள் சீனாவைத் தவிர வேறு இடங்களில் ஏது?"

"கிடையாது."

"இந்த எச்சரிக்கை முறையும் நான் சொல்லிக் கொடுத்ததுதானே உனக்கு?"

"ஆமாம்."

"அப்படியிருக்க பீதியை நீ ஊகித்துக்கொள் வேண்டடியதுதானே?" என்று விளக்கிய சீனக் கடலோடி, "உள்ளே வா அமீர் !நாம் பேச வேண்டிய விடயங்கள் நிரம்ப இருக்கின்றன" என்று கூறிக் கொண்டு மீண்டும் இருமுறை சாவியைத் திருப்பவே கதவு திறக்கப்பட்டது. கதவு திறந்ததும் ஏதோ தான் தான் அந்த வீட்டுக்கு எசமானன் போல் உள்ளே தாராளமாக நடந்த சீனக் கடலோடி முதல் இரண்டு கட்டுகளையும் கடந்து முதல் நாள் தான் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மூன்றாம் கட்டின் பெரும் அறைக்கு வந்து சேர்ந்தான்.

வந்ததும் அடிமைகளை அழைத்து விளக்கைக் கொளுத்துமாறு உத்தரவிட்ட அந்த சீனக் கொள்ளைக்காரன் எந்தவிதக் கவலையுமில்லாத வதனத்துடன் அங்கிருந்த ஆசனமொன்றில் சாய்ந்து கொண்டு, "அநபாயரே! அமருங்கள். நாம் யோசிக்க வேண்டியது நிரம்ப இருக்கின்றது" என்றான்.

மூன்றாம் ஜாமம் துவங்கிவிட்ட அந்த இரவு நேரத்தில் அவன் சொல்லக்கூடிய அப்பேர்ப்பட்ட தலை போகும் படியான காரியம் என்னவாக இருக்கும் என்பதை அறியாத அநபாயன் ஏதும் பேசாமல் அங்கிருந்த ஆசனத்தில் அமர, சீனக் கடலோடிக்குச் சற்றுப் பின்னடைந்திருந்த ஆசனத்தில் அவனுடன் வந்தவனும் மிகப் பணிவுடன் உட்கார்ந்து கொண்டான்.

அறையில் அப்பொழுதும் தூங்கா விளக்கொன்று மெல்லிய தாக எரிந்து கொண்டிருந்தாலும் அது போதா தென்ற காரணத்தால் சீனக் கடலோடியின் உத்தரவைத் தொடர்ந்து அடிமைகளிருவரைப் பெரு விளக்குகள் இரண்டைக் கொண்டு வரக் கட்டளையிட்ட அமீர் அந்த விளக்குகள் வந்து உள்ளே பேரொளி பரவியதும், "மேற்கொண்டு என்ன தேவை குருநாதரே, சிறிது அரபு நாட்டு மது கொண்டு வரட்டுமா?" என்று மிகப் பணிவுடன் வினவினான்.

மிகப் பெரும் அபாயத்தை விளக்கும் குறியையோ வேறெவ்வித உணர்ச்சியையோ பிரதிபலிக்காமல் மிகுந்த அமைதியுடன் இருந்த முகத்தை இருமுறை அப்படியும் இப்படியும் ஆட்டி மது தேவையில்லை யென்பதை உணர்த்திய சீனக் கடலோடி, "மது இருக்கட்டும் அமீர், நாம் வந்த காரியத்தை முதலில் கவனிப்போம்" என்றான்.

"என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள். எந்த உத்தரவுக்கும் பணியச் சித்தமாயிருக்கின்றேன்" அமீரின் கேள்வியில் பயமும் பக்தியும் சொட்டியது.

"முதலில் வாசலிலுள்ள புரவிகளின் மீதிருக்கும் சீலைகளை எடுத்து மறைத்துவிடு. அவற்றில் கலிங்கச் சின்னங்கள் இருக்கின்றன" என்றான் சீனக் கடலோடி.

"சரி" என்றான் அமீர்.

"பிறகு குதிரைகளை உன் கொட்டடியில் கட்டிவிடு" என்றும் உத்தரவிட்டான் அகூதா.

"புரிகிறது" என்றான் அமீர்.

அமீருக்கு மட்டுமல்ல. அநபாயனுக்கும் விடயம் தெளிவாகப் புரிந்தது. ஆனால் ஏதும் புரியாதவன்போல் கேட்டான், "ஏது இந்தப் புரவிகள் உங்களுக்கு" என்று

"இங்கு அவசரமாக வரத் தேவையிருந்தது. வரும் வழியில் கலிங்க வீரர் இருவர் மறித்து மல்லுக்கு வந்தார்கள்..." என்ற அகூதா வாசகத்தை முடிக்காமலே விட்டான்.

"அவர்களை குத்திப் போட்டீர்களா?" அமீர் பயத்துடன் வினவினான். வீரர்களைக் குத்தினானா அல்லது கட்டிப்போட்டானா என்பதை அகூதா சொல்லவில்லை. அது அத்தனை பிரமாத விடயமல்லவென்பதற்காக அசட்டையுடன் கையை ஆட்டிவிட்டு, "எப்படியிருந்தாலும் அவர்களால் நமக்கு தொல்லையில்லை. நாம் கவனிக்க வேண்டியது நமக்கு முன்னுள்ள அபாயம்" என்றான்.


அநபாயன் விழிகள் மெள்ள எழுந்து சீனக் கடலோடியை நோக்கின. "புதிதாக என்ன அபாயம் நேரிட்டு விட்டது!" என்று வினவினான். "நான் இரண்டு மரக் கலங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் அகூதா எதை யோ வற்புறுத்தும் நோக்கத்துடன்.

(தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அருணோதயம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீ தான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி உன்
மனசப் பாத்துக்க நல்லபடி

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீ தான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி உன்
மனசப் பாத்துக்க நல்லபடி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே

கதை கட்ட ஒருவன் பிறந்து விட்டால்
கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு
காப்பாற்ற சில பேர் இருந்து விட்டால்
கள்வர்கள் வாழ்விலும் நியாயம் உண்டு
கோர்ட்டுக்குத் தேவை சில சாட்சி
குணத்துக்குத் தேவை மனசாட்சி உன்
குணத்துக்குத் தேவை மனசாட்சி
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே

மயிலைப் பார்த்து கரடி என்பார்
மானைப் பார்த்து வேங்கை என்பார்
குயிலைப் பார்த்து ஆந்தை என்பார்
அதையும் சிலபேர் உண்மை என்பார்
யானையைப் பார்த்த குருடனைப் போல்
என்னைப் பார்த்தால் என்ன செய்வேன்? சிலர்
என்னைப் பார்த்தால் என்ன செய்வேன்?
உலகம் ஆயிரம் சொல்லட்டுமே

கடலில் விழுந்த நண்பனுக்கு
கைகொடுத்தேன் அவன் கரையேற
கரைக்கு அவன் வந்து விட்டான்
கடலின் நான் தான் விழுந்து விட்டேன்
சொல்லி அழுதால் தீர்ந்து விடும்
சொல்லத் தானே வார்த்தையில்லை அதை
சொல்லத்தானே வார்த்தையில்லை

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீ தான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசப் பாத்துக்க நல்லபடி உன்
மனசப் பாத்துக்க நல்லப்படி

# தனக்கு தனக்கு என வாழ்பவன் நரகத்தின் வழி செல்வான்

இறை வழிபாடு என்பது தனியே பூக்களைப் பறிப்பதும் ஆலயம் செல்வதும் தேவாரம் படிப்பதும் அர்ச்சனை செய்வதும் அல்ல. சமூகத்தில் தன்னைச் சுற்றியிருக்கும் பிறருக்கு எவ்வகையிலும் மனதால் தீங்கு நினையாமலும் தீங்கு செய்யாமலும் இருப்பதே வழிபாடுகளில் மிகப் பெரிய இறை வழிபாடாகும்.

இன்றைய பொழுதுகளில் அதிக பாவம் செய்தவர்களே ஆலய தரிசனம் செய்கின்றார்கள். இதை எவரும் எளிதில் மறுத்துவிட இயலாது. பாவத்தைக் கண்டு அஞ்சுபவர்கள் தன் கடமையை மட்டுமே வழிபாடாக ஆற்றுகின்றார்கள்.



அவர்கள் ஆலயம் செல்வதில்லை. அவர்கள் செல்லும் இடமெல்லாம் பிறரின் பார்வையில் புனிதர்களாக காட்சியளிக்கின்றார்கள். இதுவே அவர்களின் உண்மை வழிபாட்டுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. இறைவன் மனிதனைப் போல் ஒருபோதும் வட்டிக் கடைக்காரனாக நடப்பவனல்ல.

நம் உழைப்பில் ஏதாவது ஒன்றை அவனிடம் கொடுத்து விட்டு நம் பாவங்களிலிருந்து அவனிடம் தப்பிப்பதற்கான வழிகளைத் தான் தேடுகின்றோம். அதுவே நம் உழைப்பில் இறைவனுக்கு ஒரு பங்கு, நமக்கு ஒரு பங்கு என்று ஆட்டுகிடாயைப் போல் பங்கு போட்டு பிரித்துக் கொள்கின்றோம்.

இறைவனின் எதிர்பார்ப்பு உங்கள் வியர்வையில் இருக்கும் உழைப்பில் அல்ல. உங்கள் மனதிலிருக்கும் புனிதத்தில்தான் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

வேம்பின் கனிகளை விதைத்து விட்டு நாம் மாங்கனிகளை எதிர்ப்பார்ப்பது அறியாமையால் வந்த இழிவான செயலாகும். இதைத் தான் பாவத்தில் தோய்ந்து எழுந்தவர்கள் இறைவனிடமும் எதிர்பார்க்கின்றார்கள். பாவத்தில் மூழ்கிக் கொண்டிருப்பவன் எதிர்ப்பார்ப்பின் விளிம்பில் நிற்கின்றான். புண்ணியத்தில் மிதந்து கொண்டிருப்பவன் அகிலத்தின் நன்மைக்காக பிரார்த்திக்கின்றான். இதுவே சுயநலமற்ற "நிஷ்காமிய" வழிபாடாகும்.

தனக்காக மட்டுமே வழிபாடு செய்வதனால் இறையன்பை ஒருபோதுமே பெற முடியாது. அது மிருக குணத்திற்கு ஒப்பான செயலாகும். சுயநலத்தை முற்றாகத் துறந்து தன் சுயத்திலிருந்து அகிலத்தின் நன்மைக்காக வழிபாடாற்ற வேண்டும். அதுவே இறைவனுக்கு நிகராக ஒரு மனிதனை உயர்த்தும் உன்னத செயலாகும்.

"நான்" மட்டுமே வாழ வேண்டும். என் குடும்பம் மட்டுமே நல்லாக இருக்க வேண்டும். என் அருகில் இருக்கும் அயலான் எப்படியும் தாழ்ந்து போகலாம் என நினைப்பதெல்லாம் ஒரு வழிபாடா...? இத்தகைய வழிபாட்டைச் செய்பவர்கள் வேறு யாருமல்ல. படித்த பெரும் பதவியில் இருக்கின்ற அதிகாரம் மிக்கவர்கள்தான் என்பதை உலகே அறியும்.

அதி உன்னத அறிவாளியாக தம்மை காட்டிக் கொள்பவர்கள் கூட அரசியலைப் போலவே புனித ஆன்மிகத்தையும் சில வேளைகளில் நினைத்து விடுகின்றார்கள் போலும்.

**சாம்-ரமேஸ்குமார்**
**மருதனார்மடம்.**

# மணியோசையின் இரகசியங்கள்

கோயிலோ, வீடோ... நம் வழிபாட்டு முறையில் தவிர்க்க முடியாத ஒன்று மணியோசை. வேதங்கள் கோயில் மணி, கடவுளிடம் நாம் உள்ளே செல்ல அனுமதி கேட்கவே வைக்கப் பட்டுள்ளது என்று கூறுகின்றன. ஆனால், இந்த மணிகளில் மறைந்துள்ள உண்மையான அறிவியல் வேறு. மணி ஓசை நமது உளவியலுடன் ஆழமான தொடர்புடையது.

வலது கையை உபயோகிக்கும் மனிதர்களுக்கு இடது மூளையின் செயற்பாடு அதிகம் இருக்கும். அதுபோலவே, இடது கைப்பழக்கம் உள்ளவர்களுக்கு வலது மூளை. இரு கைகளையும் உபயோகிக்கும்போது, நமது மூளை முழுமையாக பணிபுரியும். அதெல்லாம் சரி... இந்த மணியின் ஓசைக்கும் நமது மூளை செயற்பாட்டுக்கும் என்ன தொடர்பு? மணியின் ஓசை ஒரு வகையான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. அது நமது மனதுள் ஊடுருவி, மூளையில் உள்ள வலது மற்றும் இடது பாகங்களை முழுமையாகத் தூண்டுகிறது. இதனால் நமது மூளை மிகவும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றலை அடைகிறது. இதுவே, பிரார்த்தனையினால் நல்லவையே நடக்கும் என்ற ஒரு விதமான மனவுறுதியை ஏற்படுத்துகிறது.

மணியின் ஓசை சுமார் ஏழு விநாடிகளுக்கு நமது மூளைக்குள் நின்று எதிரொலிகளை ஏற்படுத்துகிறது. இந்த ஏழு விநாடிகளில் நமது உடலில் உள்ள ஏழு சக்கரங்களையும் தூண்டுகிறது. இந்த மணியின் ஓசை நமது மனதில் உள்ள அனைத்து வகையான எண்ணங்களையும் மறக்கச் செய்து, நமது மனதை வெற்றிடமாக மாற்றுகிறது. இந்த நிலையில், நமது மனது மிகவும் அதிகமாக கிரகிக்கும் தன்மையைப் பெறுகிறது. மனதினுள் புதைந்து கிடக்கும் பல விடயங்களை முற்றிலுமாக வெளியேற்றி, உண்மை நிலைக்கு நம்மை தயார்ப் படுத்தும். அப்போது தான் தூய்மையான எண்ணங்கள் மனதில் ஈடேறும். ஆகவே, கோயிலுக்குள் செல்லும் முன்பு, நமது மனதை தயார்ப்படுத்த மணிகள் கட்டப்பட்டு அவற்றின் ஓசையை ஏற்படுத்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜகமே தந்திரம் – சினிமா விமர்சனம்



பாண்டிய நாட்டுத் தலைநகரிலிருந்து இங்கிலாந்துத் தலைநகருக்குப் பயணப்படும் ரவுடி, புலம்பெயர்ந்த அகதிகளின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதே 'ஜகமே தந்திரம்'

மதுரையில் புரோட்டாவும் சால்னாவும் பிசைந்து அடித்த கையோடு தன் எதிரிகளையும் போட்டுத் துவைக்கும் ரவுடி சுருளி. அவரின் சாகசங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட லண்டன் தாதா பீட்டர் அவரை இங்கிலாந்திற்கு அழைக்கிறார். ஈழத்திலிருந்து வந்து லண்டனில் கோலோச்சும் ஷிவதாஸ் என்னும் பீட்டரின் எதிரியைப் போட்டுத்தள்ளும் அசைன்மென்ட் சுருளிக்குத் தரப்படுகிறது. அந்த அசைன்மென்டைச் சுருளி முடித்தாரா, அதற்கப்புறம் என்ன ஆனது என்பதை இரண்டே முக்கால் மணி நேரத்தில் சொல்லியிருக்கிறார் கார்த்திக் சுப்பராஜ்.

சீரியஸான படங்களுக்கு நடுவே அவ்வப்போது ஜாலியாய் ஒரு சிக்ஸர் அடிப்பது தனுஷின் வழக்கம். இதிலும் ரகளையான சுருளியாய் ஆடிப் பாடி அதகளம் செய்கிறார். ஆனால் எதற்கும் அஞ்சாத புத்திசாலி ரவுடி பார்த்தவுடன் காதலில் விழுவது, ஒரு கதை கேட்டவுடன் மனம் திருந்திவிடுவது போன்றவற்றில் ஆழமில்லை.

பீட்டராக வரும் ஜேம்ஸ் காஸ்மோ நல்ல தேர்வு. நிறவெறி பிடித்த வெள்ளைக்கார வில்லனாய் சில காட்சிகளில் தனுஷ்க்கு இணையாக நிற்கிறார். புலம்பெயர் தமிழர்களாக வரும் ஐஸ்வர்ய லஷ்மி, ஜோஜு ஜார்ஜ் போன்றவர்கள் உணர்ச்சிகளைச் சரியாகக் கடத்தினாலும் துருத்தி நிற்கும் ஈழத்தமிழ் டப்பிங் உறுத்துகிறது.

ஜகமே தந்திரத்தின் இரு மந்திரக்காரர்கள் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனும், ஒளிப்பதிவாளர் ஸ்ரேயாஸ் கிருஷ்ணாவும். 'ரகிட ரகிட' என இறங்கிக் குத்தி, ஈழ மண்ணில் கனமேற்றி, லண்டன் தெருக்களின் ஸ்டைலான பின்னணி இசையில் மயக்கி மாயம் செய்கிறார் சந்தோஷ். மறுபுறம் அட்சர சுத்தமான ப்ரேம்களின் வழியே நிலப்பரப்புகளை, அதன் பரபரப்புகளைக் கடத்துகிறார் ஸ்ரேயாஸ் கிருஷ்ணா. திினேஷ் சுப்பராயனின் ஸ்டன்ட் வடிவமைப்பு படத்தின் டெம்போவை ஏகத்துக்கும் ஏற்றுகிறது.

உலககெங்கிலும் தலைவிரித்தாடும் நிறவெறி, இனவெறி, பாசிச அரசியல் மற்றும் 'அகதிகள்' என்றும் 'வந்தேறிகள்' என்றும் வசைபாடப்படும் ஏதிலிகளின் துயரங்களைக் கமர்ஷியல் சினிமாவில் பேச முயன்றதற்கு வாழ்த்துகள். ஆனால் படத்தில் காட்டப்படும் புலம்பெயர் தமிழர்கள் அனைவருமே துப்பாக்கியும் வெடிகுண்டுமாக அலைவது நெருடலை ஏற்படுத்துகிறது.

கிட்டத்தட்ட இங்கிலாந்து நாடாளுமன்றம் வரை செல்வாக்கு செலுத்தும் வில்லனுக்கு ஒரு தமிழ் மாபியாவின் இரகசியங்களை அறிவதோ அவர்களைக் கட்டுப்படுத்துவதோ அவ்வளவு கஷ்டமா என்ன? மதுரை தொடங்கி லண்டன் வரை கடமைக்குக்கூட பொலிஸ் எட்டிப் பார்க்காமல் ஏகப்பட்ட லொஜிக் சொதப்பல்கள்.

நம்பகத்தன்மையைக் கூட்டி, இன்று உலகத்தின் மிக முக்கியமான பிரச்சினையை இன்னும் சீரியஸாக அணுகியிருந்தால் இன்னும்கூட ரசித்திருக்கலாம்.

## சூர்யா 40 படத்தின் ரிலீஸ் குறித்து வெளியான தகவல்! எப்போது தெரியுமா?



சூரரை போற்று படத்தின் வெற்றியை தொடர்ந்து சூர்யா இயக்குநர் பாண்டியராஜ் இயக்கத்தில் சூர்யா 40 படத்தில் நடித்து வந்தார்.

இப்படத்தின் ஒரு சில காட்சிகள் மட்டும் எடுக்கப்பட்டுள்ள நிலையில், கொரோனா இரண்டாவது அலை காரணமாக அப்படத்தின் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது.

மேலும் தற்போது நீண்ட நாட்களுக்கு பின் சூர்யா 40 படத்தின் படப்பிடிப்பு அடுத்த வாரம் சென்னையில் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

இப்படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு வரும் வாரம் தொடங்க உள்ள நிலையில், இப்படத்தை டிசெம்பர் மாதம் வெளியிட திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பீஸ்ட் படத்தில் தற்போது எடுக்கப்பட்டு வரும் காட்சி, வெளியான புதிய அப்டேட்!

தளபதி விஜய் நடிப்பில் இயக்குநர் நெல்சன் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகவுள்ள திரைப்படம் தான் பீஸ்ட்.

இப்படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் செகண்ட் லுக் தளபதி விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு வெளியாகி ரசிகர்களிடையே பெரிய வரவேற்பை பெற்றது.

இதனிடையே பீஸ்ட் படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு சென்னையில் செட் அமைத்து நடந்து வந்தது. இதில் நடிகை பூஜா ஹெக்டேவும் கலந்து கொண்டார்.

இந்நிலையில் தற்போது பீஸ்ட் படத்தின் படப்பிடிப்பு மகாபலிபுரத்தில் உள்ள ஒரு தனி விடுதியில் நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் அங்கு பாடல் காட்சி மட்டுமின்றி டயலாக் அதிகம் உடைய காட்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.




குருவி, அவன் - இவன், அயன், கும்கி போன்ற தென்னிந்தியத் திரைப் படங்களில் துணை நடிகராக நடித்தவரும் இயக்குநர்களான பாலா, தரணி, கே.வி. ஆனந் ஆகியோருடன் பணியாற்றியவருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜரட்ணம் வினோஜின் இயக்கத்தில் யாழ்ப்பாணத்தைக் கதைக் களமாகக் கொண்டு "2 யாழ்ப்பாணப் பொடியள்" எனும் வெப்சீரீஸ் உருவாகிக் கொண்டிருக்கும் நிலையில் இதன் மோசன் போஸ்ரர் கடந்த 9 ஆம் திகதி VINOJJ PLAY எனும் யூட்ரியூப் தளத்தில் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 7 ஆம் திகதி டோனியின் பிறந்த நாள்

# டோனி ஒரு சகாப்தம், சரித்திரம்!

என்ன செய்து விட்டார் டோனி, இந்தளவுக்கு ரசிகர்களும் சக வீரர்களும் இவ்வளவு ஏன் தற்போதைய கப்டன் ஹோலியே, "நீங்கள்தான் என்னுடைய நிரந்தரக் கப்டன்" எனப் போற்றும் அளவுக்கு!

பத்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. 50 ஓவர் உலகக் கோப்பையை வென்று இந்தியர்களின் கனவை அவர் நிகழ்த்திக் காட்டி... பத்து மாதங்கள் உருண்டோடி விட்டன, அவர் சர்வதேசக் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து!

பண்ட், பிரித்வி என அடுத்த தலைமுறை வீரர்கள், தலையெடுக்க தொடங்கி விட்டனர். ஆனால், இன்னமும் அவர் ஏற்படுத்தியுள்ள தாக்கம் சிறிதும் குறையவில்லை. இன்றும்கூட, இந்தியாவின் ஒவ்வொரு வெற்றியிலும் தோல்வியிலும் ஏதோ ஒரு காரணத்துக்காக இவரது பெயரை, நாக்குகள் உச்சரித்துக் கொண்டேதான் இருக்கின்றன. ஏனெனில், நமது நினைவு ஏடுகளில் அவர் பதிய வைத்துச் சென்றிருக்கும் பொன்னான தருணங்கள் அப்படி!

மகேந்திர சிங் டோனி... 1000 வார்த்தைகளுக்குள் படம்பிடிக்க முடியாத, சரித்திரம் அவருடையது, சாதனைகள் அவருடையது. M.S.Dhoni: The Untold Story-யால்கூட முழுவதும் வடிக்க முடியாத போராட்டம் அவருடையது.

அங்குலம் அங்குலமாய், மைதானத்தின் மொத்தத்தையும் தன்னுடைய தாக்கி, ஸ்டம்பின் பின்னால் சிம்மாசனமிட்டு, தனி இராச்சியம் நடத்தியவர்தான் டோனி. இந்திய பட்டிங் படையில், இறுதியாய் இறங்கி அழிக்கும் பிரமாஸ்திரம் அவர். முற்றுப்புள்ளி என்று ஒன்று வரும்வரை, வார்த்தை முடிந்து போவதில்லை. அப்படித்தான், டோனியின் விக்கெட் வீழும்வரை, பட்டிங்கில் இந்தியாவின் கதைக்கு முடிவுரை எழுதப்பட்டதில்லை. பாதிப் போட்டியில், ரன்ரேட்டைக் கணக்கிட்டு, சனல் மாற்றிக் கொண்டிருந்த ரசிகர்களை, இதயம் நிறைந்த நம்பிக்கையோடு, கடைசிப் பந்துவரை பார்க்க வைத்தவர் அவர். அதனால்தான் இன்னமும் 2019 உலகக் கோப்பை ரன்அவுட், காலத்தால் அழிக்க முடியாத வலியாக இருக்கிறது.

அதிக சிக்ஸர்களை அடித்த விக்கெட் கீப்பர் என்று புள்ளிவிபரம் பாராட்டுகிறது. ஒருநாள் போட்டிகளில், அதிக முறை ஆட்டமிழக்காமல் இருந்தவர் என மலைக்க வைக்கிறது. இவை அனைத்தையும் விட, அவர் சம்பாதித்தது மிக அதிகம், அதுதான் மக்களின் நம்பிக்கை. இந்தியாவுக்காக ஆடிய போதும் சரி, சிஎஸ்கேவுக்காக ஆடிய போதும், இறுதிவரை போராடுவதுதான் அவரது பாணி. அனுபவமற்ற இளங்கன்றாக பயமின்றி, இலங்கையை துவம்சம் செய்து அடித்த 183 ஆகட்டும், பாகிஸ்தானை பந்தாடிச் சேர்த்த 148 ஆகட்டும் ஒவ்வொன்றும் மாஸ்டர் கிளாஸ்.



ஒன்றை இரண்டாக்கும், இரண்டை மூன்றாக்கும் கால்கள், சொன்னபடியெல்லாம் கேட்டு, தாமதிக்காமல், தயங்காமல் ஓடிக் கொண்டே இருக்கும். விக்கெட்டுகளுக்கு இடையே ஓடியே ரன் சேர்க்கும் வித்தகத்தை, செய்து காட்டிக் கொண்டே இருந்தார். ஒரு கோப்பையை நமது உடைமையாக்கிய அந்த சிக்ஸரடித்த நொடி, கவாஸ்கருக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு இந்தியக் கிரிக்கெட் ரசிகனுக்கும், அத்தனை அணுக்களிலும் நிறைந்த அற்புதமான தருணம். இயான்பிஷப் சொன்னதைப்போல், கடைசி ஓவரில், 15 ரன்கள் வேண்டுமெனில், பதற்றம் பௌலருக்குத்தான் இருக்கும், டோனிக்கல்ல.

அவரது எந்த டிஆர்எஸ் கணிப்பும், துளியளவும் தவறியதில்லை. ஃபீல்ட் அம்பயரே, அவரது முகபாவனையைக் கொண்டு, என்ன நடந்திருக்கும் என்பதைக் கணித்துக் கொள்ளலாம். "நோலுக் சிக்ஸரை"ப் பார்த்திருப்போம். "நோலுக் ஸ்டம்பிங்" கெல்லாம் டோனிக்கு மட்டுமே சாத்தியம். ஃபீல்டிங் செய்யும்போது ஃபைன் லெக்கில் இருந்து வீசப்படும் பந்தா, டீப் எக்ஸ்ட்ரா கவரில் இருந்து வீசப்படும் பந்தா, எட்டுத் திசையிலிருந்து, எங்கிருந்து எறியப்பட்டாலும், அதிவேக, பாதுகாப்பான அந்தக் கைகளை அடைந்து விட்டால், இரண்டாம் எண்ணமே இன்றி பட்ஸ்மேன் நடையைக் கட்ட வேண்டியதுதான்.

பௌலர்களுக்கான உத்தரவு பறந்து கொண்டே இருக்கும். அஷ்வினுக்கு சங்கேத பாஷையில், ஹர்பஜனுக்கு உடல் மொழியில் என பட்ஸ்மேன்களின் பார்ட்னர்ஷிப்புக்கு மேல், இவருக்கும் பௌலர்களுக்குமான புரிதல் மிக அருமையானது. அதுவும் ஜடேஜாவும் இவரும்தான், முக்கிய க்ரைம் பார்ட்னர்ஸ். ஸ்டம்ப் மைக்கில் பதிவாகிஇருக்கும் அவருடைய பேச்சுக்கள், நல்ல கப்டனாக விரும்புபவர்கள் கேட்க வேண்டிய பாடங்கள். அதுதான் இன்றளவும் அவரை, பௌலர்களின் கப்டன் எனக் கொண்டாட வைக்கிறது. ஓய்வைப் பற்றிக் கேட்ட செய்தியாளரின் செய்கைக்குக் கோபப்படாமல், அதைக் கையாண்ட விதமாகட்டும், அந்த "டெஃபனிட்லி நாட்" ஆகட்டும், விடைபெறும் நேரம் வந்ததெனத் தோன்றியதும், டெஸ்டுக்கு "குட் பாய்" சொன்னதோடு, இன்னொரு ஃபேர்வெல் போட்டிக்காகக் காத்திருக்காது, சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வெடுத்த மாண்பாகட்டும், தனித்துவமானவர்தான் டோனி. மனிதர்களையும் சூழ்நிலைகளையும் சரியாக கையாள்வது ஒரு கலையெனில் அதற்குரிய முனைவர் பட்டத்தை டோனிக்கு தாராளமாகக் கொடுக்கலாம்.

கம்பேக் கதாநாயகராய், சரிந்து விழும் போதெல்லாம் திரும்ப எழுந்து, மௌன ஆவேசத்தை காட்டியிருப்பார். 2007 ஆம் ஆண்டு, உலகக் கோப்பையில், உடைந்து உருக்குலைந்து, கருகிய கனவுகளை, கைகளில் ஏந்தி, கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த ரசிகர்களின் கைகளில், முதல் இருபது-20 உலகக் கோப்பையைக் கொடுத்து அழகு பார்த்தார் டோனி. சிஎஸ்கே இரண்டாண்டு தடையைச் சந்தித்து, மீண்டு வந்த போது, நாதழுதழுக்க ஒரு மேடையில் பேசியிருப்பார் டோனி. அதில், முன்பு இருந்ததைக் காட்டிலும், தடை பெற்ற பின்தான், சிஎஸ்கேவின் ஃபேன் பேஸ் மேலும் அதிகரித்தது என கண்கள் கலங்கக் கூறியிருப்பார். அந்த முறையும், டேடிஸ் ஆர்மி என்ற கேலிகள்தான் எழுந்தன. நொண்டிக் குதிரையைக் கூட, பந்தயத்தில் ஓடவைத்து, வெற்றிபெற வைக்கும் ஜாக்கியாயிற்றே அவர்?! அவ்வருடம், சிஎஸ்கேவை டாப் கியரில் ஓடவைத்து, கோப்பையை வெல்ல வைத்தார்.


மூன்று ஐ.சி.சி. கோப்பைகளையும், இந்திய மண்ணைச் சேர வைத்ததற்காக மட்டுமே டோனி கொண்டாடப்படவில்லை. சீனியர் பிளேயர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறிய நிலையில், அணியின் கட்டமைப்பை அது குலைத்திடாமல், ஒரு முழுமையான அணியாக உருவாக்கியதுதான் அவரது மிகப்பெரிய சாதனை. அதனைச் செய்யத் தவறியதால்தான், இன்னமும் எழ முடியாமல் தத்தளித்துக் கொண்டுள்ளது இலங்கை.

வெற்றியோ தோல்வியோ அதை ஒரே போல பாவிப்பது, தன்னைச் சார்ந்தவர்களின் திறனறிந்து, அதை முழுமையாக வெளிப்படுத்த வைப்பது, அவர்கள் சோபிக்காத நேரத்திலும், தூணாகத் தோள் கொடுத்துத் தாங்குவது... இதுதான் டோனி! ரோஹித்தை ஓப்பனராக்கி, இந்தியாவுக்கான ஒரு ஒப்பற்ற ஓப்பனரைக் கொடுத்தவர் டோனி. அதே போல், ஹோலியின் ஃபார்ம் மோசமாகி, கடின காலகட்டத்தை அவர் கடந்த போதும், அவருக்கு முழுமையாக துணை நின்றவர்தான் டோனி.

அதுதான் டோனியின் மீதான ஹோலியின் மரியாதையை இரட்டிப்பாக்கியது. உடனிருப்பவர்களுக்கு துன்ப காலத்தில் உடன் நின்றவர்தான் டோனி. அதனால்தான், அவருடைய ப்ளேயிங் லெவனில், பெரிய மாற்றத்தை பார்க்க முடியாது. இவை எல்லாம்தான் டோனி. கால இயந்திரம் இன்னும் எத்தனை ஆண்டுகள் முன்னோக்கி ஓடினாலும், காண முடியாத, அற்புதக் கிரிக்கெட்டர்தான் டோனி. சாதிப்பதற்கு எதுவுமே பாக்கியில்லை என்ற மைல்கல்லை எட்டிய பின்புதான் விடை சொல்லிச் சென்றிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலோசியம் (இத்தாலி)



உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பெற்ற பெரும்பாலான இடங்கள் ஆன்மிகத் தலங்கள் அல்லது அன்பின் நினைவகங்களாக இருந்தவையே.

ஆனால் ப்ருவரின் பட்டியலில் இடம்பிடித்த இத்தாலியில் உள்ள கொலோசியத்தின் பின்னணியிலிருக்கும் வரலாற்றை ஆராய்ந்தால் அது இரத்தக்கறைகளால் ஆனது என்பதை அறிய முடிகிறது.

கிரீஸ் நகரில் இருந்த கொலோசஸ்சுக்கும் இதற்கும் பெயர் குழப்பம் ஏற்படலாம். கொலோசஸ் என்பது மிகப்பெரிய சிலை என்று பொருள்படும். இத்தாலியிலுள்ள கொலோசியம் “மிகப்பிரம்மாண்டமான” என்ற பொருளில் கட்டப்பட்ட அரங்குகளைக் குறிக்கும்.

கொலோசியம் இத்தாலியின் தலைநகர் ரோம் நகரில் அதன் இதயம் என்று சொல்லப்படும் கேலியன், எஸ்குலைன், பாலட்டைன் மலைகளுக்கு இடைப்பட்ட பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது.

ரோம் சாம்ராஜ்யத்தை ஒரு காலத்தில் ஆண்ட நீரோ மன்னன் அமைத்திருந்த நீரோ பூங்காவினை ஒட்டி உருவாக்கியிருந்த செயற்கை ஏரிக்கு அருகில் கட்டப்பட்டது.

நீரோ மன்னன் ஒரு கேளிக்கைப் பிரியன். அவனது ஆட்சி காலத்தில் (கி.பி.37 - கி.பி.68) விளையாட்டுக்கள், ஆடம்பர விழாக்கள், விருந்துகள் என்று பல்வேறு கேளிக்கைகளுக்குப் பணத்தையும் பொருளையும் வாரி இறைத்தான்.

இதன் காரணமாகப் பொதுமக்கள் மீது வரிச்சுமை ஆண்டுதோறும் ஏற்றப்பட்டது. சொத்து வரி, நில வரி, வீட்டு வரி என்பதையெல்லாம் தாண்டி, சிறுநீர்க் கழிப்பிடங்களைப் பயன்படுத்துவோர் மீதும் வரி விதிக்கப்பட்டது.

அவனது ஆட்சி மீது எழுந்த மக்களின் வெறுப்புக் காரணமாக இராணுவப்புரட்சி எழுந்தது. ரோமின் ஆட்சிப்பகுதிக்குட்பட்ட ஹிஸ்பானியாவின் கவர்னர் கல்பாவும் கல்லியாவின் கவர்னர் விண்டெக்சும் நீரோவுக்கு எதிராகக் கலகக்குரல் கொடுத்தனர்.

இதில் விண்டெக்ஸ் கொல்லப்பட்டான். கல்பாவும் அவனுக்குப் பிறகு வந்த ஒத்தோ மற்றும் விட்டேலியஸ் ஆகியோர் கொல்லப்பட்டும் தற்கொலைக்கு தூண்டப்பட்டும் இறந்து போனார்கள்.

இந்தச் குழப்பமான சூழலில் எகிப்திலுள்ள சில பிரதேசங்களை நிர்வகித்து வந்த வாஸ்பேசியன் ரோமை கைப்பற்றி பிலேவியன் பேரரசை நிறுவினான்.

கி.பி.64 இல் நீரோவின் காலத்தில் ஏற்பட்ட பெரும் தீ காரணமாக ரோம் நகரின் பல பகுதிகள் சிதைந்தன. அழகுக்கு மறு பெயர் ரோம் என்று அந்தக் காலத்திலேயே பெருமைமிக்க பெயர் உண்டு. எனவே ரோம் நகரை மறுசீரமைக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களை வாஸ்பேசியன் அறிமுகப்படுத்தினான்.

அதன் ஒரு பகுதியாகத்தான் கொலோசியம் கட்டப்பட்டது. ரோமானிய மற்றும் கிரேக்க கட்டடக்கலையை இணைத்து உருவாக்கப்பட்ட கொலோசியம் கி.பி. 72 இல் வாஸ்பேசியனின் காலத்தில் தொடங்கி அவனது மகன் டைட்டஸ் ஃபிலேவியன் காலத்தில் (கி.பி.81) கட்டி முடிக்கப்பட்டது.

வாஸ்பேசியன் இரண்டாவது மகன் டோமிட்டியன் ஃபிலேவியன் காலத்தில் மேலும் மெருகூட்டப்பட்டது.

நீரோ காலத்தில் கட்டப்பட்டு பின் சிதைவுற்ற சர்க்கஸ் மேக்ஸிமஸ் அரங்கு போலவே இருக்க வேண்டும் என்பதால் அதன் வடிவ அமைப்பினை முன்மாதிரியாகக் கொண்டு ஆம்ஃபி தியேட்டர் என்று பெயருடன்தான் கொலோசியம் கட்டப்பட்டது. (தொடரும்)




**பிருந்தா**

கிறுகிறுன்னு வந்து மயங்கி விழுந்து நான் அப்பிடியே பயந்துட்டேன்... ஒருவேளை கொரோனா வந்திடுச்சோன்னு



அப்புறம்தான் டாக்டர் செக் பண்ணி வெறும் ஹார்ட் அட்டாக்குன்னு சொன்ன பின்னாடிதான் உயிர் வந்துருச்சு

**மோகன்**

இந்த மிடில் கிளாஸா வாழ்றது ரொம்பக் கஷ்டமப்பா...



பக்கத்து வீட்டுக்காரன் பாத்தா பணக்காரனா நடிக்கனும். தெரிஞ்சவன் கடன் கேட்டா ஏழையா நடிக்கனும்

**தாட்ஷா**

20 வயது வரைக்கும் தான் வேளாவேளைக்குச் சோறு...



அப்புறம் வேலைக்குப் போனாத்தான் சோறு...

**நிலவன்**



இன்று விதவிதமான பைக்கில் பயணம் செய்தாலும் கிடைப்பதில்லை நண்பனின் பின்னால் அமர்ந்து சைக்கிளில் டபிள்ஸ் போன சுகம்

**பிரணவி**

செல்லம் உனக்கு தீபாவளிக்கு சேலை எடுத்துத் தரவா.... இல்ல சுடிதார் எடுத்துத் தரவா...?



உங்களுக்கு எது துவைக்க ஈஸியாக இருக்கோ அதையே எடுத்துக் குடுங்க

**தாரணி**

நோயாளி: நீங்க எழுதிக் கொடுத்த மாத்திரை எங்கயுமே கிடைக்கல



டாக்டர்: வாடா வா...பேனா எழுதுதான்னு கிறுக்கிப் பார்த்த பேப்பரை தூக்கிட்டுப் போனது நீதானா?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 253

# இயற்கையின் இனிய வரங்கள்

மனித குல விருத்தியின் ஆரம்ப காலத்திலே பழங்கள் மனிதனின் பிரதான உணவாக இருந்து வந்தது. பழங்கள் உண்பது ஆரோக்கியத்துக்கு நல்லது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பழங்களின் மகிமையை அறிந்ததாலேயே முருகக் கடவுள் கூட பழம் சம்பந்தமான ஒரு பிரச்சினை காரணமாக கோபங்கொண்டு பழனி மலை வரை போனதாக சொல்லப்படுகிறது. இயற்கையன்னை எமக்களித்துள்ள ஏராளமான கொடைகளில் ஒரு முக்கிய இடத்தைப் பிடிப்பது விதவிதமான சுவைகளையும் நிறங்களையும் கொண்ட பழங்கள் ஆகும்.



பழங்கள் நீரிழிவு உள்ளவர்களுக்கு நல்லதல்ல என்று கருதப்பட்ட காலம் இருந்தது. ஆனால் பழங்களை தினமும் உண்டு வந்தால் வகை 2 நீரிழிவு எனப்படும் நீரிழிவு நோய் வருவதற்கான ஆபத்து குறைகிறது என்று ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

சுமார் இரண்டு இலட்சம் பேரின் உணவுப் பழக்கம் மற்றும் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான 25 வருட தரவுகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்த முடிவு தெரியவந்துள்ளது. அதேநேரம் பழச்சாறு குடிக்கும் வழக்கம் இருப்பவர்களுக்கு வகை 2 வருவதற்கான ஆபத்து அதிகரிக்கிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

எனவே பழங்களை பழச்சாறாக்கி உண்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்தது என கருதப்படுகிறது. பழங்கள் ஒவ்வொன்றுக்கும் பற்பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. ஆனால் மருத்துவச் சிறப்பியல்புகள் அனைத்தையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட ஒரு மருத்துவப் பழமாக ஜம்புப் பழமே விளங்குகின்றது.

சுவை மிக்க இந்தப் பழம் கலோரி பெறுமானம் குறைந்தது. நிறை அதிகரிப்பை ஏற்படுத்த மாட்டாது. நீரிழிவு நோயாளரில் கூட குருதி வெல்ல அளவை அதிகரிக்கமாட்டாது. அதிகளவு நீர்த் தன்மையும் நார்த்தன்மையும் கொண்டது. சத்துக்கள் நிறைந்தவை, பசியைப் போக்கும். குடிப்பதற்கான இயற்கையான ஆரோக்கிய பானம் தயாரிப்பதற்கு இது ஒரு சிறந்த பழமாகும்.


மாம்பழங்கள் போன்ற இனிப்புச் சுவை கூடிய பழங்களை செம்பழ நிலையில் உண்பது சிறந்தது. அத்துடன் மாம்பழத்தைத் தோலுடன் உண்பதே நல்லது என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் தோலில்தான் அதிக அளவு விற்றமின் சி காணப்படுகிறது. மேலும் கல்சியம், பொட்டாசியம், சோடியம் மற்றும் பொஸ்பரஸ் இதில் அதிக அளவு உள்ளது.

வாழைப்பழமானது எக்காலத்திலும் கிடைக்கக் கூடிய முக்கனி. இது எமது பிரதேசத்தில் நன்கு விளையக் கூடிய மலிவான, சுவையான பழமாகும். உண்ணக் கூடியதாகவும் இருக்கின்றது. இதில் அடங்கியுள்ள சத்துக்கள் இது ஏனைய பழங்களுக்கு சற்றும் சளைத்ததல்ல என்பதற்கு சான்று பகர்கின்றது.

இரும்புச் சத்து அதிகமுள்ள மாதுளை இரத்தத்தின் அளவை அதிகரிக்க உதவுகிறது. அத்துடன் மாதுளம் பழங்களிலே பல எண்ணற்ற மருத்துவக் குணங்கள் இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றது.

விதைகள் கொட்டைகள் என்பனவும் உடலில் பல அனுகூலமான விளைவுகளை ஏற்படுத்துவது அறியப்பட்டு வருகிறது. எவ்வளவுக்கெவ்வளவு கொட்டைகளை சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிக காலம் வாழலாம் என்று நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது. அமெரிக்காவில் 30 ஆண்டு காலகட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த முடிவுகள் வந்துள்ளன.

தினமும் ஒரு கையளவு கொட்டைகளைச் சாப்பிடுவதால் எந்த ஒரு காரணத்தாலும் ஏற்படும் இறப்பை 20 சதவீதம் என்ற அளவில் குறைக்கிறது என்று இந்த ஆய்வு கூறுகிறது. கச்சான், கடலை, கசுக்கொட்டை மாதுளம் விதை, பாதாம் பருப்பு, கௌப்பி, பயறு போன்றவை உடல் ஆரோக்கியத்தை பேண உறுதுணையாக இருக்கின்றன. பழங்கள் மிக வேகமாக சமிபாடடையக் கூடியவையாதலினால் இவற்றைத் தனியாக உண்பது நல்லது. பொதுவாக இரவில் ஏனைய உணவுகளைத் தவிர்த்து பழங்களை மட்டும் உட்கொள்வது சாலச் சிறந்தது. கலப்படமற்ற இயற்கையின் இனிய வரங்களான பழங்கள், விதைகள் என்பவற்றை அதிகம் உண்டு ஆரோக்கியம் பெறுவோம்.



மேலைத்தேய நாடுகளில் இயற்கையான பொருட்களிற்கு மதிப்பு அதிகம். அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தும் அதிகவிலை கொடுத்து இயற்கையான உணவுகளை வாங்க எத்தனை முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எம்மைச் சுற்றி மலிவான, இயற்கையான பொருட்கள் எவ்வளவு இருந்தும் அதிக விலை கொடுத்து பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்க ஆசைப்படுகின்றோம்.

ஒரு பொருளைப் பேணியிலோ அல்லது போத்தலிலோ பொதி செய்ய முன்பு அது பலவிதமான வெப்ப நிலை மாற்றங்களுக்கும் உலர்த்துதல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றன. இதன்போது அதன் இயற்கையான மூலக்கூறுகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் இவை பழுது படாமல் இருப்பதற்காக இவற்றிற்குப் பல்வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இவை ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. எனவே இயற்கை அன்னையான உடன் உணவுகளை உண்பதில் ஆர்வத்தை வளர்த்து ஆரோக்கியம் பெறுவோம்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். [illegible] இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org